தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



● மார்கழி - 2024

# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

மார்கழி - 2024

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு
படைப்பாளர்களே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 10.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

யாவரும் நலமா?

காற்றுவெளி மார்கழி(2024)மின்னிதழ் உங்கள் பார்வைக்கு வருகிறது.

சிறப்பிதழ்களின் மீதான கவனம் இதழ் வருகையில் தாமதமாகியது.

மன்னிக்கவும்.

சிற்றிதழ் ஒன்று தொடர்ந்து வருவதென்பது அசாத்திய துணிச்சல்தான். காற்றுவெளியும் அப்படித்தான். சிலரின் கேலிகளும், கிண்டல்களுக்குமிடையில் பல வருடங்களாக தொய்வு அல்லது தேக்கமின்றி வருவது குறிப்பிடத்தக்கது.

காற்றுவெளி சிலவருடங்களுக்கு முன்பு ஈழத்து நூல்களின் கண்காட்சியினை நடத்தி வந்திருந்த சூழலில் சில அசௌகரியங்களால் நிறுத்தும்படியாயிற்று. ஓரளவு நம்மைச் சுதாகரித்துக்கொள்ளவும், சூழலை வெற்றிகொள்ளவும் காலதாமதம் ஏற்பட அதுவே நீண்டகாலமுமாயிற்று. மீளவும் ஈழத்து நூல் கண்காட்சியினை நடத்தலாமே எனும் எண்ணம் ஏற்பட்டுள்ளது. அதே போல காற்றுவெளி பதிப்பகம் ஊடாக ‘இலக்கியப்பூக்கள்’ எனும் கட்டுரைகளின் தொகுதி ஒன்றினையும் வெளியிட்டிருந்தோம். தொகுப்பின் மூன்றாம் பாகத்தையும் வெளியிட உத்தேசித்துள்ளோம்.விரைவில் அது பற்றிய தகவல்களை வெளியிடுவோம்.

மேலும்,

ஈழத்தில் நடைபெற்ற யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்தோம்.இப்போது உலகில் ஏற்பட்டுள்ள அசாரண சூழல் நமக்குள் அச்ச உணர்வு எழத்தொடங்கியிருப்பது மறுக்கமுடியாதது.

உலகில் நோய்த் தொற்று,யுத்த அச்சம், காலநிலை மாற்றங்கள் ஏற்படுத்தும் அச்சம் எல்லாம் நீங்கி மக்கள் சுபீட்சமாய் வாழவும்,போரடும் இனக்குழுமங்கள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுதந்திரம் பெற்றும் வாழ இறைவனை காற்றுவெளியும் பிரார்த்திக்கிறது.

அடுத்த இதழில் சந்திபோம்.

நட்புடன்,
**சோபா**
*01/12/2024*

# படைப்பாளர்கள்

## கவிதைகள்

1. ரோஷான் ஏ.ஜிப்ரி_
2. மு. பிரபு. வேலூர்
3. கா. ந. கல்யாணசுந்தரம்
4. DR.ஜலீலா முஸம்மில்
5. பா.சிவகுமார்
6. சே கார்கவி கார்த்திக்
7. ஜமீல்
8. மல்லை.மு. இராமநாதன்
9. இரா.வெங்கடேஸ் குமார்
10. நற்பவி மணிபாலா, திருப்பூர்
11. நேசன் மகதி
12. ரகுநாத் வ
13. இளையவன் சிவா
14. அ.கிரேஸி மேரி
15. ச. இராஜ்குமார்
16. கி.கவியரசன்
17. S.சுடர்நிலா
18. பிரபு கு(கனடா)

## சிறுகதைகள்


1. கமலினி கதிர்(சுவீஸ்)
2. கவிஜி
3. இத்ரீஸ் யாக்கூப்
4. சுந்தரிமணியன், புதூர்
5. ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்

## கட்டுரைகள்

1. தங்கராஜா.சிவபாலு(கனடா)
2. நௌஷாத் கான்.லி (நூல் அறிமுகம்)
3. கவிஞர் ராணி கணேஷ் (நியூசிலாந்து) (நூல் அறிமுகம்)

## ரோஷான் ஏ.ஜிப்ரி

# மிட்டாய் மாமா



மிக சுவையான குரலில் ஒரு சினிமாப் பாடல் அவர் நாவிலிருந்து
‘உழைத்து வாழ வேண்டும்
பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே..., நம்பிக்கை விதைத்து நழுவி விழும்
‘தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு
எங்கள் திருநபி இடம்போய் சொல்லு.. சலாம் சொல்லு
நாகூர் ஹனீபாவும்
இடைக்கிடை சலாம்கூறி விடைபெறுவார்
பம்பாய்யையும்,மிட்டாயையும் கூட்டிக்கொண்டு
தூக்கத்திலிருக்கும்
குழந்தைகளை பிராண்டியும் கிள்ளியும் எழுப்பி விட்டபடி
தனது குடும்பத்தின்
இரவுகளை வெளிச்சமாக்க
பகலை தன்னுடன்
அழைத்துக் கொண்டு அலைகிறவர்
எனக்கு மிகவும் பிடித்த
மிட்டாய் மாமா
வெயில் காலத்தில் வேண்டுகிறீகளோ இல்லையோ
வேண்ட வேண்டும் என்று
ஊருக்குள்தான்
வேண்டுமென்று உலவுவார்
சில...நேரம்
வசதியற்ற குழந்தைகளை அழைத்து “வாங்க மக்கள்” என்று
சும்மாவும் சுற்றிக் கொடுப்பார்
அதில் ஒரு ஆத்ம திருப்தி அவருக்கு
எண்ணை வரும் குப்பிகள்
வெடிப்பு,உடைவு விசாரிப்பார்
பழைய இரும்புகள் என்றால்
துரு துலக்கி இடை பார்த்து இனிப்பூட்டுவார்
மிட்டாய் மாமா பேசினாலும் வாயிலிருந்து
சுவைதான் நகைச் சுவைதான் வரும்
ஒரு மணியளவில் என்றில்லை
எல்லா நிமிடத்திலும்
ஒரு மணியுடன் பேசிக்கொள்ளும்
மாமாவையும் நினைவுகளையும்
என்னிடம் விட்டு விட்டு
மாமாவையும்
மிட்டாய் பெட்டியையும்
பிடித்துப் போனதால்
ஒரு “கோர்ன்” அடிக்காமலேயே
கண்களை இறுக மூடி
அள்ளிக்கொண்டு போனது
அந்த மண் லாறி!

# இதுவும் கடந்து போகும்

## கமலினி கதிர் (சுவீஸ்)

**கோ**டைகாலம் சுவிசில் வெப்பம் அதிகமாகவேயிருந்தது. சூரியன் வெகு அருகிலிருப்பதுபோல் வெப்பத்தை அள்ளிக் கொட்டிக்கொண்டிருந்தான். அனேகமானவர்கள் ஏதோவொரு ஊருக்கு விடுமுறையைக் கழிப்பத ற்குச் சென்று கொண்டிருந்தார்கள். விமான நிலையமும்,தொடருந்து நிலையமும் கூட்டத்தால் வழிந்து கொண்டிருந்தது. ஐரோப்பாவிற்குள் பயணம் செல்லும் தனியார் பேருந்துகள் சூரிச் சீல்குவெயில் நிரம்பி யபடியிருந்தன. மக்கள் பயணப்பைகளுடன் மகிழ்ச்சி



ததும்பும் வதனங் களுடன் காணப்பட்டார்கள்.தினமும் தமிழர்கள் பலர் இலங்கைக்குச் செல்வதற்காய் சூரிச் விமானநிலையத்திற்கு விரைந்த வண்ணமிருந்தார்கள். வெளியே சென்று திரும்பிய ஆதவ் வெறுப்புடன் வீட்டுக்குள் நுழைந்தான். 'சூரிச்சே வெறுமையாகுது.எங்களுக்குத்தான் போக வழி யில்லை.வீட்டுக்குள்ளேயே அடைபட்டு இருக்க வேண்டியதுதான். Nஃபரியன் (விடுமுறை) வந்தாலும் எங்களாலை ஓரிடமும் போகமுடியாது ஏன்தான் உங்களுக்குப் பிள்ளையாய் பிறந்தேனோ' பொரிந்து தள்ளிய படி இருந்தான்.பலர் குடும்பமாக சுற்றுலா செல்லும்போது தாங்கள் மட்டும் வீட்டிற்குள்ளேயே இருப்பது பன்னிரண்டு வயதான ஆதவ்விற்கு எரிச்சலையே கொடுத்தது.ஆதவ் மனதிலிருப்பதைக் கொட்டியபோது மௌனமாக அதையே மனதிற்குள் சொல்லிபடியிருந்தாள் ஆதிரா. ஆதிரா மென்மையான உள்ளம் கொண்ட வலிமை குறைந்த பதினா ன்கு வயதுச் சிறுமி.

ஓய்வு நாட்களில் சுவிசில் குடும்பமாகவோ அல்லது தாயும் பிள்ளைக ளுமாகவோ,அல்லது தந்தையும் பிள்ளைகளுமாகவோ சைக்கிளில் போவது வழக்கம். இரண்டு மூன்று வயதுக் குழந்தைகள் கூட சின்ன சைக்கிளிலோ அல்லது துரட்டியிலோ போவதைப் பார்க்கும்போது ஆதிராவுக்கு வெறுப்பும்,அழுகையும் முட்டிக்கொண்டு வரும்.ஓய்வு நாட்களென்பது குடும்ப உறுப்பினர்களுக்கானவை என்பது சுவிசில் எழுதப்படாத சட்டம்.அப்படிப் போபவர்களைப் பார்க்கும்போது பொறா மையும்,ஏக்கமும் வருவதை தவிர்க்க முடியாமல் தவித்தாள் ஆதிரா. அம்மா,அப்பா என இருவரினதும் அன்புத்தூறலில் நனைந்து எழும்ப ஆதிரா மிகவும் ஆசைப்பட்டாள். சிறுவயதில் அந்த அன்புத்தூறலை அனுபவித்ததை நினைத்து நினைத்து ஏங்கினாள்.இப்போதெல்லாம் 'எங்களுக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது?ஏன் அப்பா இப்படி மாறினார்?அம்மாவை மட்டுமல்லாமல் எங்களையும் ஏன் வெறுக்கிறார்? நாங்க அவருடைய பிள்ளைகளில்லையா?எங்களைப் பாதுகாக்க வேண்டியது அவர் கடமையில்லையா?நாங்க ஏதும் பிழை விட்டாலும் அதை திருத்த வேண்டியவர் தொட்டதற்கெல்லாம் எங்களுடன் கத்தி எங்களைக் காயப்படுத்தி ஏன் இப்படியெல்லாம் மாறினார்?தன்னிலை பிழையென்று தெரிந்தாலும் ஒரு சொறி கூட சொல்ல மாட்டார். அம்மா சொல்லுவா 'ஒரு சொறி சொன்னால் சொன்னது இல்லையென்று ஆயி டுமா' என்று.அது சரியென்றாலும் அதை உணர்ந்தால் திருப்பிச்செய்;ய மாட்டினமெல்லோ.எங்களில் அவருக்கு அன்பேயில்லை.அன்பு இருந்திரு ந்தால் எங்களோடை கத்துவாரா?என்னுடைய ஃப்ரணட்;சுகளுக்கு எல்லாம் நல்ல அப்பா கிடைச்சிருக்கும் போது எங்களுக்கு மட்டும் ஏன் இப்படியொரு அப்பா?' என்பது போன்ற சிந்தனைகள் அவளிடம் வர ஆரம்பித்தன.மற்ற அப்பாக்களுடன் தங்கள் அப்பாவை பிள்ளை கள் ஒப்பிடும்போது மீராவின் கோபம் எல்லை மீறுகிறது.எல்லாவற்று க்கும் தானே காரணமோ என்று தன்மேல் தன்னிரக்கமோ,வெறுப்போ ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் தவித்தாள்.ஒரு குடும்பத்தைக் கொண்டு நடத்த தனக்குத்தான் தெரியேலையோ என்ற எண்ணம் அவள் ஆழ்மனதில் குடிகொண்டது.

அப்பாவிடம் ஏதாவது ஆடைக்கு ஆசைப்பட்டுக் கேட்டால்'நீங்க என்ன பெரிய ராஜகுமாரியா?விதம் விதமாய் உடுப்பு தேவையா?'அந்த வார்த் தை அப்படியே அவளை தாழ்வுச்சி;க்கலுக்குள் கொண்டு போய் விடும். ஆதிராவுக்காக தாய் வாதாடுவது சண்டையில் கொண்டுபோய் விட்டு விடும்.ஆதிராவின் நண்பி சொல்லுவாள் 'என்ரை அப்பாவுக்கு நான் குட்டித் தேவதை.என்னைக் குட்டியம்மா என்றுதான் கூப்பிடுவார்' என்று சொல்லும்போது அப்படித் தன் அப்பாவும் கூப்பிட மாட்டாரா என்று ஆதிராக்கு வரும் ஏக்கம் ஒன்றும் தவறானதில்லையே.ஆதிரா மட்டும் அல்ல ஆதவ்வும் தகப்பனின் அன்பை எதிர்பார்த்து முடிவில் எதற்கெ டுத்தாலும் முரண்பட்டு விவாதிக்கவே செய்வான். ஆனாலும் அவனை மட்டந்தட்ட முடியாத தகப்பன் அவனது தேவைகளுக்கு முக்கியம் கொடுக்காது விலகிப் போகும்போது ஆதவ் தாயுடன் கோபப்பட்டுக் கத்துவான்.'பிள்ளைகளின் தேவைகளைச் செய்ய முடியாட்டி ஏன் பெத் தனீங்க? தகப்பனிடம் ஏற்படும் கோபம் திசைமாறி தாயையே தாக்கும். தந்தையினதும்,மகனதும் கோப வார்த்தைகளை மென்று விழுங்கப் பழகிக் கொண்டவள் சிலவேளைகளில் தன் கோபத்தை ஆதிராவிடம் காட்டும் விதமாக மனம் புண்படும்படி பேசுவதைத் தவிர்க்க முடியாமல் தவித்தாள். யாரிடமோ ஏற்படுகின்ற கோபத்தை யாரிடமோ காட்டிக் கொண்டிருப்பது புரிந்தாலும் கணவன்மேல் காட்டி எந்தப்பயனுமில்லை என்பதனால் தன் கோபத்தைக் கொட்டக்கூடிய இடத்தில் ஆதிரா மட்டுமே இருப்பதாக நினைத்துக் கொள்வாள்.

வேலையிலிருந்தாலும்,நடந்து போய்க் கொண்டிருந்தாலும் வண்டு குடைவது போல் பற்பல எண்ணங்கள் மீராவின் மனத்தைக் குடைந்து கொண்டிருந்தன. ட்ராமில் போகும்போது ட்ராம் கடந்து கொண்டுபோகும் கட்டிடங்கள் எதுவுமே மனதைத் தொடாமல் வழுக்கிச் செல்வதே வழ க்கமாயிற்று.என்னைப் பார் என் அழகைப்பாரென்று பூத்துக் குலுங்கும் வண்ணவண்ணப் பூக்களெல்லாம் கண்ணுக்குள் சிறைப்படாமல் வெறு மனே கடந்த வண்ணமிருந்தன.தாயகத்தில் வங்கியில் வேலை பார்த்த மீரா இந்த நாட்டுக்கு வந்து உணவகத்தில் சாப்பிட்ட எச்சில் கோப் பைகளையும்,பெரிய பெரிய பாத்திரங்களையும் இயந்திரத்தில் போட்டுக் கழுவிக் கொண்டு பிள்ளைகளின் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் ஆற்றாமையால் வெறுப்பு மட்டுமே அவளிடம் மிஞ்சியது. வந்த புதிதில் மொழி தெரியாததால் துப்பரவுத் தொழிலே இலகுவாக எடுக்க முடிந்தது.அதைச் செய்யும் போது தொழில் அடிப்ப டையில் சாதி பிரித்து

வைத்திருந்த தாயகத்தைப் பற்றி நினைப்பாள். இங்கு மலசலகூடங்களைத் துப்பரவு செய்யும் போது இப்ப எங்கடை சாதி எங்கை போனது என்ற நினைவு வராமல் போகாது.இந்திய அமைதிப்படையினர் தாயகத்தில் தமிழர் பகுதியை ஆக்கிரமித்த கால ப்பகுதி அவளால் மறக்க முடியாதவை.'அது மட்டும் நடக்காதிருந்தால் நான் இங்கு வந்திருக்கவே மாட்டன்.அம்மாவோடு இருந்திருப்பன்;' ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது இதை நினைக்காமல் இருக்கமாட்டாள்.

1987ம் ஆண்டு நடுப்பகுதியில் இந்திய அமைதிப்படை தமிழர்களைக் காக்க வந்த படையென நினைத்த காலம். இலங்கை இராணுவம் தமிழ் மக்களுக்காக நீட்டிய துப்பாக்கிகள் கைமாறி அமைதிப்படையினரிடம் சென்ற போதுதான் அம்மாவுடன் தனிய வாழ்ந்த மீரா நிர்க்கதியாக் கப்பட்டாள்.பூமாலை நடவடிக்கையென்று விமானத்திலிருந்து உணவுப் பொட்டலங்கள் போட்ட போது இனி நாங்க பாதுகாப்பாக வாழலாம், எங்களை யாரும் அழிக்க முடியாதென்று ஏற்பட்ட நிம்மதி உணர்வு பலநாள் நீடிக்கவில்லை.உண்ணாவிரதமிருந்த திலீபன் இறந்தபோது தான் எமது நியாயங்கள் மறுக்கப்பட்டு ஏமாற்றப்பட்டது மக்களுக்கு புரிந்தது.அயல்நாட்டின் நம்பிக்கைத் துரோகத்தால் நான்கு மாதங்கள் குண்டுச்சத்தங்களும் இறப்பின் ஓலங்களும் கேட்காமலிருந்த வடபகுதி மீண்டும் 125000பேர் கொண்ட இந்திய அமைதிப்படையால் அமைதி பறிக்கப்பட்டு பலர் உயிரிழந்து கொண்டி ருந்தார்கள்.பார்த்த இடம் எல்லாம் புகை மண்டலமும் மக்களின் அழுகுரல்களும் அழிவுகளும் நடந்தேற மானிப்பாயில் அவள் வீட்டில் மீராவின் அம்மா நெஞ்சு வலியால் துடித்தபோது வைத்தியம் செய்ய முடியாத நிலையில் மீரா தவித்தாள்.அடுக்கடுக்காய் ஏவப்பட்ட ஈஷெல்கள் காதைச் செவிடாக்கும் சத்தத்துடனும் இதயத்தை நிறுத்தும் அதிர்வுடனும் வந்து விழுந்து கொண்டிருந்தன. கற்பகதருவான பனைமரங்களும்,தென்னை மரங்களும் குண்டுவீச்சில் எரியத் தொடங்கின. விமானங்களிலிருந்து கொட்டப்பட்ட இரசாயனக் குண்டுகளும்,பீரங்கிகளின் பயங்கர அதிர்வுச் சத்தங்களும் மீராவின் தாயைப் பாதித்து நெஞ்சு வலியால் துடிதுடித்து மரணத்தை தழுவினார். நெஞ்சு வலித்தபோதும் 'நான் தப்பமாட்டன் பிள்ளை. அவங் கள் வந்து உன்னை நாசம் பண்றதுக்குள் எங்காவது ஓடு மீரா'என்று கூறியவண்ணமே உயிரை விட்டார். அவர்கள் ஒழுங்கையில் காவல் என்ற பெயரில் நின்ற இராணுவத்தினர் மீராவை வெளியே வந்து வைத்தியரைக் கூட்டிவரக் கூட அனுமதியளிக்கவில்லை.மனிதாபிமானத் தைக் கழற்றி வைத்துவிட்டு வெறும் கூலிப்படையினராகவே நின்றார் கள். தமிழர்களை காக்க வந்தவர்கள் என்ற நிலை தடம் மாறி பழி வாங்கும் நோக்கிலேயே செயற்பட்டு ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று குவித்தவர்களுக்கு மீராவின் அம்மாவின் இழப்பு ஒரு துளியே ஆகும்.

அம்மாவின் மூச்சு நின்றதுபோல் தெரிய பக்கத்து வீட்டில் வாழும் மாமியைக் கூப்பிடும் வண்ணம்'மாமி'என்று அலறினாள்.அவளின் அலறல் சத்தம் கேட்ட அடுத்த நிமிடமே மாமாவும்,மாமியும் ஓடிவர 'ஒருவர்தான் போகலாம்'என்று படையினர் தடுத்ததில் மாமி மட்டுமே உள்ளே வந்து இருவரும் கட்டியணைத்து அழுதார்கள். கொடுரமனம் படைத்த அந்த இராணுவத்தினர் நிலமை அறிந்து'ஒரு மணித்தியால த்தில் உடலை எரிச்சிடவேணும்'கட்டளை பிறப்பித்தார்கள்.மாமி போய் மாமாவை மட்டும் தகனம் செய்வதற்கு உதவ அனுமதித்த அவர்க ளால் எப்படி உடலைத் தகனம் செய்வதென்று சொல்ல முடியவி ல்லை. தாய் இறந்த சோகத்தை விட எப்படித் தகனம் செய்வதென்று விளங்காமல் தவித்தது இப்போது நினைத்தாலும் வலிக்கும்.வெளியே அகோர குண்டுத்தாக்குதல் நடை பெற்றுக் கொண்டிருந்தபோது மீராவும்,மாமாவும் இறந்த உடலைத் தூக்க முடியாமல் இழுத்துக் கொண்டு பின்னாலுள்ள கொட்டிலுக்குச் சென்று இருந்த கொஞ்சம் விறகுடன் கதிரைகள்,பலகைகளைப் போட்டு இருந்த மண்ணெண் ணெயை ஊற்றி எரித்தார்கள். எரிந்தும் எரியாமலும் அந்த உடல் பிணவாசனையைக் காற்றில் பரவ விட்டது.மாமாவைப் போகும் படி கூறி அவளைத் தனிமைப்படுத்துவதில் முனைந்த அவர்கள் நோக் கத்தைத் தெரிந்துகொண்ட மாமா அவளையும் தங்கள் வீட்டிற்கே அழைத்து வந்துவிட்டார்.பிணந்தின்னும் கழுகுகள்போல் அந்த நேரத்தி லும் பெண்களை நுகரத் துடித்த காமுகர்களாய் அவர்களை நினைத் தால் இப்போதும் மீராவின் நெஞ்சு பதறும்.தாயை நிர்க்கதியாக விட்டு வந்ததுபோல் துடிதுடித்தபோதும் மீராவால் எதுவுமே செய்ய முடியவி ல்லை.அதன் பின் அவளால் தன் தாய்க்கே சொந்தமான அவளின் சுயமான வாசனையை உணர முடியாமல் அந்தப் பிண வாசனையே மனத் தடாகத்தில் நிலைத்து நின்று விட்டது.தொடர்ந்தும் யாழில் ஏற் பட்ட அசாதாரண சூழலினால் மாமா அவசரம் அவசரமாக அவளுக்கு திருமணம் செய்து அவளைப் பாதுகாப்புடன் சுவிசுக்கு அனுப்பி விட் டார்.சுவிசுக்கு வந்த பின்பும் தாயின் கடைசி நினைவுகளிலிருந்து அவளால் மீளவே முடியவில்லை.தானும் மாமாவுமாக அரைகுறையாக எரித்த தாயின் உடல் பற்றிய சிந்தனையே அவள் நெஞ்சில் நிலை யாக நின்றுவிட்டது.அது அவளது இல்லற வாழ்க்கையையும் பாதிக் கவே செய்தது.பல்வேறுபட்ட சோகங்களைச் சுமந்தவாறுதான் நாடு விட்டு நாடு சென்ற அவளைப் புரிந்து கொண்ட கணவன் கிடைக்கா தது அவளின் துரதிஷ்டமே.

கொக்குவிலில் மீராவின் நண்பியின் குடும்பம் அவர்கள் அருகிலுள்ள கோயிலில் தஞ்சமடைந்திருந்தபோது நண்பியின் தந்தை சுடப்பட்டு இறந்ததாக அறிந்து அவர்கள் சோகத்தில் கூட பங்கு கொள்ள முடி யாது வேதனைப்பட்டாள் மீரா. அவரது உடல் கூட கிடைக்காததால் அவர்கள் குடும்பம் அவர் இறந்ததை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவித்தார்கள்.சுட்டுக்

கொன்றதை சிலர் பார்த்ததாகச் சொன்னாலும் அவர்கள் நம்ப சிரமப்பட்டார்கள்.உடலைப் பார்த்தால் நம்புவதுடன் கதறி அழுதால் என்றாலும் சோகம் குறையலாமென்று அவர்கள் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள்.ஆனைக்கோட்டையில் பங்கருக்கு ள்ளேயே மீராவின் நண்பியும் தாயும் சுட்டுக்கொல்லப்பட்டது என்று மீராவால் தாங்கவே முடியாத நிகழ்வுகளே அந்தநாட்களில் நடந்தன. அந்த நண்பி திருமணம் நிச்சயிக்கப்பட்டு அமெரிக்கா போக இருந்த வளது வாழ்க்கை பங்கருக்குள்ளேயே முடிவுக்கு வந்தது.இன்னுமொரு நண்பியும்,அவள் தங்கையும் துரத்தித் துரத்தி கற்பழிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டபோது உயிரிழந்தவள் போனாள்.நண்பியின் தந்தை தான் பிள்ளைகளின் பின்னால் ஓடிப்போயும் தன்னால் தடுத்து நிறுத்தவே முடியவில்லையென்று தலையிலடித்துக்கொண்டு கதறியபடி கூறிய போது நெஞ்சு வெடித்தது போன்ற வேதனையை அனுபவித்தாள்.

ஒரு போர்ச்சூழலில் இருந்து துன்பங்களைச் சுமந்து கொண்டு வந்த தன் சோகங்களைப் புரிந்து கொண்டு அரவணைத்துப் போகாத தன் கணவன் மேல் அவளுக்கு காதல் வரவில்லைப்போலும். அதனாலேயே தன்னால் கணவனிடமோ,பெற்ற பிள்ளைகளிடமோ பாசம் வைக்க முடி யாமல் போய்விட்டதோ என்று அடிக்கடி எண்ணிக் கொள்வாள்.ஒரு கணவனும் மனைவியும் ஒன்றாகப் பயணிப்பதால் எண்ணங்கள் ஒன்றா யிருக்க வேண்டுமென்ற எந்த அவசியமும் இல்லையென்றாலும் கரு த்து முரண்பாடு அவர்களுக்குள் இடைவெளியையே உண்டாக்கியது. ஒரு போர்ச்சூழலினால் பாதிக்கப்பட்டு தன்னந் தனியாக தாயின் மரண த்தை எதிர்கொண்ட ஒரு சின்னஞ்சிறிய பெண்ணை ஒரு கணவன் அர வணைத்து அளவுக்கதிகமான அன்பை வழங்கியிருந்தால் அவளாலும் ஒரு நல்ல மனைவியாக,நல்ல தாயாக இருந்திருக்க முடியுமோ என்னவோ?

அன்புக்குப் பஞ்சம் ஏற்பட்ட வாழ்க்கைச் சூழலில் சிக்கி அன்புக்காக ஏங்கும் பல குழந்தைகளில் ஆதிரா,ஆதவ்வும் இருந்தார்கள்.கணவனிட மிருந்து அன்பு கிடைக்காத மீரா அதற்காக ஏங்கி பிள்ளைகளிடம் அன்பைக் கொட்டத் தவறிவிட்டாள்.ஆதிரா செய்வதெல்லாம் தாய் மீராவிற்கு தப்பாகவே தெரிந்தது.அவளது வயதிற்கு போனில் கூடிய நேரம் இருப்பதும் நண்பிகளுடன் உரையாடுவதும் மீராவிற்கு எரிச்ச லை ஊட்டியது.அம்மாவும்,அப்பாவும் பிரச்சனைப்படும் போதெல்லாம் ஆதிரா போனைத் தஞ்சமடைந்து விடுவாள்.அது மீராவைக் கோபப்பட வைக்கும்.கணவன் அவற்றைக் கண்டு கொள்ளாமல் இருப்பது மீராவை இன்னும் கோபத்தை உண்டாக்கும். கணவனுடன் ஏற்படும் கருத்து வேறுபாட்டால் பிள்ளைகளின் எல்லாச் செயல்களுமே அவளுக்கு மகிழ்ச்சியைத்தராமல் எதிர்அதிர்வுகளையே தந்தன.கணவன் தன் பெற்றோருக்காக அடிக்கடி கிறெடிட்கார்டில் பணம் எடுத்து அனுப்புவதும் அவற்றைக் கட்டுவதற்காக மீரா மட்டுமே தன் செலவுகளை ஒறுத்துக் கட்ட வேண்டிய நிலைமை அடிக்கடி வருவதும் மீராவால் சகித்துக் கொண்டு போக முடியவில்லை.பெற்றோருக்கு கொடுக்கும் முக்கியத்துவம் பிள்ளைகளுக்கு கொடுக்காதபோது மீராவின் கோபம் எல்லை மீறிவிடும்.சொல்லியும் சட்டைசெய்யாத கணவன் மேல் ஏற்படும் கோபம் ஆதிராவின் மேலேயே திசை திருப்பப்படும்.ஆதிரா திருப்பி பேசத் தெரியாமல் தலையணையுடன் தன் கண்ணீரைப் பகிர்ந்து கொள்வது அவளுக்குப் பழக்கமாகி தலையணை அவளது நெருங்கிய தோழியாக மாறியது.சொல்லவும் முடியாமல் சொல்லவும் பிடிக்காமல் மனப்பெட்டகத்துள் போட்டுப் பூட்டிக் கொள்வதுடன், தனக்குத்தானே சொல்லிக் கொள்ளுவாள் ‘இந்தத் தலையணைக்கும் என் அறைச் சுவருக்கும் வாய் இருந்தால் என் சோகங்களைச்சொல்லி அழும்’ என்று.தாய் தந்தையரின் கடும் வார்த்தைகள் அவள் நெஞ்சில் விடாப் பிடியாக உயிர் வாழக் கற்றுக் கொண்டன.அவளும் அவற்றை திரும்பத் திரும்ப நினைத்து உயிரூட்டிக்கொண்டிருந்தாள். ‘பொறுப்பில் லாமல் இருக்கிறாய்,எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கவேண்டியிருக்கு. உன்னுடைய வேலைகளையே உன்னால் செய்ய முடியுதில்லை. நான் களைத்து வரும்போது சில வேலைகளைச் செய்து வைத்திருக்க லாமே.உன்னுடைய வயதொத்த மற்றப் பிள்ளைகளைப் பார்.உன்னு டைய வயதில் நான் எப்படியிருந்தன்.’என்று தாய் குற்றஞ்சாட்டிக் கொண்டேயிருந்தாள்.அதை எப்படி மாற்றுவது என்று அந்த பதின்ம வயதுக் குழந்தைக்கு புரியவேயில்லை. தான் ஒரு கெட்டித்தனமும் இல்லாத ஒரு மொக்குப்பிள்ளையென்று தன்னைப்பற்றி தாழ்வாக மட்டுமே நினைக்க அவளால் முடிந்தது.

பள்ளியிலும் அவளால் பாடத்தில் கவனம் செலுத்த முடிவதில்லை. எப்போதும் தனித்தே இருப்பதும் சக மாணவர்களுடனும் கலகலப்பாக இருக்க முடியாமலும் இருப்பதாக ஆசிரியர்கள் அடிக்கடி முறைப்பாடு செய்வார்கள். படிப்பிலும் மிகவும் பின்தங்கியே இருப்பதாக அவளால் உணர முடிந்தது.‘நான் ஒன்றுக்கும் பிரயோசனமில்லை. என்னால் எது வுமே செய்ய முடியாது.நான் பிறந்திருக்கவே கூடாது.நான் இதுக்குள் ளாலை வெளிய வரமாட்டன். எல்லாரிட்டையும் பேச்சு வாங்கிக்கொண்டு என்ன வாழப்போறன்.நான் நல்லாய் படிக்காததாலை அப்பா அம்மாக் கும் என்னைப் பிடிக்குதில்லை.நான் செத்துப் போனாலும் ஒருத்தரும் கவலைப்பட மாட்டினம்’இப்படித்தான் அவளால் நினைக்க முடிந்தது. அவள் மற்றவர்களுடன் பழகாமல் ஒதுங்கிப் போய் எப்போதும் தனி மையில் இருப்பதால் ஒன்றாகப் படிப்பவர்கள் கூட அவளைத் தங்க ளுடன் சேர்க்காமல் கேலி செய்வதும் மறைமுகமாகச் சிரிப்பதும் அவளைப் பெரிதும் பாதித்தது.பாடசாலை செல்ல விருப்பமில்லாதவ ளாகவே இருந்தாள். எதிலும் ஒரு அக்கறையின்மையும்,சோம்பேறித் தனமும்

அவளிடம் குடிபுகுந்தன.அந்த வீட்டிலிருந்த நால்வருமே சிறு சிறு தீவுகள் போல வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டுவதோ,பேசுவதோ இல்லாமல் நாட்கள் ஊர்ந்து கொண்டி ருந்தன.எந்நேரமும் குறைசொல்லும் பெற்றோரை பார்ப்பதைத் தவிர் க்குமுகமாக அறைக்குள்ளேயே அடைந்திருக்கப் பழகினாள் ஆதிரா. பெற்றோரின் அரவணைப்பு இல்லாமையால் மனதளவில் விலகியே இருந்தாள்.அவர்களுக்கிடையே ஏற்பட்ட இடைவெளி ஆதிராவை திசைமாறி போக வைத்திடுமோ என்று மீரா பயந்தாள்.

ஆமை தன் கூட்டுக்குள் ஒடுங்கி இருப்பதுபோல் அறைக்குள் முடங்கி பேச்சுக் குறைந்து சதா விரக்தியுடன் இருக்கும் ஆதிராவை இப்போதெ ல்லாம் பார்க்கும் போது மீராவிற்கு குற்ற உணர்ச்சியால் தவிப்பு ஏற்ப டுவதைத் தவிர்க்க முடியாமலிருக்கும்.தங்களால்தான் ஆதிரா இப்படி ஆகிக்கொண்டு வருகிறாள் என்ற உண்மை மீராவிற்கு விளங்கியது. ஒருநாள் வேலையிடத்தில் தனது நண்பியுடன் மகள் பற்றிப் பேசிய போது அவள் பயமுறுத்தினாள்.'இப்படியே இருந்தால் படிக்க முடியா மல் போவதுடன் அவளது திருமண வாழ்வும் பாதிக்கப்படக்கூடும். இந்த வயதில் போனோடு பொழுது போக்குவது பெரிய விடயமா என்ன? இதைப் பெரிசுபடுத்துகிறாயே. உன்னுடைய இருபத்திநாலு வயதில் நடந்ததே உன்னால் ஜPரணித்து ஏற்றுக் கொள்ளமுடியவில்லையென் றால் காற்றடித்தால் சாயும் சிறு செடிகள் போன்ற சிறுவர்கள் என்ன செய்வார்கள்?தங்கள் உணர்வுகளையோ,தாங்கள் நினைப்பவற்றையோ வார்த்தைகளில் சொல்லத் தெரியாமல் தடுமாறுவார்கள்.உலகில் நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டு உள வடுக்களுடன் வாழுவதாக கணிப்பீடுகள் சொல்கின்றன.இங்கு எவ்வளவோ வசதிகள் இருக்கு. அதை பயன்படுத்தி அவளை ஒருக்கா கௌன்சிலிங் அனுப்பினால் என்ன?அதற்குள்ளால் அவளை மீட்டெடுப் பது உன்ரை கடமையெல்லா? உன்னுடைய டொக்டருடன் கதைத்து அவளைக் கூட்டிப்போ' வீடு வந்த பின்பும் அந்த வார்த்தைகள் அவ ளைச் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்தன. பள்ளியால் வந்து அறையி னுள் அடைபட்டுக் கொண்டிருந்த மகளை அழைத்த வண்ணம் அறை யினுள் சென்றாள் மீரா.போனிலிருந்த ஆதிரா தாய் பேசப்போகிறாள் எனத் திடுக்கிட்டு போனை மூடி விட்டு நிமிர்ந்தாள்.பக்கத்தில் உட்கா ர்ந்த மீரா மகளின் கைகளைத் தன் கைக்குள் ஆதரவுடன் வைத்துக் கொண்டு' பயப்படாதீங்கம்மா.இண்டைக்கு பள்ளி எப்படியிருந்தது?படிக்க முடியுதாம்மா.முடியாத பாடத்திற்கு வேணுமென்றால் ரியூசன் போங்கோ. என்னவென்றாலும் எனக்கு சொல்லுங்கம்மா' முன்பு எப்போதும் கேட்டி ராத அந்த அன்பு வார்த்தைகளில் உடைந்து போன ஆதிராவின் கரு விழிப்படலத்திலிருந்து சில துளிகள் கீழே விழுந்தன. அந்தக் கண்ணீ ரைத் துடைத்த வண்ணம்'ஆதிரா!இது உங்கடை எதிர்காலத்தை நிர் ணயிக்கிற வருடம்.நல்ல மார்க்ஸ் எடுத்து மேற்படிப்பைத் தொடர வேணும். அதுக்கு முதல் ஒரு கௌன்சிலிங் போவோமா?நாங்க இரண்டு பேரும் போவம்.என்னுடைய கவலைகளால் நான் உங்களைக் கவனிக் காமல் விட்டிட்டன்.என்னை மன்னிச்சிடுங்கம்மா.நீங்க நல்லகெட்டிக்காரி. பிள்ளையாலை எல்லாம் முடியும்.அப்பாவின் அன்பையும், ஆதரவையும் எதிர்பார்த்து நான் உங்களிடம் அன்பாயிருக்க மறந்திட்டன். உங்களு க்கும் எங்கள் இரண்டு பேரின் அன்பும் ஆதரவும் தேவையென்பதை நான் கவனிக்த் தவறீற்றன்.நாங்கள் இப்பிடியே இருந்தால் தம்பியும் கெட்டுப் போயிடுவான். இப்பவே எதிர்த்து எதிர்த்துப் பேசுறான்.இந்த நேரத்தை தவறவிட்டால் அவன் எங்களை விட்டு தூரத்திற்குப் போய் விடுவான்.எனக்கு இனி உங்கடை எதிர் காலம் மட்டுந்தான் முக்கியம்;. ஒன்றுக்கும் யோசிக்காதேங்கோ அம்மா இருக்கிறன் எல்லாத்துக்கும்;' தாய் சொல்லி முடிக்கவும் சட்டென்று முகம் மாறிய ஆதிரா தயங்கித் தயங்கி தாயைக் கட்டிப்பிடித்து'டங்கே(நன்றி)அம்மா என்றாள்.கட்டிய ணைத்த மீரா மகளின் நெற்றியில் வாஞ்சையுடன் முத்தமிட்டாள். இருவருக்குமிடையே போடப்பட்டிருந்த கண்ணுக்குத் தெரியாத சுவர் உடைந்து சுக்குச் சுக்கலாக நொருங்கி விழுந்தது. தாயின் ஒரு அன்பு முத்தம் இருவரையும் இணைத்தது. 'ஒரு சின்ன முத்தத்துக்கு இவ்வளவு சக்தி உண்டா'பிரமித்துப் போனாள் மீரா.

'அம்மா இனி என்னை நெடுகப் பேசமாட்டீங்களா? எனக்கு உங்கடையும், அப்பாவின்ரையும் குரலைக் கேட்டாலே நெஞ்சிடிக்குதம்மா. நீங்க என்றாலும் என்னோடு அன்பாய் பேசினால் போதும்' ஆதிரா உதடுகள் துடிக்க பேசியபோது உடைந்துவிட்டாள் மீரா. 'இல்லையம்மா. நான் இனி உங்களோடை கடுமையாய் பேசமாட்டன். தனிய அறைக்குள் போய் இருக்காதேங்கோ. என்ன என்றாலும் என்னட்டைச் சொல்லுங்கோ. அப்பா வும் மாறுவார்.அன்பாலை அவரை மாத்துவம். நான் சண்டை பிடிக்கிற தாலை ஒன்றும் ஆகப்போறதில்லை. மூன்றுபேரும் ஒன்றாய்ச் சேர்ந்து அவரை மாத்தலாம்.சிரிச்சு சந்தோஷமாயிருங்கோ.எல்லாமே கொஞ்சக் காலந்தான். எல்லாம் ஓடும் மேகங்கள்தான்.இதுவும் கடந்து போகும்'. மீரா முடிக்கவும்'கடந்து போகாட்டி?'ஆதிரா தயக்கத்துடன் கேட்கவும் 'நாங்க கடந்து போவம்'சிரித்தபடி கூறினாள் மீரா.பறவைகளைப் பாருங்கோ.அவை எல்லாம் சேர்ந்து பறக்கும்போது அவைக்கு கூட எனேர்ஜீ கிடைத்து உயர உயரப் பறக்கின்றன.நாங்களும் எது வந்தா லும் ஒருவர் கையை ஒருவர் பிடித்தவாறு நான்கு பேரும் சிரித்தபடி துவளாத மனதுடன் எதிர்கொண்டு உயர உயரப் பறப்பம்'. மீராவின் 'இதுவும் கடந்து போகும்'மந்திரச் சொல் இருவரையும் புடம் போட்டது.

Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# ஹைக்கூ கவிதைகள்

மழைக்கால மரம்
தூறல் சொட்டியபடி
மூக்குரசும் கிளிகள்

⊙

சில்லறைக்காய் யாசிக்கிறான்
தீர்ந்து போய்க் கிடக்கிறது
மனித நேயம்

⊙

வீசும் காற்று
கைநீட்டிக் கூப்பிடுகின்றதோ?
தென்னையின் கீற்று

⊙

அப்படியே அச்சொட்டாய்
தாயாக ஆகிவிடுகிறாள்
பொம்மையை அரவணைக்கும் சிறுமி

⊙

முளைக்கவில்லை
புதைத்த பின்னர்
மண்ணுக்குள் இறந்த பாட்டி

⊙

கிழிந்த ஆடை
ஒட்டி இருக்கிறது
உள்ளே வயிறு

⊙

யாவருக்கும் விளங்கும்
ஒரே மொழி
மழை பேசும் ஓசை

⊙

ஓயும் பட்டாம்பூச்சி
மகள் பிடித்ததும்
கைகளில் வானவில்

வானை எட்டும் தென்னை
அடிவேர்வரை
அரிக்கும் கருவண்டு

⊙

சிறு துயில்
பெருந்திருப்தி தருகிறது
அம்மா மடி

⊙


கிராமத்துப் பயணம்
குறுக்குவழியில் அடைந்தேன்
மீண்டும் பால்யப்பருவம்

⊙

ஒற்றையடிப்பாதை
வெதுவெதுப்பாக இருக்கிறது
மாட்டுவண்டிப் பயணம்

⊙

மேடைப் பேச்சாளர்
யாவரும் விரும்புவார்களா?
வரதட்சணை இன்றிய திருமணம்!




பா.சிவகுமார்

## நாணயம்

கடைகளில்
வாங்கிய பொருட்களுக்கு
பணம் தரும்போது
தவறுதலாக கணக்கிட்டு
கடைக்காரர்
மீதிப்பணத்தை
மிகையாகத்
திருப்பியளிக்கையில்
சாத்தான்
சட்டைப் பையில்

பா.சிவகுமார்

பணத்தையழுத்தி
தலைகுனிந்து
அவ்விடத்தை விட்டு
விரைவிலகலச் சொல்லும்
சாத்தானை புறந்தள்ளி
நாணயத்தைத் திருப்பித்
தருவதிலிருக்கிறது நாணயம்
சுண்டிய நாணயத்தின் இரு பக்கங்களில்
சாத்தானும் கடவுளும்
மனம் எந்த பக்கத்தில்
சாய்கிறதென்பது
தீர்மானிக்கிறது
நாம் யாரென்பதை



சே கார்கவி கார்த்திக்

## இருந்துவிட்டு போகலாம்

என்னதான்
செய்ய போகிறாய்
சும்மா இருந்துவிட்டு போகலாம்

நீண்ட காலம் வாழ வேண்டாம்
அந்த சுறாமீனை
கொன்றிடாத
தூண்டில் புழுவாய்
பசியாற்றி பிறகு
தவறி நீரில் விழுந்து கரையேறி
இருந்து விட்டு போகலாம்

ஒரு ராஜாவின் பயத்தினைப் பார்த்திடாத
வாளின் நுனியில்
பகவனின் குறுதியின் துளியினைப் போல
கொஞ்சம் இருந்து விட்டு போகலாம்

யாரும் பார்த்திடாத புத்தகத்தின்
முற்றும் பக்கத்தில்
யாரும் அறியாத கடைசி கவிதையாகி
வாழ்வின் முடிவை சொல்லி
இருந்து விட்டு போகலாம்

கடிகாரத்தின் பெருமுள்ளாய்
கைகாட்டிடும் குழந்தையின் ஆள்காட்டி விரலாய்
அசைபோடும் பசுவின் பசியாய்
அறியாத நாய்க்குட்டியின் வாலாய்
வகைபடுத்திய ஓர் வேதமாய்
வசைபாடியவரின் கடைசிவரி வசையாய்
வரிசையில் அவரவர் தேவைகளாய்
உண்மை என்பதன் உண்மையில்
உறுதியாக சொல்லிவிடலாம்
கொஞ்சம் இருந்து விட்டே
போகலாம்...

என்னதான் செய்ய போகிறாய்
கொஞ்சம் இருந்துவிட்டு
போகலாம்




ஜமீல்

# ஒளியென்பது இருளின் புதர்

பூட்டி விட்டுச் சென்ற
எனது வீட்டை திறந்து பார்க்கிறேன்

வீடு முழுவதும்
காக்கை கூட்டங்களென
தங்கி இருந்தது இருள்

அது வீட்டின் அறைகள்
ஒவ்வொன்றையும்
மறைத்து வைத்திருந்தது

மின்மினிகளும் கண் சிமிண்டா
அடர் இருளின் காட்டில்
முட்டி மோதி தடவிப் பார்க்கிறேன்

எங்கு அறைகளை
பதுக்கி வைத்திருக்கிறதென்று
உணர முடியவில்லை

முதலில் என்னை நான்
கண்டு கொள்ள வேண்டும்

உடன் சிறு ஒளியை
விரித்து விடுகிறேன்

பூனையை கண்ட எலியைப்போல்
எங்கோ பயந்தோடி
ஒளிந்து கொண்டது இருள்

ஒளியென்பது வேறொன்றுமில்லை
அது இருளின் புதர்



# சடை சவுக்கை

கவிஜி

பாவாடை செத்துட்டான்... பாவாடை செத்துட்டான்... பாவாடை செத்துட்டான்...

இது இதான் இன்றைய தலைப்பு செய்தி. விடியும் போதே மாய வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு ஒவ்வொரு வீட்டையும் துளைத்தது. சிங்காரத்திடம் சொற்கள் இல்லை. சோர்ந்த இதயத்தோடு வீட்டுக்கு எதிரே இருக்கும் சவுக்கை மரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏய் சிங்கார... விஷயம் கேள்விப்பட்டியா...

இந்தப் பக்கத்து வீடு பெலிக்ஸ் கண்களை விரித்து கொண்டே தாகம் கொண்டவன் தொண்டையோடு தத்தளித்தான். அருகில் வர வரவே ஆயிரம் பாவனைகள் அவனுடலில்.

அந்தப் பக்கத்து வீட்டு பரமன் கதவை இழுத்தடைத்துக் கொண்டான்.

மூச்சு பேச்சற்ற அவன் அமைதி அந்த வீதிக்கே செய்தி வாசித்தது. பெலிக்ஸ்ம்.. சிங்காரமும் திகைத்த தீர்க்கத்தோடு பரமன் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். உள்ளிருந்து கொண்டே இல்லை எனும் மௌனம். மீண்டும் தட்டினார்கள். தட்டுதலில் வேகம் கூடியது. வியர்வை சுரப்பிகளுக்கு கொம்பு முளைத்த தருணம் அது.

இந்தா வரேன்.... அது.... உள்ள பாத்ரூம்ல இருந்தன்.... - முனங்கி கொண்டே வெளியே மெல்ல வந்தான் பரமன். கதவைத் திறக்கையில்கூட தந்திரம் ஒன்று தாவி வருவது போலவே இருந்தது. அவன் கண்கள் அனிச்சையாய் அவர்களைத் தாண்டியும் சுழன்றது. ஒரு முறை சவுக்கையையும் சென்று வந்தது.

என்ன பரமா விஷயம் கேள்விப்பட்டியா.....

கேட்டு முடிக்கும் முன்னே... அஞ்சு மணிக்கே சாமியப்பன் போன் போட்டு சொல்லிட்டான்...என்றான். அவன் முகத்தில் திக்கு முக்காடும் தவிப்பு. மறைக்க பார்க்கிறான். மௌனமும் மூச்சிரைக்கிறது.

மூவருக்குமே கண்கள் சுழன்று நின்றது எதிரே இருந்த சவுக்கை மரத்தில் தான். தாவி ஏறி விடத் தவிக்கும் பதற்றத்தை மூவருமே உள்ளே உணர்ந்தார்கள். எனக்கென்னவோ இது ஆக்சிடென்ட்டா இருக்காதுனு தோணுது... என்ற சிங்காரம் பரமனை அர்த்தத்தோடு பார்த்தான். பெலிக்ஸின் பார்வையும் ஒத்து ஊதியது.

அண்ணே... என்ன என்னைய இப்பிடி பாக்கறீங்க... அவன் மூணாறுல செத்துருக்கான்.. நான் இங்க இருக்கேன். அதுமில்லாம அவ்ளோ தைரியமெல்லாம் எனக்கு கிடையாது... நீங்க பாக்கறத பாத்தா... நான் தான் ஆள் வெச்சு கொலை பண்ணின மாதிரி இருக்கு... வம்புல சிக்க விட்றாதீங்க...

அவன் முகம் வியர்த்து விட்டது. முழங்காலில் சிறு நடுக்கமும். மூச்சில் பிபி எகிறி விட்டது.

தீர்க்கமான பார்வையை சிங்காரத்தின் பக்கம் விட்ட பெலிக்ஸ்... எனக்கென்னவோ இது விபத்துனு தான் தோணுது. சாபம். ஊரையே ஏமாத்தின சாபம். எத்தனை சத்தியம் பண்ணிருப்பான். ஆத்தா மேல மாரியாத்தா மேல... அட எங்க சாமி மேலகூட சிலுவை சத்தியம் பண்ணான்ல... போட்டு தாக்கிடுச்சு என்றான். குரலில் ஒரு வன்மம் இழையோடியது. பின்ன... அவனும் ஐந்தாயிரம் குடுத்துருக்கானே.

மூவரும் அப்படியே வீதியில் நடக்க ஆரம்பிக்க.. ஆங்காங்கே நிற்கும் ஊர் ஆட்கள்... கிசுகிசுத்துக் கொண்டிருப்பதெல்லாம் பாவாடையின் சாவு பற்றியே. நெருப்பில்லாமல்... புகையில்லாமல் ஊரே பற்றிக்கொண்டு எரிவதாக இருந்தது.

பணம் கொடுத்தவன்... பங்கு கேட்டவன்... இடம் கொடுத்தவன்... சந்தேகப்பட்டவன்னு ஆளுக்கொரு தொடர்பு பாவாடையுடன் உண்டு. கூட சேர்ந்து சரக்கு போட்டவன்... நம்பி கூட போனவன்னு ஊரே இந்த மூனு மாசம் பேய் புடிச்ச மாதிரிதான இருந்துச்சு.

புடிச்சு ஆட்டுனது யாரு.. நம்ம பாவாடைதா.

அட அவன் ஏமாத்தறானப்பா என்ற கூட்டமும் இருந்தது. இல்லையே... அவன் சொல்றதுல என்னவோ உண்மை இருக்கு. அவன் பொய்க்காரன் தான்.. ஆனா.. இந்த விஷயத்துல அவன் உண்மைதா சொல்றான். அவன் கண்ணுல பணம் தெரியுதே. கட்ட பீடி பொறுக்கி குடிக்கிறவன் பில்டர் சிகரெட்டா அடிக்கறானே...எப்பிடி. மானங்கெட்ட கோட்டருக்கு பிச்சை எடுக்கறவன்.. பெங்களூரு விஸ்கி அடிக்கறான்னா பாத்துக்கங்க...

மூனு மாசமும் ஊர்க்கு பிடித்த பேய் இப்போது அவனைக் கொண்டு சென்று விட்டது.

## பேய்

விஷயம் இதான். ஆனா மை பூசி கட்டி வெச்சிருக்கு. ஏனாம்.... சும்மால்ல.. மூனு கோடி. எவனாவது லவட்டிக்கிட்டு போய்ட்டா என்ன பண்றது. அதா காசு கைக்கு வந்ததும்.. முனீஸ்வரன் கோயிலுக்கு பின்னால குழிய தோண்டி... பண்ண வேண்டிய பூஜையெல்லாம் பண்ணி புதைச்சு வெச்சிருக்கன். இப்ப எடுக்க முடியாது. போலீஸ்ல நம்ம மேல சந்தேகம் இருக்கு. பின்னால பாலோ பண்ணுனாலும் பண்ணலாம். அதான்.. நீங்க ஒன்னும் சும்மா தர வேண்டாம். எவ்ளோ செலவு பண்றீங்களோ கணக்கு வெச்சுக்கங்க. டபுளா குடுத்தர்றேன்.

அப்புறம் என்ன.. ஒரு புல்லு... கோழி முழுசா.. அன்னைக்கு அவன் தான் ராஜா. செலவு பண்ணின செல்வனுக்கு ஒரு பக்கம் நம்பிக்கை இல்லை என்றாலும்... புது வீட்டு பாலுகூட சொன்னானே. பத்து குடுத்துருக்கேன்... ஆங் லச்சத்துக்கு நான் எங்க போவேன். பத்தாயிரம். பணத்தை எடுக்கும் போது முப்பது தரேன்னு சொல்லி இருக்கான். அய்யனார் மேல சத்தியம் பண்ணிருக்கானப்பா.

நள்ளிரவு தாண்டி ஒரு நால்வர் கூட்டம் முனீஸ்வரன் கோயிலுக்கு பின்னால போயி... புதைச்சதை எடுக்க திட்டம் போட்டு தோண்டி... விடிய விடிய வேர்த்து ஒழுகினது தான் மிச்சம். கோயில் சிலையை களவாட வந்தீங்களானு ஊருக்குள்ள திருட்டு பட்டம் வாங்கினது இன்னும் சொச்சம்.

கிளப் கடைல டீ குடிச்சி சிரிச்சுகிட்டே.... பாவாடை சொன்னானே.. நான் என்ன அவ்ளோ முட்டாளா... மூணு கோடிய காப்பாத்தறது அவளோ சாதாரண காரியமா.. பணப்பை அங்க இல்ல. மூஞ்சில மண்ணு ஒட்டின நால்வர் அணி சத்தம் காட்டாமல் இனிப்பு காரா சேவை தின்று கொண்டு அவனை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தது. அவமானம்.. அவமானம். இன்னும் ரெண்டு அவமானம்.

எப்போதும் நடையில் ஒரு இழுவை இருக்கும். மெலிந்த தேகத்தில் இடது கை பழக்கம்... நடையை ஒரு பக்கமாக முன்னோக்கி முன்னோக்கி சவுக்கு சவுக்குனு இழுக்கும். அது இப்போது இன்னும் கொஞ்சம் தூக்கலாகி போனது. எது பொய் எது நிஜம் என்று கண்டுபிடிக்கவே முடியாத பேச்சு பாவாடையுடையது. பாவாடை நீயெல்லாம் வக்கீல் ஆகிருந்தா நாட்டையே விலக்கிருப்படா என்பார் ஒத்தை வீட்டு மாடசாமி தாத்தா. கர்வமும் பெருமிதமும் பொங்க.. இழுத்துக் கொண்டிருக்கும் சிகரெட்டை தாத்தா வாயில் வைத்து விட்டு இழுவை நடையில் இசை கூட்டி செல்வான்.

அத்தனையும் கட்டுக்கதை. இவன் ஒரு ஆளுன்னு இவனுக்கு எப்பிடி மூனு கோடி கிடைக்கும்... ஊரை ஏமாத்திட்டுருக்கான் சேட்டா.. என்ற கொஞ்சம் விவரமான கமலேஷ்கூட... பிறகு அவனை தனியாக சந்தித்து... ஏலே... நிஜமாதான் சொல்றியா... நீ எப்பிடி இந்த பணம் பண்ணினனு எனக்கு தெரியும். அத தான் நம்ப முடியலடே.. என்றான்.

உன்ன யாரு நம்ப சொன்னா.. விட்று. நம்பினோரைக் கை விட மாட்டான் இந்த பாவாடை. ஊருக்கே பிரிச்சு குடுப்பேன். அப்ப கைய சூப்பிட்டு நிப்பீங்க என்றவன் அங்கிருந்து வேகமாய் ஒரு காற்றை போல எழுந்தான்.

எதுக்கு வம்பு. ஏய் பாவாடை.... நில்லப்பா... இந்தா இந்த போண்டாவ கடி. சும்மா டபக் டபக்குனு கோச்சுட்டா எப்பிடி. நான் ஒரு அஞ்சாயிரம் தரேன். பணம் பிரிக்கும் போது எனக்கு அம்பது தரணும். என்ன சொல்ற.

ஆசை இருக்கலாம் கமலேசா... இது பேராசை. ஆனாலும் இந்த பாவாடை குடுத்தே பழக்கப்பட்டவன்.. சரி.. காசை எடு என்று வாங்கி எண்ணிக்கொண்டே சென்ற காட்சி ஒளிந்திருந்து நோட்டம் விட்ட பல கண்களில் பளபளவென விழுந்தது. கூட்டமாக அவனை எள்ளினாலும் கேலி செய்தாலும் சந்தேகப்பட்டாலும்... ஒருவேளை காசு இருந்துட்டா.. அப்ப பீல் பண்ண கூடாதுல. அட அஞ்சாயிரம் ஒரு காசா. போனா அஞ்சாயிரம் தான். ஆனா வந்தா அம்பதுல. அது தான்... ஒவ்வொருவர் மனதிலும் ஓடிய மண்டை வெடிப்பு. அங்க புரட்டி இங்க புரட்டி அஞ்சாயிரம் ரெண்டாயிரம் மூவாயிரம் நாலாயிரம்.. ஏன் பத்தாயிரம் கூட கொடுத்துக் கொண்டு தான் இருந்தார்கள். நிறைய கைகள் ஆயிரத்தில் ஒப்பந்தம் போட்டிருந்தன. லட்சம் குடுத்தவனும் உண்டு. அவனுக்கு டுவெண்ட்டி பைவ் கன்பார்ம் பண்ணிருக்கான்.

சரி பாவாடை..... எப்ப தாண்டா பைய எடுப்ப...

நேத்து எங்க போனேனு நினைச்சீங்க... பெரிய சாமியார்கிட்ட பேசி... பைய எடுக்க பூஜை போடறது பத்தி பேச தான். நாமதான் மை வெச்சு பூஜை போட்டு உள்ள வெச்சோம். ஆனா இப்ப நம்மையே எடுக்க விட மாட்டேங்குது. பவரு அப்பிடி. அதுக்கு தான் இந்த பூஜை. முள்ள முள்ளால எடுக்கற மாதிரி. சொன்னா நம்புவீங்களா... பக்கத்து ஊர் வின்சென்ட்... எடுக்க ட்ரை பண்ணி.. ஒரு பக்கம் கை கால் வரல தெரியுமா.. என்றானே.. திக்கென ரெண்டடி பின் வாங்கியது பித்துக்குளி கூட்டம்.

ஆமா.. கை கால் வராம படுத்திருக்கறது உண்மை தான். ஆனா அது... இவன் பணத்தை எடுக்க போயி தான்....னு எப்பிடி...- முத்துராஜன் முழிகள் யோசித்தன.

அட அதெல்லாம் வம்பு புடிச்ச காரியம். அவன் சின்ன வயசுல இருந்தே தாயத்து மந்திரம் சூனியம்னு இருக்கறவன். அவன்கிட்ட போயி எதுக்கு ஆராச்சி. ஊரே அவனை சந்தேகப் படுதுதான். ஆனா தனித் தனியா நம்புதே. ஆயிரத்துக்கு அஞ்சாயிரம் தாரான். போனா ஆயிரம்தான. வந்தா அஞ்சுல.

போன வருஷம் கவுன்சிலருக்கு நின்னு வெறும் ஏழு ஓட்டு வாங்கின குமிடியப்பன் தன் பாக்கெட்டில் இருந்து பக்குவமாய் எடுத்த ஆயிரத்தை அவன் பாக்கெட்டில் சொருகி விட்டான். தொங்கும் சுருக்கு பை கன்னத்தை பிய்த்து வாய்க்குள் போட்ட பாவாடை.... குமிடி.. உனக்கு ஆறு தரேன்... நம்பு என்று சொல்லி டவுனுக்கு புறப்பட்டான். இப்போதெல்லாம் கால் டாக்சி தான். கூலர் கண்ணாடி தான். பாக்சர் ஜட்டிதான். ஆளே ஜம்முனு ஆகிட்டான்.

## ஐடியா மணிகள்

சர்ஸ்க்கு பின்னால் வைத்து சுத்து போட்டு விட்டார்கள். பாவாடை வெலவெலத்து போனான். பேச பேசவே வாயிலேயே போட்டான்..பரமன். சிங்காரம் தலையில் கொட்ட... பெலிக்ஸ் முதுகுலேயே கையை மடக்கி நங்கு நங்கென குத்தினான். கூட்டு சேர்த்து தாக்குவது ஒரு நோய். ஆனால் அதில் காயத்தை சொரிந்தால் கிடைக்கும் சுகம் உண்டு.

மூவரையும் சமாளிக்க பெரும்பாடாய் போனது. மூச்சிரைக்க.. வாயில் கொட்டும் குருதியைத் துப்பியபடியே... அண்ணே.. இருங்க... சொன்னா கேளுங்க... அண்ணே... நான் அப்பிடிலாம் ஓடிட மாட்டான். பரமா என்னடா நீயும் சேர்ந்துக்கிட்டு... கிறுக்கா... நிறுத்த சொல்லுடா..

பரமன் தான் எகிறி எகிறி குத்தினான்.

டேய்... மயிறு... நாம சேர்ந்துதான இந்த திட்டம் போட்டோம்.. என்னவோ நீ ஓனர் மாதிரி பண்ணிட்டு திரியற. இந்த திட்டத்துக்கு உனக்கு ஐடியா குடுத்ததே நானு.. எனக்கு பாதி வரணும் சொல்லிட்டேன்.

பரமன் பகிரங்கமாகவே பேரம் பேசினான்.

வாயில் குவிந்த ரத்த சூட்டை புளிச்செனை துப்பிக்கொண்டே... பாதினா ஒன்றரை கோடியா... என்றான். அவன் கண்கள் அவ்விரிருட்டிலும்.. விருட் விருட்டென ஆந்தை முழி முழித்தது.

அப்புறம் என்ன தெருக்கோடியா...- மீண்டும் அடிக்க கையை ஓங்க... அதற்குள் சிங்காரம் பொளேர்ன்னு ஒன்று விட்டான்.

மரம் என்னுதுடா. எங்க தோட்ட மரத்துல தான் உங்க மாயாஜாலமெல்லாம் பண்ணிருக்கீங்க. எனக்கு பாதி வந்தாகனும்... -கொலைவெறி கண்களில் ஊடாடியது.

சாட்சி நானு.. நான் எங்க போறது என்றான் பெலிக்ஸ். கால்வாசி குடுத்தா கூட போதும் என்பதாக இருந்தது அவன் உடல்மொழி.

இருக்கிறதே மூணு கோடி. இதுல ஊருக்குள்ள பாதி பேருக்கு பங்கு இருக்கு. இதுல நீங்களும் இப்பிடி கேட்டா எப்டிண்ணா - கிட்டத்தட்ட அழுதே விட்டான். பாவாடை அழுதால் எதிரே இருப்பவருக்கு கண் கலங்கும். இது அவன் சிறு பிள்ளையாக இருந்ததில் இருந்தே நிகழும் பித்து. மூவரும் மாறி மாறி கண் கலங்க... சரி மரத்துக்காரன் எனக்கு ஒரு கோடி. கூட்டாளிக்கு 75. சாட்சிக்கு 50. மிச்சம் நீயே வெச்சுக்கோ. ஊர் கடன்லாம் அதுல தான். எப்பிடி ஐடியா. -சட்டென தலைவனாகி தீர்ப்பு கொடுத்தான் சிங்காரம்.

முதலில் திகைத்தாலும்.. பிறகு யோசித்தான். பரமனிடம் சிகரெட் வாங்கி பத்த வைத்தவன் அப்படியே புலி அடிச்சான் பாறையை பார்த்து நின்றான். தீவிர யோசனை. மற்ற மூவரும் அவனையே பார்த்தார்கள். ஒரு அக்கு திக்கு தெரியாமல் நிற்பதாகப் பட்டது.

சரி என்று வாக்குறுதி கொடுத்தான். அதற்குள் பெலிக்ஸ் தன் பாக்கெட்டில் இருந்து சரக்கு பாட்டிலை எடுத்து முன் வைத்தான்.

மேகமற்ற வானத்தில் அச்சம் மிளிர்கிறது.

சரி எப்ப தான் எடுக்கறது... சிங்காரம் மட்டையாகும் தருணம் அது.

எடுப்போம்ணே. அதான் நாளைக்கு மூணாறு வரை போறேன். பூஜாரி ஒருத்தர பார்க்க. கையோட கூட்டிட்டு வந்து காரியத்தை முடிக்கறோம். யார்கிட்டயும் கலந்துக்க வேண்டாம் என்று பார்ட்னெர்ஷிப் மீட்டினான். சத்தியத்தோடு ஆயிரம் ரூபாய் பேருந்து செலவுக்கு கேட்டான். என்ன பண்ணி தொலைய. தந்தார்கள். கிளம்பி விட்டான். காத்தாடி பாவாடை கூத்தாட...பாட்டின் முனகல் அவன் குறுக்கு சந்தில் மறையும் வரை கேட்டது.

நிலா வெளிச்சம்.. நிம்மதி இன்றி தவழ்ந்து கொண்டிருக்கிறது.

இவன நம்பலாமா... இவன நம்பி மூணு கோடி யாருடா குடுப்பா... சிங்காரம் மீண்டும் தன் சந்தேகத்தை குவிக்க... ஒருவேளை அவன் சொல்றதெல்லாம் நடந்திருந்தா... மூணு கோடிண்ணே. செட்டில் ஆகிடலாம்.

நம்புவதும் சிரமாக இருந்தது. நம்பாமல் இருப்பதும் சுமையாக இருந்தது. பாவாடை கணக்கு போடுவதில் கில்லாடி தான். ஆனா மகா பித்தலாட்டக்காரனும் ஆச்சே.

அப்பிடி பார்த்தா... ஊரே அவன் பின்னாலதான் சுத்துது. எல்லாமே குருட்டு நம்பிக்கை தான். போற போக்க பார்த்தா.. பல லட்சம் கடன் வாங்கிருப்பான் போலயே. இதுலயே அவன் செட்டில் ஆகிடுவான் போலயே.. இவன் பின்னால் சுத்தறது... தன் வால தானே கவ்வுற நாய் மாதிரி இருக்கு..

அவன் சென்ற பிறகு புலி அடிச்சான் பாறையை சுத்தி சுத்தி வந்தார்கள்... அக்கர்கள்.

சிங்காரண்ணே.. புலி வர்ற நேரம் இது. இங்க எதுக்கு சுத்திட்டுருக்கோம்...-பரமன்நிஜமாகவேபயந்துதான்கேட்டான்.

அவன் இங்கயேதான்டா பார்த்துட்டுருந்தான். இங்க ஏதும் மறைச்சு வெச்சிருப்பானோனு சந்தேகமா இருக்கு. அதான்..

பெலிக்ஸ் ஆங்காங்கே மண்ணை காலால் கிளறி கிளறிப் பார்த்தான்.

பம்பு செட்டுக்கு பின்னால் இருக்கும் ஆல மரத்தை சுத்தி ஒரு மூவர் அணி தேடிக் கொண்டிருந்தது.

பள்ளிக்கூடத்துக்கு பின்னால இருக்கற பேய் மரத்துக்கு கீழே இருக்கற கிணறு சுத்தி ஒரு ஐவர் அணி ஆராய்ந்து கொண்டிருந்தது.

சோர்ந்து திரும்பிய சிங்காரம் அணி வீட்டு வாசலில் அமர்ந்து எதிரே இருந்த சடை சவுக்கை மரத்தையே ஆழ்ந்து நோக்கியது.

## சடை சவுக்கை

ஊரே கிறுக்கு புடிச்சு சுத்த காரணமே இந்த மரம் தான். மரத்துக்கு சொந்தக்காரன் சிங்காரம். ஆனா அது பரமன் வீட்டுக்கு எதிரே கொஞ்சம் பாடர்ல மாட்டிக்கிச்சு. அதனால அவனும் சொந்தம் கொண்டாடறான். எவன் சொன்ன கதையோ.. அவனே சொன்ன கதையோ தெரியாது. சவுக்கை மர பொந்துல ஒரு செம்போத்து வந்து குடி இருந்துருக்கு. அது குஞ்சும் பொரிச்சிருந்துருக்கு. இதை தினமும் கவனிச்சிட்டு இருந்த பரமன்.... ஒரு வேலை பண்ணினான். சின்ன வயசுல இருந்து தோளோடு தொங்குற சிநேகிதன் பாவாடைய கூப்பிட்டு விஷயத்தை சொன்னான்.

முதல்ல யோசிச்ச பாவாடை... பற்பல ஆராய்ச்சிக்கு பிறகு யார் யார்கிட்டயோ கேட்டு முடிவுக்கு வந்தான். வாய்ப்பு இருக்கு. முயற்சி பண்ணுவோம்னு செம்போத்து இரை தேடி போன நேரத்துல... குஞ்சுங்க கால ஒன்னோட ஒன்னு வெச்சு பறக்க முடியாதபடி மெல்லிசான செம்பு கம்பியால கட்டி விட்டுட்டான். அப்ப தான் செம்போத்து குழம்பும்ங்கிறது கணக்கு. அதே மாதிரி செம்போத்து வந்துச்சு.. என்னவோ சரி இல்லனு புரிஞ்சுக்கிச்சு. குஞ்சுங்க ரெண்டும் ஏன் இப்பிடி கால் இறுகி கிடக்குதுங்கனு தவிப்போ தவிப்பு. அங்கயும் இங்கயும் தாவி தாவி பார்த்துச்சு. என்னென்னவோ பண்ணி பார்த்துச்சு. ஒன்னும் வேலைக்கு ஆகல. அதுக்குள்ள இருக்கற ஆதி புத்தி சட்டுனு வேலை செய்ய ஆரம்பிச்சிடுச்சு. வேகமா கிளம்பிருச்சு.

ஒளிஞ்சு பார்த்துகிட்டுருந்த பரமனுக்கும் பாவாடைக்கும்... வோவ்வ் மொமெண்ட் அது. கட்டிப் பிடித்துக் கொண்டார்கள். தாங்கள் நினைத்தது நடக்கப் போகிறது என்ற கிளர்ச்சி அவர்களை அப்போதே கோட்டர் அடிக்க வைத்தது. ஜன்னல் வழியாக பார்த்துக் கொண்டே சரக்கை அடித்தார்கள். சத்தம் போட்டு விடக்கூடாது. விஷயம் யாருக்கும் தெரிந்து விடக்கூடாது. செம்போத்து வருகைக்காக அந்த நாள் முழுக்க காத்திருந்தார்கள். கண்களில் நான்கு பூமிகள் சுழன்றன. கலர் காகிதங்கள் அதனைச் சுற்றி மினுக்கி கொண்டிருந்தன.

ஊரே வேலைக்கு போய் விட்டது. வெட்டிப்பயலுகள் இருவரும் கதவை மெல்லமாக திறப்பதும்.. எட்டி மரப்பொந்தை ரகசியமாக பார்ப்பதும்.. அங்கே குஞ்சுகள் கால் கட்டோடு கயமுயவென கத்திக்கொண்டு கிடப்பதும்... தாய் செம்போத்து இன்னும் வரவில்லை என்பதை உறுதிப்படுத்துகையில் உள்ளத்தில் கிடு கிடு தவிப்பு. இதயத்தின் வேகம் அடங்கவில்லை. மதியம் சாப்பாடு இறங்கவில்லை. மாலை தேனீர் கூட அன்று சரக்கு தான். மஞ்சள் வானமும் பூத்து விட்டது. மக்கள் வேலை முடிந்து வர ஆரம்பித்து விட்டார்கள். கண்களில் வேர்த்து விட்ட சரக்கின் தடுமாற்றம் அவர்களை ஒருவருக்கொருவர் கிசுகிசுக்கச் செய்தது.

செம்போத்து கொண்டு வர்ற வேரு... அது வெச்சிருக்கறவன் வாழ்க்கையவே மாத்திடுமாம். குடிசைல இருக்கறவன கோபுரத்துக்கு கொண்டு போய்டுமாம். அந்த வேர் அவ்ளோ சீக்கிரம் கிடைக்காதாம். தன் குஞ்சுகளுக்கு ஒன்னுனா தான் அந்தத் தாய்ப்பறவை அதைத் தேடி பிடிச்சு கொண்டு வருமாம். ஆனா இந்தப் போராட்டத்துல தாய்ப்பறவை திரும்ப வராம போகவும் வாய்ப்பிருக்காம். வேர் தேடற வேலைல சிக்கல் வந்து செத்தும் போய்டுமாம். ஆனா திரும்பி வந்துட்டா.. அந்த வேரோடு தான் வரும். அந்த வேர் தான் நம்மள கோடிஸ்வரனாக்க போற கடவுள். - கண்கள் மினுங்க சொன்னான் பரமன்.

நான் நம்பறேன். கண்டிப்பா செம்போத்து வரும். அது வாயில வேர் இருக்கும். நாம பணக்காரனா ஆவோம். -பாவாடை உறுதியாகச் சொன்னான்.

அங்கும் இங்கும் நடக்கிறார்கள். இரவு எட்டு தாண்டி விட்டது. ஒன்பது பத்து கூட ஆகி விட்டது. இந்த நேரத்தில்தான் வீட்டோட மாப்பிள்ளை பக்கத்து வீட்டு பெலிக்ஸ் சந்தேகப்பட்டு அவர்களை அவன் தோட்டத்தில் மறைந்து நின்று நோட்டம் விட்டது.

பரமன் பொண்டாட்டி.... என்ன குட்டி போட்ட பன்னிங்க மாதிரி நடந்துகிட்டுருக்கீங்க. ஏதும் கண்ணி வைக்க திட்டமா.... என்றாள்..

வாய மூடிட்டு உள்ள போடி என்று ஜாடை காட்டினான் பரமன்.

உழைச்சு முன்னுக்கு போகணும்னே நினைக்கறது இல்ல. நோகாமயே நோம்பி கும்பிட்டறனும். விளங்குன மாதிரிதான். கூட்டாளி பாவடைனா... குடும்பம் விளங்குமா.- அவள் கதவை டமாரென அடைத்துக் கொண்டாள்.

என்னடா பரமா இவ்ளோ அவமானப் படுத்தது உன் ஒய்ப்... - கண்களில் சோகம் காட்டினான் பாவாடை.

யார்டி இவ... நாக்கை துருத்தி வழக்கம் போலான பலான சொல்லை முயூட்டாகி விட்டு.. கண்களை பாவாடை

பக்கம் திருப்பி நீ மூடு... இதுவரைக்கும் நீ அவமானமே பட்டதுல்ல பாரு... என்று பற்களை கடித்தபடி சொன்னான்.

சிறு மௌனம். சில நொடிகள். இருவருமே முகம் விரிய வேகமாய் வானத்தைப் பார்த்தார்கள். ஆச்சரிய சிறகு இரவானத்தில் இன்னிசை நிகழ்த்தியது. ஆம்... வானத்தில் இருந்து மேகத்தை கிழித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தது செம்போத்து.

டகட டகட டகட டகட என்று வாயாலேயே மெல்லமாக ம்யூசிக் போட்ட பாவாடை முகத்தில் குண்டு பல்பு. ஒல்லி தேகத்தில் உய்யாலா நடன அசைவு.

இரவுக்கு செம்பட்டை வண்ணம் உதிர்த்தது போல. வானத்தில் ஒரு வள்ளல். தங்களின் காலத்தை தூக்கி வரும் தீபம் போல பார்த்தார்கள். அது வர வரவே கையெடுத்து கும்பிட்டார்கள்.

இந்த இரவில் ஒரு விடியல் என்று இருவரும் கட்டிக் கொண்டார்கள். மீண்டும் விடியும் வரை கண்களில் கருப்பு முழி மட்டுமே சுழல... காத்திருந்தார்கள். செம்போத்தின் நம்பிக்கை அந்த வேரைக் கொண்டு வந்து குஞ்சுகள் பக்கம் வைத்து விட்டால்... குஞ்சுகளை பீடித்திருக்கும் கட்டுகள் அவிழ்ந்து விடும் என்பது. என்னென்னவோ முயற்சி செய்தும் முடியாமல் தான் வேருக்கு சென்றிருந்தது.

விடிந்தது. மெல்ல எட்டிப் பார்த்தார்கள். கணக்குப்படி காத்திருந்த தாய்ப் பறவை இரை தேட சென்று விட்டது... உறுதியானது.

வேகமாய் மரத்துக்கு சென்று பொந்தில் குஞ்சுகள் காலில் கட்டியிருந்த கம்பியை வெட்டி எடுத்தார்கள். தூர எறிந்தார்கள். குஞ்சுகள் காச் மூச் என கத்தினாலும்.. விடுதலை பெற்று விட்டன. மெல்ல துழாவிய கையில் அந்த வேர் பட்ட நொடி கையில் கரண்ட் அடித்தது போல இருந்தது என்றான் பாவாடை. வேகமாய் எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் ஓடினார்கள். மாறி மாறி தொட்டுப் பார்த்துக் கொண்டார்கள். முகர்ந்து கொண்டார்கள். முழிகளில் படபடப்பு. மூச்சில் ஆசுவாசம்.

அதுவரை தான் பெலிக்ஸ்க்கு தெரிந்திருந்தது. அதன் பிறகு... பல கட்ட வேலைகளுக்குப் பிறகு சென்னையில் ஒரு பார்ட்டியை பிடித்து... மூணு கோடிக்கு விலை பேசி.. வேர் கை மாறியதாகவும் அதன் தொடர்ச்சியாக மூன்று கோடி கை மாற்றப் பட்டதாகவும் இதோ இன்று வரை நடந்து கொண்டிருக்கும் இந்த கூத்து.

பெலிக்ஸ் சாட்சியாக இருந்தாலும்... இந்த மூணு கோடி கிடைத்ததற்கு எந்த சாட்சியும் இல்லை. ஏன் பராமனுக்கே கூட தெரியாது. பாவாடை மட்டுமே ஒற்றை ஆளாக ஆடிய ஆட்டம் இது. அவன் சொன்னால் நம்பித்தான் ஆக வேண்டும். இல்லாத காசை முதலீடாக வைத்து ஊரில் ஆங்காங்கே ஆட்டையை போட்டிருக்கலாம். ஆனாலும் அவன் பேச்சை முழுதாக பொய் என்று கடந்து போக யார் மனம்தான் ஒப்பும். மூனு கோடியாச்சே. ஒருவேளை இருந்து விட்டால்... அதுவும் அவன் சொல்வது... அப்படியே கடவுளே அவன் வேஷம் போட்டு வந்து சொல்வது போலல்லவா இருக்கும். ஆத்தா மேல சத்தியம்பான்... சுடலைமாடன் மேல சத்தியம்பான். நீங்க இப்ப வாங்கி தர்ற இந்த டீ பன்னு மேல சத்தியம்பான். செத்தான் எதிரே இருக்கறவன். பாக்கெட்டுல இருக்கறத தூக்கி குடுத்துட்டு சந்தோஷமா திரும்பி திரும்பி பார்த்துட்டே போவான்.

அப்புறம்... திரும்பி வரும் போது... டபுளால வருது.

## டெத் வீடு

பாடியை கொண்டு வந்து விட்டார்கள். கூறு போட்டு கட்டும் போட்டிருந்தது.

நகைச்சுவையில் நர்த்தனம் செய்யும் பாவாடை.. ஒரு நமத்து போன பட்டாசாக கிடந்தது... பார்க்கிறவர்களை என்னவோ செய்தது. கடைசிவரை காசு இருக்கற இடத்தை சொல்லாமலே போய்ட்டானே... கருத்து சொன்னவர்கள் மத்தியில் கரிச்சி கொட்டியவர்களும் நின்றார்கள்.

பாவாடையின் அக்கா தனக்கு எதுவும் தெரியாது என்று ஜகா வாங்கி கொண்டாள். பரமனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. வெளியே தெரிந்தால் கேவலம் என்பதால்... நான்லாம் இப்பிடி குடுத்து ஏமாறுவேனா என்பது போலவே பலர் பாவனை செய்தார்கள். பேசிக் கொண்டார்கள். ஆனால்.. பலத்த காயம் பாக்கெட்டுக்குள் கிடந்தது.

தனித் தனியாக அந்த மரத்தை சுற்றி சுற்றி விக்கித்துக் கொண்டார்கள். பத்து ரூபாயில் இருந்து நூறில் இருந்து ஆயிரம் பத்தாயிரம் ஐம்பதாயிரம் ஏன் ஒரு லட்சம் தாண்டி குடுத்தவன்லாம் இருக்கான் என்று அரசால் புரசலாக பேசிக் கொண்டார்கள்.

சாவுக்கு காரணம் விபத்து தான் என்று உறுதி செய்யப்பட்டு விட்டது. குடித்து விட்டு... நின்று கொண்டிருக்கும் ரோட் ரோலர் மீது மோதி இருக்கிறான். டமாரென தலையில் பட்ட இரும்பு சக்கரம் அவன் உயிரை அதே இடத்தில் பறித்திருக்கிறது. இதுக்கும் நடந்துதான் போயிருக்கான். தலையில் அடித்துக் கொண்டார்கள். இப்பிடியெல்லாமா சாவு வரும்... முதலில் கேள்விப்படுகிறவர்களின் இதழில் மென் சிரிப்பு வருவதை தடுக்கவே முடியவில்லை. என்னய்யா கணக்கு இது. ஒருவேளை ஊரெல்லாம் கடன் வாங்கிட்டோம்னு வேணும்னே தலையை கல்லு வண்டில மோதி செத்துக்கிட்டானோ... என்றும் பேசினார்கள்.

யாரு பாவாடையா.... ஊரையே கொஞ்ச நாள்ல சாகடிக்க பார்த்தான்.. அவனாவது தற்கொலையாவது. அப்ப யாராவது கொலை பண்ணிருந்தா. கொலையா.. ஆமா... காசு வெச்சிருக்கறது உண்மைனு தெரிஞ்சு பிளான் பண்ணிருந்தா... வாய்ப்பு இருக்கு. ஆனா போலீஸ் தெள்ள தெளிவா சொல்லிருச்சே... விபத்துனு. இந்த காசு மேட்டர் டுபாக்கூர்னும் சொல்லிருக்கே.

மூனாறுக்கு பணத்தை எடுக்கற விஷயமாத்தான் போனான். அவன் வெச்ச பில்லி சூனியம் அவனையே திருப்பிடுச்சு போல... பக்கத்தூரில் இருந்து வந்த சிலரும் அந்த மரத்தை பார்க்க ஆவலாக இருப்பது போல தெரிந்தார்கள். மரம் காசு சாவு என்ற முணுமுணுப்பே எங்கும் அலை அடித்தது.

சிங்காரத்தின் ஒன்னுவிட்ட தம்பி கிரி... அழகேசா... அழகேசா... என்று தலை தலையாய் அடித்துக் கொண்டு அழுதான். கிரியும் அழகேசனும் பால்ய ஸ்நேகிதர்கள். ஊரே அவனை பாவாடை என்று பட்டப்பெயரில் அழைக்க நிஜ பேரில் அவனை அழைக்கும் ஒரே மனிதன் கிரி தான். பத்து வயசு வரைக்கும் அவன் அக்கா பாவாடையை கட்டிட்டு சித்தாடை கட்டிக்கிட்டு சிங்காரம் பண்ணிக்கிட்டுனு ஆடிட்டு திரிவான். அப்பிடித்தான் அழகேசன் பாவாடை ஆனது.

அழுது அரற்றி பாடி காடு சேர்ந்தது.

வீட்டுக்கு வந்துட்டு போடா என்றார் சிங்கார அண்ணன்.

ஊரே அமைதியாகி விட்டது. யாருக்கும் கேள்வி இல்லை. யாரிடமும் பதில் இல்லை. பணம் இருக்கா இல்லையா... யோசிக்க முடியவில்லை. எது நிஜம் எது பொய் ஒன்றும் விளங்கவில்லை. ஒரு மனிதன் அவர்களை முட்டாளாக வைத்திருந்தானா தெரியாது... ஆனால்... ஒரு மரணம் அங்கே அவர்களை மூடாக்கு போர்த்திக் கொண்டிருந்தது.

வீட்டுக்கு வந்த கிரி... வாசலில் அமர்ந்து அமைதியாய் அந்த மரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். வேலையெல்லாம் எப்பிடி போகுது என்றான் சிங்காரம். அவன் கவனத்தை கலைப்பதாக இருந்தது அந்த சொற்களின் திடுதிப் ஊடுருவல்.

போகுதுண்ணா... என்றபடியே தலையைக் கோதிக் கொண்டான்.

மௌனத்தின் தீவிரம் அங்கே மயான அமைதியைக் கொண்டிருக்க... சரி நான் கிளம்பறேன் என்று கிளம்பினான் கிரி. மூனாறு பக்கத்தில் கேரளா பார்டரில் ஹேர் கட் கடை வைத்திருக்கிறான்.

சட்டென நினைவு வந்தவனாக... ஆமா கிரி.... பாவாடை உன்ன பார்க்க ஏதும் வந்தானா- என்றான் சிங்காரம்.

பட்டென்று சட்டையில் சொருகி இருந்த கண்ணாடியை எடுத்து கண்களில் மாட்டிக் கொண்டு... அவன் எதுக்கு என்ன பார்க்க வர போறான்... அவன் சொல்ற கதைய நான் நம்ப மாட்டேன்னு அவனுக்கு தெரியாதா என்ன... என்றபடியே டாட்டா காட்டினான்.

புது சிவப்பு கார் சர்ரென போக போக... சிங்காரத்தின் கண்கள் அப்படியே நகர்ந்து சவுக்கை மரத்தில் போகஸ் ஆனது. சடை சவுக்கை எல்லாவற்றுக்கும் சாட்சியாய் நின்று கொண்டிருந்தது. அந்த பொந்தில் காலம் குடியிருக்க எப்போதோ குஞ்சுகளோடு பறந்து போன செம்போத்து... உங்க சகவாசமே வேண்டாம்னு சொல்லிட்டு போன மாதிரி உணர முடிஞ்சது. மரம் மனிதனிடம் காட்டும் விளையாட்டு பயங்கரம். ஏதேதோ யோசனை சடசடவென அந்த மரத்தை சுற்றி விடைகளை தொங்க விடுவதை உள் வாங்க முடிந்தது.

கூர்ந்து பார்க்க பார்க்க சிங்காரத்துக்கு விஷயம் புலப்பட்டு விட்டது. படபடவென என்னவோ திரை விலகல். உள்ளே ஒரு பனிமூட்டம் விலகுவதை உணர முடிந்தது.

பரமனை வேகமாய் அழைத்தான்.

என்ன சிங்காரண்ணா என்றபடியே வந்தான் பரமன்.

வந்தவனிடம் ஓர் அசரீரியைப் போல பேசினான்.

மூணு கோடி இருக்கானு தெரியாது. அவன் தற்கொலை பண்ணிகிட்டானா... கொல்லப்பட்டானா... விபத்தா அதெல்லாம் வேண்டாம். ஆனா.. ஊர் மக்கள்ட்ட அப்பப்போ அடிச்சான் பாரு காசு.. அது எல்லாமே கிரிகிட்டதான் இருக்கு.. வண்டிய எடு... அவனை புடிக்கணும் என்று அவசரப்படுத்தினான். ஊரையே முட்டாளாக்கி இருக்கான் பாரேன்... முனங்கிக் கொண்டான்.

அடுத்த கணம் வண்டியில் இருவரும் இருக்க.. வண்டி கிரி போன பாதையில் வேகமாய் பின் தொடர்ந்து கொண்டிருந்தது.

கிரிக்கு இதுல என்னண்ணே தொடர்பு இருக்க முடியும்... என்றான் பரமன் எதிர்காற்றில்...

மெல்ல புன்னகைத்துக் கொண்டே...- அவனுக்கு என்ன தொடர்பா.... பரமா... அந்த சடை சவுக்கைய நட்டுனதே அவன் தான்டா...- என்றான் சிங்காரம். காற்றை மோதும் தீவிரம் அவன் உடல்மொழியில்.

மல்லை.மு. இராமநாதன்

# என்று தணியும் இந்த போரழிவு
# என்று மடியும் உலகப் பேரழிவு

வல்லவரென்று ஆயுதம் கொண்டு
வாழ்ந்திடும் மேலை நாட்டீரே
நல்லவர் வாழும் நாடுகள் மீது
நச்சு குண்டுகள் போட்டீரே

எளிமையிலுள்ள நாடுகள் இதயம்
அஞ்சி நடுங்குவதைப் பாரீரே
வளமையிலுள்ள ஆயுதத்தாலே
வாழ்வு தொலைவதைக் காணீரே
இயற்கை வளங்களின் கருணையினாலே
ஏக போகமாய் செழிக்கின்றீர்
இரக்கமில்லாமல் அண்டை நாடுகளை
ஆணவத்துடனே அழிக்கின்றீர்

வட்ட நிலாவில் நாளும் நடந்து
வெட்டவெளியை ஏன் கெடுக்கிறீர்
மிச்ச மீதியுள்ள பூமியில் மக்கள்
அச்சமின்றி வாழ தடுக்குறீர்

நாடொறும் அறிவியல் சாகசங்களை
நவ நவமாகப் புரிகின்றீர்
நாடு காக்கின்ற நல்லவர் கூற்றை
எல்லை தகராறில் எரிக்கின்றீர்

கண்டுபிடிப்புகள் வந்தென்ன பயனாம்
கதிகலக்குதே அணுயுத்தம்
குண்டுவெடிப்புகள் குறி தவறாமல்
நிகழ்கிற காட்சி நித்தம் நித்தம்


இனவெறியாலும் பணவெறியாலும்
எழுந்ததோ இந்த போரறிவு
என்று மலருமோ இந்திய வழியில்
நாடுகாத்திடும் நல்லறிவு



**இரா.வெங்கடேஸ் குமார்**

# பரிணாமத்தின் பதில்கள்

எதார்த்த சூழலில் பூத்த உலகம் அனல் நிறைந்து கிடக்க
ஊழி பல சுழன்ற நேரம் மாற்றத்தால் வெப்பம் தளர
வெறும் நீர் கொண்டு நிரம்பியது தரணி நிலம் முழுக்க
வாழும் சூழல் ஒன்று பிறக்க யுகம் பலபல ஓட
பரிணாமத்தில் விளைவல்ல அல்ல விபத்து ஒன்று நடக்க
நீரின்றி வாழாத உயிர்கள் பிறந்தது புவி நீர் முழுக்க
உருவில் மாற்றங்கள் இல்லை இனம் பிரித்து அறிய
பரிணாம பதில்கள் எல்லாம் குறையின்றி மெல்ல நகர
விளைவுகள் விண்கல் மூலம் நேர்ந்தது வியப்பை போல
நீர்களில் சில இடவெளிகள் நிலங்களில் செடிகள் பூக்க
உணவினை தேடி நீரினை தாண்டி மெல்ல உயிர்கள் வர
முதல் தேடலில் இரு பிரிவாய் உயிர் இனங்கள் பிரிய
நிதம் உணவை காண விலிமை பேண போர்கள் மூழ
வேட்டை என்ற பெயரில் விலங்கினம் ஒன்று தோன்ற
முடிவுகள் இன்றி பரிணாமங்கள் பதில்கல் தர
போர் கொண்டே மீழும் நிலையில் உயிர்கள் மாற
இறுதியில் தோன்றிய உயிராய் மனிதம் பிறக்க
அமைதி காணும் என தோன்றிய தருணம் தோற்க
மனிதம் மனதில் புதிதாய் ஒரு பரிணாமம் பிறக்க
மீதம் இருந்த மிச்சம் அமைதியையும் அது முடிக்க
போருக்கு பரிணாமமாய் போட்டிகளை மனிதம் தொடங்க
நாகரீகம் என்ற பெயரில் சுய நலம் பேணி நடக்க
போட்டி போட்டு மனித இனம் ஒன்றை ஒன்று அழிக்க
மக்கி போவது பரிணாமம் இல்லை தெரிந்து கொள்
மனிதனும் ஒற்றை உயிரினம் தான் அதன் கையில்
அழித்த மிச்சத்தில் பிறந்த மனிதம் மாறி போகையில்
சற்று தூரம் பயணத்தில் முடிவுகள் வரும் சேர்கையில்
பரிணாமத்தின் பதிலாய் மனிதம் மண்ணை அடைகையில்
புதிதாய் ஒரு உயிர் முழைக்கும் நம் எச்சத்தில்
நம் போட்டிகளின் விளைவுளுக்கு பதில்கள் சில நாட்களில்.



### நற்பவி மணிபாலா, திருப்பூர்

விதை வற்றிப் போன
சதைப் பற்றினை
புதை குழிக்குள் இட்டுவந்து,
அதன்
பழம்கதை யோசித்து
சிதை அதோடு
சுதை அதாய்
பதைபதைத்து உதிரும் பாசம்...

ஈசனோடாயினும் பாசம் அறுமின்...
பாசம் என்பதனை முற்றாக வெறுமின்...

காசது காது வரை கொட்டிக் கிடந்தும்
தூசதாய் தொலைந்த
ஊர் பேச
ஓர் பொழுது நியூஸ் அதாய்
மாறிச் சென்ற மாசறு மானுடர் பலர்...

காசது வருமென காத்திருந்து
கடுந்துயர் கரையுமென பூத்திருந்து
சேர்த்துவைத்த ஜீவன் மொத்தம்
செத்த சவமாக,
காசற்றவன் கால் வயிறும்
மேல் வயிறும் காற்றுமின்றி
ஒட்டி உலர்ந்து உயிர்ச் சவமாக,

பாழும் மண் இனி
எதை உண்ணும் இதிலென,
பிணம் தின்னும் தீ நாயெதுவும்
குணம் குன்றி குடல் வற்றி
மரித்த தேகம் தனை இழுத்துப்
போனதோ..?!

மரித்துப் போகா மரணம்
மரித்துப் போக...,
மண்ணை வாரி எறிவோம்...

மண்ணில் ஏதோ ஒரு நரகாசுரன்
இறப்பிற்கு இனிது விழா எடுக்க,
நாயாய் பேயாய் நோயாய்
நீயாய் நானாய் வாழும்
சாவை சாகடித்து
சாவடிக்கு அனுப்பும் நோவடி

(நோவு அடி=மரண அடி, மரண தண்டனை)
அது எதுவோ..?!

வாழும் வரை வலிக்கும் மரணம்...
செத்தபின் ஏங்கும் வாழ்வு..
இதயத்தின் அத்தனை வால்விலும்
வாழும் ஏக்கம்..,
இறந்தபின்னும்...

இந்த நொடி இனிது வாழவே
போராடும் வாழ்க்கை...

மரணம்..
கண்டனத்திற்குரிய
மாபெரும் தண்டனை...
மாசற்றவர்க்கு...


மரித்த அனைத்துயிர்க்கும்
மறுபிறப்பு
சிறப்பாய் அமைக...

மரணத்தால்
முன் சென்ற முன்னோர்
அனைவருக்கும் நல் ஆன்ம சாந்தி
கிட்டட்டும்..

இந்த நொடி வரை,
இறப்புக்கு இரையான அனைத்துயிர்க்கும்
இனியேனும்
இனிதான இறையருள் கிட்டட்டும்...

இறைவன் என்றொருவன் இருந்தால்
இறங்கி வரட்டும்...
எம் குரல் எம் எழுத்து
அவன் செவி எட்டட்டும்..
விழி பற்றட்டும்...

குற்றம் செய்யின் சாமி கண்ணைக் குத்துவது
பழமை...,
குற்றம் செய்யும் சாமி கண்ணையே குத்தட்டும்
எம் தமிழ் புலமை...



# நேசன் மகதி கவிதைகள்

## தலைமுறை இடைவெளி

தலைமுடியை
ஒட்ட வெட்டச்சொல்லு
உன் புள்ளைக்கிட்ட என்று
மனைவியிடம் சொல்வதில் தொடங்கிவிடுகிறது
தந்தைக்கும் மகனுக்குமான
தலைமுறை இடைவெளி!

⊙

## விளம்பர இடைவேளை

தொட்டிலை
விலக்கும் போது
சிரிக்கும் மழலை
நம்
கவலைகளுக்கு
சிறிது நேரம்
விளம்பர இடைவேளை விடுகிறது

ரகுநாத் வ, மதுரை

# யானையின் கறி

வீழ்த்திய வனத்தின்
கரம் ஒடுங்கியிருக்கிறது

எம்பிக்குதிக்கிற சக்கரங்களில்
இளையோடுகிறது வளி

சாலை நகர்கையில்
தலை வருடுகிறது வழி மரம்

துண்டாடப்பட்ட நிழலின் கால்களை
ருசிக்கிறது லாரி வெயில்

நர்சரியொன்று கடக்கையில்
எச்சில் விழுங்குகிறது
ரோஜாவின் மிரட்சி

மொபைல் கசாப்புக் கடையாக
லாரி விரைய

யானையின் கறியாக
கிடக்கின்றன
குண்டுடல் மரங்கள்!

## இளையவன் சிவா

அதிகாலைத் தேநீர் வேளையில்
அழைத்துவிடும் புல்புல் வாசலில்.
செவிக்கு இசை புகும் நேரத்தில்
தவறாது வைப்பேன்
கொறிக்க ஏதேனுமொன்று.
வாசல் தோரணத்தில்
நெகிழித் திராட்சைகளை
கொத்தித் தின்னக் துடிக்கும்
நிராசைகளைக் கண்ணுறுகிறேன்
வாகனக் கண்ணாடிக்குள்
தன்னைக் கண்டு
ஓயாது சண்டையிடும் வேகத்தில்
மனிதப் பொறாமை ஒட்டிக்கொண்டதை
ரசித்துப் பார்க்கிறேன்.
கொடிக்கம்பியில் காயும் உடைகள்
மீதமர்ந்து இணையுடன் கதை பேசும்.
அலைந்து கவ்வி வரும் அலகில்
குச்சிகளும் நார்களும்
கண்டேன் ஓர் நாள்.
அழகான கூட்டினைக் கண்டவுடன்
கொடிக்கம்பிகளைத் தீண்டாது நகர்கிறேன்.
காலச் சுழற்சி காட்டிக் கொடுக்க
கூட்டில் கேட்டது பிஞ்சு மொழி.
வாசலைத் சுற்றும் பூனையை
விரட்டும் வேலையை
இணையாள் செய்ய
ரசிக்கிறேன் நாளும்.
கீச்கீச் சத்தம் எழுப்பும்
பொழுதைத் தொலைத்தவிட்ட நாளில்
வானத்தை அளந்துவர
பறந்துவிட்ட குடும்பத்தை எண்ணி
வெறுமனே ஆடிக் கிடக்கிறது
கூடிழந்த கொடிக்கம்பியும்
கவியிழந்த மனப்பரப்பும்.

### அ.கிரேஸி மேரி (திருச்சிராப்பள்ளி)

## சொல்லாத சொற்கள்

எதையெதையோ
சொல்ல நினைத்தும்
எத்தனையோ வார்த்தைகளை தேடிப்பிடித்தும்
எப்படியாவது
சொல்லிவிட வேண்டும் என்று பரிதவித்தும்....

எதை... எப்போது... எப்படி
..சொல்ல வேண்டும் என்ற
அணுக்கம் அணுகியும்,
சொன்னால் என்னவாகுமோ..!

சொல் பிழை என்ன செய்யும் ?
பொருள் பிறழ்ச்சி
மனம் கசக்கும்.....
நினைத்தால் காலநிலை
கூட மாறும்

இப்போது சொல்லிவிடலாம்
நாளை பேசிவிடலாம்
நாளை மறுநாள் பகிர்ந்து விடலாம் நொடிகளும்
நாட்களும்
ஊர்ந்து செல்கின்றன
ஆண்டுகளை ஆண்டு விடுமோ
என்ற பதற்றத்தில் மனம்

சொன்னால் சொற்கள் தைத்து விடுமோ மனதை!!!
சொல்லாமல் மௌனத்தில் மூழ்கி விடுமோ மனம்!!!
சொற்கள் விதைகளாகி,
கிளைகள் கீழாக கிளை விடுகின்றன...
விருட்சமாக பல சொற்கள்....
வார்த்தைகளின்றி மௌனமாய்...

ஒரு நாள் சிறகு துளிர் விடும்
பறந்து மனம் நுகரும்....



# திருமூலர் காட்டும் வாழ்வியல் தத்துவம்

தங்கராஜா.சிவபாலு, கனடா

இந்து மதம் என்பது பண்டை இந்தியாவில் தோன்றிய சைவம், சமணம், சாக்தம், வை~;ணவம் ஆகிய மதங்களை உள்ளடக்கிய ஒன்றாகப் பெயர்பெற்றுள்ளது. இந்தியாவில் உள்ள மதப்பிரிவுகளை ஒன்றாக உள்ளடக்கிக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு பெயராகவே வழங்கப்படுகின்றது. இந்து மதம் எப்போ தொடங்கியது, யாரால் தொடங்கப்பட்டது என்னும் வினாக்களுக்கு விடைகாணமுடியாத உலகில் முதல் தோன்றிய மதம் இந்து மதம் ஆகும். சில வரையறைகளுக்குள் நின்று கொண்டு அந்த வரையறைகளே மதம் எனக் கொள்ளும் மதங்களை விட இந்துமதம் வாழ்வியல், வாழ்க்கை நெறி என்ற அடிப்படையிலே அமைந்த ஒன்று. மதக் கட்டுப்பாடு என்ற அடிப்படையிலே வரையறைக்குள் நின்று கொண்டு இறுக்கமாகப் பின்பற்றுகின்ற நிலை இந்துமதத்தில் இல்லை. இந்துமதம் தன்னை ஒரு வரையறைக்குள் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக நெகிழ்வும், பரந்த தன்மையும் கொண்டது. நல்லன வெல்லாம் எல்லாத் திசைகளிலிருந்தும் உலகை வந்தடைகின்றன என்ற தன்மையைக் கொண்டுள்ளது.

திருமூலர் காட்டும் வாழ்வியல் அறத்தொடு வாழ்தல் என்பதாகும். திருவள்ளுவர் காட்டும் வாழ்வியல் தத்துவத்தை ஒத்ததே திருமூலரின் ;திருமந்திரம்.

**துன்பங்களைக் கழைதல்**

தெளிவு தருவது நிறைமொழி – மந்திரம். அதனைச் சிந்தித்துச் செயலாக்கும் பொழுது தெளிவு வாழ்வுக்கு அழகையும் தருவதால் மந்திரம் - திருமந்திரம் எனப் போற்றப்படுகிறது. தமிழிலே தெளிவையும் அழகையும் தரும் மூவாயிரம் பாடல்களைத் திருமூலர் பாடிச் செல்ல அந்தத் தொகுப்பு திருமந்திரம் என்னும் ஈடிணையில்லாப் பெருநூலாக இலங்கி சைவத்திருமுறையின் பத்தாவது திருமுறையாகவும் திகழ்கிறது.

சைவமும் தமிழும் மட்டுமல்ல மானிடம் மாண்புறும் வழிகள் சொல்லும் திருமந்திரத்தை இறையருளால் இயற்றிய திருமூலரின் குருபூசையினைச் சைவத்தமிழ் உலகு கொண்டாடுகையில் தமிழ் கூறும் நல்லுலகு முழுவதும் திருமூலர் நினைவைப் போற்றி நிற்கின்றது – நிற்க வேண்டும்.

அறத்தொடு வாழ்தல்

அறுத்தன ஆறினும் ஆன்இனம் மேவி
அறத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
ஓறத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தன ஈசனை வேண்டி நின்றானே

உயிர்கள் அத்துவாகி mjd; வழியாக வினைகளை ஈட்டின. உடல். முதலிய ஐம்பொறிகளும் சுவை. நாற்றம், முதலிய புலன்களில் இணைந்து உயிருக்கு எண்ணற்ற துன்பங்களைத் தருந்தன. இத்தகைய துன்பங்கள் வாழ்வியலில் துன்பங்களையும் தேவதனையையும் தொடர்ந்த தந்தனன. இத்துன்ப சாகதரத்தில் ஆழ்ந்த ஏதுமற்ற வறியவன் இறைவனை வேண்டி நின்றான். வாழ்க்கையில் பற்றற்று வெறுப்புற்று இறைவனை இறைஞ்சும ;நிலையை திருமூலர் உணர்த்துகின்றார். அதிக துன்பம், கஷ்டம் வரும்போது இறைவனை நாடுவது இயல்பு என்பதனை எத்துணை தெளிவாக எடுத்துக்காட்டி எம்மைச்சிந்திக்கத் தூண்டுகின்றார்.

வன்னம், பதம், மந்திரம், தத்துவம், கலை, புவனம் என்னும் ஆறுவழிகளாலும் - அத்துவாக்களாலும் - பசுத்தன்மையைப் பேணி, ஐம்புலன்களால் எண்ணற்ற துன்பத்தைத் தேடுகின்றோம். ஒன்றல்ல பல கொடிய வினைப்பயன்கள் வந்து வாழ்வை வருத்துகின்றது. இதனால் வெறுப்புற்ற மனதினராய் வாழ விருப்பற்று நிற்கின்றோம். எமது சக்தியால் இதனை மாற்ற இயலாது என்னும் நிலையில் இறைவனை வேண்டி நிற்கின்றோம். வேண்டுதல் புறத்தே பிறக்கின்றது. தோண்டுதல் - தேடுதல் அகத்தே பிறக்கின்றது. அதே அத்துவாக்களே இறைவன் தன்னை வெளிப்படுத்தும் வழியாகவும் உள்ளது என்ற மெய்யுணர்வு தோன்றுகையில் அதே அத்துவாக்களைப் பயன்படுத்தியே பொய் நின்று நீங்கி மெய்சார்ந்து வாழ்வில் அமைதியும் ஆனந்தமும் ஏற்படுகின்றது என்பது மெய்கண்டார் அனுபவம்.

திருமந்திரத்து இம் மந்திரப் பொருள் அன்றைய மனிதனும் இன்றைய மனிதனும் நாளைய மனிதனும் ஓரே மனிதத்தன்மையைத் தான் கொண்டுள்ளோம். எங்களின் புறம் மாறலாம் வளரலாம் விஞ்ஞானமயமாகலாம். பூகோளமயமாகலாம். ஆனால் மனிதன் மாறவில்லை – மாறவும் முடியாது. மானிடம் என்றும் மானிடமாகவே இருக்கும். ஆசைகளும் தேவைகளும் மானிடத்தின் இயல்பு. அதனை வென்றிட வழி காட்டுவது தெய்வீகத்தின் இயல்பு.

மானிடமும் தெய்வீகமும் கொண்டது ஆன்மா. அதனை ஆன்மா உணரும் பொழுது அந்த உயிரின் சொல் செயல் சிந்தனை தெய்வீகமானதாக மாறும். அத்தகைய தெய்வீகத் தன்மையுள்ளவரே திருமூலர். இந்நிலை எய்தப் பெற்றவரைச் சித்தர் என்பாரும் உளர். இதனால் திருமூலர் சித்தர் என்றும் போற்றப்படுகின்றார்.

சித்தர் ஆயினும் முத்தர் ஆயினும் இறைவனுக்குப் பக்தர் ஆகி நிற்கின்ற பொழுதே அவர்களின் முழுஆற்றலும் அறிவும் அகிலத்திற்குப் பயன் அளிக்கும் என்பது நம் முன்னோர் கருத்து. காரணம் வினையினை கழிக்க வந்த உயிர் வினையின் ஆட்சிக்குள் தான் நிற்குமே தவிர அதனைக் கடந்து செல்லும் வலிமை அதற்கு ஏற்பட முடியாது. அந்த வினையினைக் கடந்து விதியினை மாற்றும்

மதியினைத் தந்திடும் ஆற்றல் இறைவன் ஒருவனுக்கே தான் உண்டென்பது நம்முன்னோர் சொன்ன உறுதி மொழி. இந்த இறைசிந்தனையே அன்றும் இன்றும் என்றும் மானிடம் பயன் பெறு வழியுமாகும். திருமூலரின் திருமந்திர மொழியும் இதுவே.

மனிதர்களாகிய நாம் எழுத்து (வன்னம்) கருத்து (பதம்) நிறைவான மொழி (மந்திரம்) மெய்மைகளின் விளக்கம் (தத்துவம்) அறியும் வெளிப்படுத்தல் திறன் (கலை) உலக அனுபவப்படுத்தல் (புவனம்) இவைகளின் வழி நாங்கள் எம் சுயத்தைக் கட்டிப்போடுகின்றோம்.

இந்த நம்மைப் பந்தத்தில் (கட்டிப்போடுதல்) என்பது பசுவைக் கொண்டு போய் மாட்டுத் தொழுவத்தில் கட்டுதல் போன்ற செயல். இதனாலேயே உயிர் என்றாலே பசு என்னும் அழகான உவமானம் பெற்றது. பதி இறைவன் உயிர் பசு. உலகம் பாசம். இது நம்முன்னோர்கள் இறைவன் உயிர் உலகம் என்னும் என்றும் உள்ள முப்பொருள்கள் பற்றி சொன்ன விளக்கம்.

பதி நிலையானது. பசு தளையால் கட்டுண்டது. உலகம் மாறுவது – மாயமானது. எந்த ஒன்று முன் ஒரு கணத்தில் இருந்தது போல் அடுத்த கணத்தில் இல்லாது மாறிக்கொண்டிருக்கிறதோ அத மாயை. இதனை இயங்கியல் தன்மை என்பர்.

நிலையான பதி. இயங்கும் தன்மையான உலகம். இரண்டுக்கும் நடுவே தன் வினைகளால் கட்டுண்ட நிலையில் உயிர். உயிர் உலகினைக் காண்கின்றது. பதியைக் காணவில்லை. கண்டதையே உண்மையென நினைக்கையில் மயக்கம். உயிர் மயங்குகிறது. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகிறது. மாறுவன மாறுகிறது. மாயையில் உயிர் தவிக்கின்றது. நிலையானது எதுவோ அதில் சார்ந்தாலே தனக்கு அமைதி எனப் பகுத்தறிகிறது. ஆந்த நிலையானதைப் பதியை இறைவனைத் தேடுகிறது. தன்னிலும் மேலானது அது என உணர்கையில் அதன் வழிப்பட முயல்கிறது. அதனைத் தொடரவென அதைத் தொழுகிறது. வழிபாடு பிறக்கிறது. வழிபட்டதன் வழி நடக்கையில் வாழ்க்கை சிறக்கிறது.

வழிபட்டதை உணர இயலாமால் வழி தெரியாது நிற்கையில் வாழ்க்கை அழிகிறது. வெறுப்பு விளைகிறது. இதனாலேயே மாணிக்கவாசகப் பெருமான் "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் - செல்வச் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்" என்றார். இறந்த பின் அல்ல இருக்கின்ற பொழுதே சிவானந்தப் பேரின்பத்தில் திளைக்க வைப்பது சொல்லும் பாட்டின் பொருளுணர்ந்து இறைவனைத் தொழுதல் என்பது திருவாதவூரர் திருவார்த்தைகள்.

வழிபடு பொருளை உணர்ந்து வழிபடுவதும் - மற்றவர்கள் உணர்ந்து வழிபட வைத்தலுமே பூசைகளில் எல்லாம் சிறந்த பூசை என்பது அருணந்தி சிவாச்சாரியாரின் சிவஞானசித்தியார் தரு விளக்கம். "ஞானநூல் தனை ஓதல் ஓதுவித்தல் - நல்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் நன்றா - ஈனமில்லாப் பொருள் அதனைச் சிந்தித்தல் ஐந்தும் - இறைவன் அடி அடைவிக்கும் எழில் ஞானப் பூசை" என்பது சிவஞானசித்தியார் சுபக்க 275வது பாடல் வரிகள். இதனையே திருமூலநாயனாரும் பல்வேறு பாடல்களால் தெளிவுற வைக்கின்றார்.

பற்றது வாய்க்கின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக்கு அல்லது
உற்று உங்களால் ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்று அண்ணல் வைத்த வழி கொள்ளுமாறே.

என இறைவனை மனிதப் பிறவி எடுத்து அனைவரும் வணங்கி வழிபட என்கின்றார். அவரது கொள்கைகள் இறைவனை நெருங்கிச் சென்றால் முத்தி அதாவது பிறவிப்பயனைப் பெற்று உய்யலாம் என்பதனை அறுதியிட்டுச் சொல்லுமாற்றை அனைவரும் உணர்ந்து அதன்வழி ஒழுகுதல் எல்லாத் துன்பங்களுக்கும் வழி கொள்ளும் என்கின்றார். "யானே உலகமும், யானே படைப்பும், யானே அனைத்தும்" என்னும் கொள்கை சைவத்தின் தாரக மந்திரம். இறைவன் ஒருவனே, அவனே முதல்வன், பல்வேறு வடிவங்கள் கற்;பிக்கப்படினும் அதன்வழி இறைவனை நெருக்கிச் செல்லும் மார்க்கமே உரைக்கப்படுகின்றது என்பதனை உணர்ந்துகொள்ளல் வேண்டும். அவ்விதம் இறைவனை நெருக்கத் தன்னை மறந்த நிலையும் சதாசிவ நிலையும் வந்தடையும் என்பதனை திருமூலர் போன்ற சித்தர்கள் அனைவருமே குறிப்பிடுகின்றனர். அவ்விதமே பின்பற்றி ஈடேறியும் உள்ளனர்.

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலம் அறுத்தான் பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத்தவன் தாள்
வாழ்கவே வாழ்க மலம்இலான் பாதமே

என திருமந்திரத்தின் ஒன்பதாந்தந்திரத்தின் இறுதி வாழ்த்தோடு நிறைவு கொள்வோமாக, அதாவது எனது இறைவனாகிய சிவன் என்னுள்ளே வாழ்ந்துகொண்டே இருப்பானாக, மும்மலங்களையும் கடந்த அந்த பரிபூரணன் என்னுடனே வாழ்வானாக, எப்பொழுதும் மெய்ஞானியாக யோகத்தில் ஆழ்ந்திருக்கும் அந்த ஞானியின் பாதங்களைப் போற்றி வணங்குவோம். அவனது மலர்பாதங்களின் நினைவு என்னுள்ளே வாழ்ந்துகொண்டிருக்க வேண்டும். அபேதனாகத் திகழும் அந்த இறைவன் என்னுள்ளே வாழ்வானாக. என் உள்ளமே சிவன். அவனே அனைத்தும் என்று வாழ்த்தி வழிபடுவதனை நாமும் தொடர்வோமாக.



# டார்க் சாக்லேட்

**இத்ரீஸ் யாக்கூப்**

அவள் வீட்டிற்கு செல்லப்பிள்ளை. நடுத்தர பின்னணி என்றாலும் வசதியாகவே வளர்க்கப்பட்டாள். தன்னுடைய பெற்றோர்கள் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் என்பதால் தானும் கூட யாரையும் காதலித்தால் பெரிய பிரச்சினைகள் ஏதும் அவள் குடும்பம் சார்ந்து வராது என்றுதான் நம்பினாள்.

இருந்தாலும் அவ்வப்போது தனது அம்மா அப்பாவிற்கிடையில் வெடிக்கும் சண்டைகளில் சில நாட்களில் முகத்தில் வழமையாக குடிகொண்டிருக்கும் பவுணர்மிப் பொலிவைத் தொலைத்திருப்பாள்.

அவள் தினமும் குறைந்தது இரண்டு மூன்று ஃபைவ் ஸ்டார் சாக்லேட்களோடு கல்லூரிக்கு வருவது வழக்கம்.

அன்றையகாலக்கட்டத்தில் ஓரளவு வசதிப்படைத்தவர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமே பெரும்பாலும் அது போன்ற தேவதை றெக்கைகள் முளைத்த இனிப்பு வாழ்க்கை முறை வாய்த்திருந்தது எனலாம்.

அவளை காணும் வேளைகளில் ‘உடுத்திக்க உடனே மகிழ்ச்சி..! உடுத்திக்க உடனே மகிழ்ச்சி..!’ என்று அன்றைய விமல் சூட் விளம்பரப்பாடல் போல மனம், பரவசச் சிறகுகளை அப்போது முகத்தில் அணிந்துக் கொண்டு ஆர்ப்பரிக்கத் தொடங்கிவிடும்!

தனக்கு மிகவும் பிரியமானவர் ஒருவர் கொடுத்த விலைமிக்க பரிசைப் போன்று ஆதுரமாக எடுத்து, கவனமாக தங்கக் கவரைப் போன்று பிரித்து, மெது மெதுவான பிரவுன் நிற பழத்துண்டை போல அவள் அந்த சாக்லேட்டை சாப்பிடுகையில் சினிமா நாயகிகளின் அறிமுக காட்சிகளெல்லாம் தோற்றுப் போகும்!

அந்த சுவையானத் தருணங்களில் நான் எதிர்பட நேரினால், கொஞ்சமும் தயங்காமல், ஒளிக்காமல், மறைக்காமல் வேண்டுமா எனக் கேட்பாள். அடடா அதுவல்லவோ உண்மையான நாயகிகளின் அறிமுக காட்சி! நினைத்துப் பார்க்க இப்போதும் அணுக்கம்தான்!

விற்பனைக்குக் காத்திருக்கும் ஊதிக் கட்டிய பலூன் போல, அவள் பேசப் பேச காற்றுப் பட்டது போல் தள்ளாடுவேன்!

அவள் சாக்லேட் நீட்டும்போதெல்லாம் கூச்சத்திலோ, தயக்கத்திலோ நான் வேண்டாமென புன்னகையோடு மறுத்துவிடுவேன்.

இதயம் முரளிகளுக்கு எப்போதும் அந்த எமோஷன்களும் ரியாக்ஷன்களும் சொல்லி நிகழ்வதில்லை!

இருந்தாலும் இன்னொரு முறை கேட்டு உறுதி செய்துகொண்டு, தொட்டிலில் கிடக்கும் குழந்தைகளின் மலர்ந்த முகத்தோடு தனது சாக்லேட் காதலில்... தித்திப்பான கனவுலகில் அப்படியே மூழ்கிவிடுவாள். மணிரத்னம் படங்களில் நாயகன் இறுகக் கட்டிக்கொண்டு முத்தம் கொடுக்க, நாயகியின் கண்கள் அந்தரமாய் அப்படியே சொருகியபடி நிலைத்து, உதடுகள் மட்டும் குறும்புடன் சிரிக்குமே...! அது போன்றதொரு காட்சி மனக்கண்ணில் தோன்றி மறையும்.

அழகான, மிகவும் மென்மையான, இரசனையான பெண்களின் தெரிவுஞானப்படி அவளும் ஒருத்தனை நேசிக்கத் துவங்கியிருந்தாள். எதார்த்தங்கள் வரையறுத்தது போலவே கிட்டத்தட்ட அவளுடைய தயாள குணத்திற்கு அவன் நேரெதிரானவன்; ஆகையால் விதியின் விளையாட்டிற்கு கனக் கச்சிதமாகப் பொருந்தினான். இருவருமே நட்பு ரீதியாக எனக்கும் நெருக்கம் என்பதால் அவர்களின் ஒவ்வொரு நுகர்வும், நகர்வும் எனக்கு யாரோ ஒருவர் மூலம் நிச்சயமாக புலப்பட்டுவிடும்.

அப்போதுதான் காதலர் தினமென்ற ஒன்று இளைஞர், இளைஞிகள் மத்தியில் புதிய நூற்றாண்டுக்கான புத்தம் புதிய பண்டிகை போல் கட்டமைக்கப்பட்டு காலந்தோறும் புனித மண்ணாங்கட்டியென்று கொண்டாடி வரப்பட்ட காதலை பலர் தங்களின் வியாபார உத்திகளுக்கும் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்திருந்தனர். அன்றைய தேதிக்கு காதல் என்பது ஒரு போதைப் பொருள்.. தங்களின் சக்திக்கேற்ப செலவழிக்க ஜோடிகளும் தயாராகவே இருந்தன.

பிரபல பத்திரிகைகளும் கூட வேலன்ட்டைனின் அரும்பணி சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்க தங்கள் இதழ்களில் சில பக்கங்களை அதற்காக தியாகம் செய்யும் அளவிற்கு தரமிறங்கி... மன்னிக்கவும் களமிறங்கின.

ஏன் இளவட்டங்களை ஒட்டுமொத்தமாக ஒன்றுத் திரட்டவும், அந்த போதையை ஆண்டு தோறும் நினைவுக் கூறவும், நீட்டித்து வைக்கவும் காதலர் தினம் என்ற தலைப்பில் ஒரு திரைப்படமே எடுக்கப்பட்டதே!

வைரமுத்து ஒரு ஜோடிக்கு ‘காதல் கடிதம் தீட்டவே மேகமெல்லாம் காகித...’மென்று சினிமாக்குள்ளேயே ஒரு கடிதப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் என்றால் தபு சங்கர் அச்சுவெளியில் காதலின் இன்னொரு அழகியலை நாட்குறிப்புகள் போல அவ்வப்போது வெளியிட்ட வண்ணமிருந்தார். எத்தனை பேர்தான் கொஞ்சம் கூட குற்ற உணர்வே இல்லாமல் இந்த காதலின் சுமையை ஒவ்வொரு இதயங்களிலும் இப்படி ஏற்றி வைப்பார்களோ!

இப்போது தொடங்கியிருக்கும் ரோஸ் டே, ப்ரோபோசல் டே, ஹக் டே யெல்லாம் அப்போதிருந்ததில்லை. நேரிடையாக பிப்ரவரி 14தான். ஏதேனும் பரிசுப்பொருளோடு வாழ்த்து அட்டையோடு ஒரு சாக்லேட் பாரை இணைத்தோ அல்லது வாழ்த்து அட்டை மட்டுமோ அல்லது சாக்லேட் மட்டுமோ விருப்பத்திற்கேற்றபடி, வசதிக்கேற்றபடி ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வது வழக்கம். அதனைத் தொடர்ந்து திரை வெளிச்சத்தில் உயிர்ப்பெறும் அல்லது உயிர்ப்போகும் தியேட்டர் வரை, தத்தம் ஜோடியை இழுத்துச் சென்றால் அந்த நாள்... இன்னும் டிவைன்!

சரி, கதைக்குள் வருவோம். அது அவர்களின் முதல் காதலர் தினம். வழக்கம் போல வீட்டில் சண்டை என்பதால் தனது காதலனுக்காக பிரத்யேகமாக எதுவும் வாங்க இயன்றிராத சூழ்நிலையிலும் ஒரு வாழ்த்து அட்டையோடு தனக்காக வைத்திருந்த சாக்லேட்களில் ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவைகளை அவனிடம் நீட்டினாள்.

பக்கத்தில் நானும் இருந்ததால் எப்போதும் போல மரியாதைக்கு என்னையும் எடுத்துக்கொள்ள அவள் சொல்ல, ஏற்கனவே என்னையும் அவளையும் வைத்து சில குழப்பங்கள் சென்றுகொண்டிருந்ததால் அவனுக்கு மேலும் சங்கடங்கள் ஏதும் ஏற்படுத்தாமல் அந்த நேரத்தில் நட்பின் நாகரீகம் கருதி அலைத் தள்ளிய நுரை போல ஒதுங்கிக் கொண்டேன்.

அன்றைய தினத்தை தனது காதலியுடன் கொண்டாடினானோ இல்லையோ அவள் கொடுத்த வாழ்த்து அட்டையை அனைவரின் முன்னிலையிலும் காட்டி தன்னுடைய காதலை விளம்பரப்படுத்திக் கொண்டான். கன்னியின் கடைக்கண் பார்வை பட்டு விட்டால் மாமலையும் ஓர் கடுகு என்று சும்மாவா கவிகள் சொன்னார்கள்!

இவனுக்கோ முழுப்பார்வையை மட்டுமல்ல தனது வாழ்க்கையையே அர்ப்பணிக்க பச்சைக்கொடிக் காட்டிவிட்டாளே...! அன்றைய தினம் அவனுடைய நண்பர்களும் திரைப்படங்களில் வருவது போன்று தோளில் தூக்கி சுமந்தெல்லாம் அவனைக் கொண்டாடினார்கள்.

கிட்டத்தட்ட அவர்கள் உண்மையாகத்தான் காதலிக்கிறார்கள் என்ற முடிவுக்கு வகுப்பில் அனைவரும் வந்திருந்த வேளையில்தான், அவள் மட்டும் மகிழ்ச்சியாக இல்லை என்று மனதிற்கு எட்டியது. அவன், அவளை போன்று எதையும் பரிசளித்திருக்க வாய்ப்பில்லை, அதனாலும் கூட ஏமாற்றங்களில் அவள் சோர்ந்துப் போயிருக்கலாம் என ஊகித்தேன். சில நிமிடங்களில் திடீரென எங்கள் கூட்டத்திலிருந்து எங்கோ மாயமாகிவிட்டிருந்தாள்.

ஒரு யோசனையில் எப்போதும் நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் மேல் தளத்திற்கு அவளைத் தேடிச் சென்ற போது... சுவரொன்றில் அவள் தனக்காக வைத்திருந்த ஒற்றை சாக்லேட்டை சாப்பிடாது, களிமண் போல் அப்பி, மேடு போல் மொழுகிக் ஊட்டிக் கொண்டிருந்தாள். அவனுக்கு கொடுத்த சாக்லேட்டில் ஒன்றையாவது தனக்கு ஊட்டியிருக்க வேண்டும் என எதிர்பார்த்திருப்பாளோ...?

வெண்சுவற்றில் கீழ்நோக்கி வடிந்துக்கொண்டிருந்த அந்த இனிப்பு பாகு, அவள் கண்ணீர் போல் கீழ் நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. ரோஜா இதழ்களில் உலர்ந்துவிட்ட பனிக்கறையை போல் வழிந்திருந்த கண்ணீரை உறைந்த உப்புக் கன்னங்கள் எடுத்துக் காட்டின. பாறை ஓவியம் போல் காட்சியளித்தாள்!

காதலைப் பற்றிய அனுமானங்கள் என்று என்ன ஓடியதோ அவளுக்குள். அதுவே அவளின் கடைசி காதலர்

தினமாகவும் அமைத்துப் போனது! ஏதோ அவளுக்குள் ஒரு ஏமாற்றம்... அவளாகவே அவனோடு பேசுவதை நிறுத்திக் கொண்டாள்.

சில நாட்கள் "திருடிய இதயத்தை திருப்பி கொடுத்துவிடு காதலா என் காதலா..." என்று கோபங்களும் தாபங்களும் ட்ரெண்டுக்கு ஏற்றவாறு பாடலாய் அவள் உள்ளுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது.

பின்னொரு நாளில் எதிர்பாராத சில சம்பவங்களால் முற்றிலுமாய் தீர்ந்தும் போனது அவள் சிந்தைக்குள் தோய்ந்திருந்ததுப் போன்று தித்திப்பைத் தராத அந்த சாக்லேட் காதல்.

அந்த எதிர்பாராத சம்பவங்களில் அவள் காதலித்து வந்தவனின் இன்னொரு காதலும் அடங்கும். பெற்றோர்களும் அவள் திருமணம் வரையே சேர்ந்திருக்கப் போவதாக முடிவுகளும் எடுத்திருந்தனர்.

கல்லூரி மூன்றாமாண்டில் அப்படிப்பட்ட ஒரு சூழலை எதிர்கொள்ள அவளுக்கு மிகவும் போராட்டமாகவே இருந்திருக்கக் கூடும். தான் அமர்ந்து அளவாவிச் சிரித்த இடத்தில் வேறொருத்தியைக் கண்டும் காணாமல் கடந்து செல்வது அவளுக்கு அழுத்தமிகுத் தருணங்களாக இருந்தாலும் கூட எப்படி இவனை போன்ற ஒருத்தனை நம்பி மனதை பறி கொடுக்க இந்த பேதைப் பெண்கள்வழி வழியாய் வந்த வண்ணமிருக்கிறார்களென என தன்னினத்தைக் கசந்தும் கொண்டாள்.

ஆனால் படிப்பு முடிந்த கையோடு அவர்கள் திருமணமும் செய்து கொண்டார்கள். அது பின்னாளில் தெரியவந்த எங்கள் அனைவருக்குமே ஆச்சர்யமான செய்திதான். ஏன் அவனை உருகி உருகி கொண்டாடி வந்த இவள் காதல் மட்டும் அற்றுப்போனது? அப்படியானால் புதியவள் புத்திசாலியா? அல்லது இவளை விட பணக்காரி?! அல்லது அவனது குணங்களின் நெளிவு சுழிவுகள் அறிந்து நுண்ணறிவால் தன் வேட்கையை வெற்றிக்கொண்டு வாகை சூடிக் கொண்ட அறிவழகி? இருக்கலாம்.

ஏதோ ஒரு பேதமையில்தான் எல்லா காதலும் தோற்றுப் போகின்றன. அறிவார் செயல்களால்தான் வெற்றியும் பெறுகின்றன.

முதிர்ச்சி மட்டுமிருந்தால் எல்லா நிலைகளிலும் பிழைத்துக் கொள்ளலாம் என்பது காலம் அவளுக்கு உணர்த்த வேண்டிய பாடம். நானே அவளை இப்படி கடித்துக் கொள்ளுமளவிற்கு அப்படி என்னதான் நிகழ்ந்துவிட்டது? ஒரு நாள் ஏமாற்றம் அவளது காதலையே பட்டுப்போக வைக்குமா? உணர்ச்சிக்குவியல்களும் அதீத கற்பனைகளும், அர்த்தமில்லா எதிர்பார்ப்புகளும் நடைமுறைகளுக்கு சரிப்பட்டு வருமா? அதில் அவளது கண்முன் சிக்குண்டுத் தவிப்பவர்களில் அவளது பெற்றோர்களும் அடக்கம்தானே?

எல்லோருமே அன்பு செலுத்த உகந்தவர்கள் போல காதலிக்கவும் சிறந்தவர்கள்தான். ஆனால் யார் யார் மீது அன்பு செலுத்துகிறோம்; யார் யாரை காதலிக்கிறோம் என்பதுதான் விதியின் சூட்சமம்; மதிக்கான பரீட்சை. எதையும் தள்ளி நின்றுப் பார்த்தால்தான் பிரச்சனைகள் புலப்படுமென்பார்கள். நிதர்சனங்களை விளங்கிக் கொண்டால் அரவணைப்புகள் அதுவாகவே நிகழ்ந்துவிடும்.

இருவரும் விரும்புகிறார்களென்றுத் தெரிந்தவுடன் நான்சியையும் பீட்டரையும் நான் விலகி நின்றேப் பார்த்தேன்; பழகினேன். அதனால்தான் அவளுக்கும் அவனுக்கும் கடைசி வரை நண்பனாகவே இருக்க முடிந்தது. என்னதான் அவளுக்கெதிரான என் புற வாதங்களும் சீற்றங்களும் ஒரு பக்கமிருந்தாலும், அவளுடைய காதலுக்கு மனதார வருந்தவும் முடிந்தது; பீட்டரின் கல்யாணத்தில் கலந்து கொள்ளவும் முடிந்தது.

கொஞ்சம் நிதானித்துக் கொள்கிறேன்... நீங்கள் கவலைப்படுவது புரிகிறது... வசதி வாய்ப்பளவில் நான்சி இப்போது நன்றாகவே இருக்கிறாள்.

காதலென்றுப் பார்த்தால் இன்று வரை பணியிடம், தங்குமிடம் என்று தனக்கான ஒருவனை கடந்து கொண்டேதானிருக்கிறாள். பத்தில் ஒருவன் மட்டும் பத்து நாள் பின்னால் தொடர்வானாம். பிறகு அவனுக்கும் வேறொரு காதல் கிடைத்துவிடுகிறதாம்.

'அது எப்படி உனக்கு தெரியும்?' என்றால்,

'அதெல்லாம் தெரியும். இவன்களைப் போல் எத்தனை பேரைப் பார்த்திருப்பேன்!' என்பாள் சீறுவது போல்.

'ம்ம்' என்று நகர்ந்துவிடுவேன் கேள்விகளைத் தொடராமல்

என்றாவது வரக்கூடும் அவளுடைய கனவுக்காதலன்.

தோன்றும் நேரங்களில் அவளுக்காகவும் அவள் தேடும் அவனுக்காகவும் மெழுகுவர்த்தியொன்றை ஏற்றிக் கொண்டேயிருக்கிறேன்.

கவனிக்கும் நேரங்களில் மனைவி கூட சிரித்துக் கொண்டே கேட்பாள், 'யாருக்குத்தான் இப்படி இரகசியப் பிரார்த்தனை செய்கிறீர்களோ..!' என்று.

நானும் சிரிப்பை தவிர வேறெதை பதிலாய் கொடுத்து விட முடியும்?

எப்படியாவது நான் நினைத்தவளுக்கு, நினைத்த வாழ்க்கை கிடைக்க வேண்டும் அவ்வளவுதான்.



## மு. பிரபு. வேலூர்

வசதியோ
நடுத்தர வர்க்கமோ
ஏழையோ...

சைவமோ / அசைவமோ
எதிலும்... நீ  இருக்கிறாய்..

எல்லோருடைய சமையலறையிலும்
சமையலிலும் கலந்திருக்கும்
சமத்துவ கனி...நீ
ஏழைகளின் பங்காளி...நீ

விலையேறும் காலங்களில்
ஏழைகளின்
எட்டாக்கனி ஆகிப் போகிறாயே
அன்பு தக்காளி.

## ச. இராஜ்குமார்

கேட்பதற்கும் கேட்கபடாமல் கடப்பதற்கும்
இடைப்பட்ட காலம்..
என்னை கண்டதும் ஏன் நீ அழுதாய்
என்பதற்கான விடை தெரியவில்லை
அதை உன்னிடமே
தெரிந்துகொள்ள விரும்பினேன் பின் ஏனோ
அதை கேட்காமலே
நின்றேன்..
அதைப்பற்றி உன்னிடம் கேட்டு விடவேண்டும்
என்றுதான்
ஒவ்வொருமுறை
மனதுக்குள் கேட்டுக்கொண்டேயிருக்கிறேன்
ஆயினும் அதை கேட்காமலே விடவேண்டும்
என்றும் சில சமயம் நினைப்பதுண்டு..
கேட்பதற்கும் கேட்கபடாமல் கடப்பதற்குமான
இடைப்பட்ட காலத்தில் நான்
இறந்துகொண்டிருக்கிறேன் என்பது மட்டும் எனக்கு
நன்றாக புரிகிறது...!!

# முதல் குழந்தை

**சுந்தரிமணியன், புதூர்**



அந்திமழையின் தூறல்களில் சின்னச் சின்னக் குமிழிகளின் அழகை ரசித்துக் கொண்டிருந்தாள் சங்கமி. சின்ன வயதில் தனது தோழிகளோடு மழையில் ஆடிய பொழுதுகள் கண்முன்னே விரிந்தன. பள்ளி முடிந்து வரும்போது வந்த சின்ன சாரலில் நனைந்து வந்ததற்கே மறுநாள் காய்ச்சலில் பள்ளிக்கே போகாமல் இருந்த பொழுதுகள் இன்று நினைத்தாலும் மகிழ்ச்சியைத் தருகின்றன.

இன்று அந்த மாதிரி இளைப்பாற முடியாமல் வேலைப்பளு கழுத்தை இறுக்குகிறது. ஒரு நாள் சமைக்காமல் நிம்மதியாகத் தூங்கி எழுந்து எங்காவது போய்விடலாமா என்று எண்ணத் தோன்றும். காலையில் எழுந்து அரக்கப் பறக்க சமைத்து, வேலைக்கு ஓடி அங்கும் பரபரவென வேலை பார்த்து, மாலை வீடு வந்தால் வீட்டிலும் கணவர், மாமனார், மாமியார் என அனைவருக்கும் சமைத்துப் போட்டு ஆயாசமாய் அமருகையில் தனக்கென எதுவும் செய்ய இயலாமல் சோர்வு தட்டிப் போகிறது.

நேற்று தனது பள்ளித் தோழி ஆனந்தியைப் பார்க்கையில் பழைய நினைவுகளில் மூழ்கிப் போனாள். சங்கமி, ஆனந்தி, சாந்தி, விஜயலட்சுமி, பார்கவி என ஐந்து பேரும் நல்ல தோழிகள். எங்கு போனாலும் ஒன்றாகச் சென்று ஒண்ணாகத்தான் வருவார்கள். வகுப்பு டீச்சரைப் பார்க்கப் போனாலும் கட்டுரை நோட்டு சப்மிட் செய்தாலும் ஒரே நாளில் என, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதில்லை. நெல்லிக்காய் வாங்கினாலும் ஐந்து பேரும் ஒன்றாகச் சாப்பிடுவர். ஐஸ் வாங்கினாலும் அப்படித்தான். ஒரு நாள் யாராவது விட்டுச் சாப்பிட்டாலோ, அன்று ரகளைதான். செய்தவளிடம் மற்றவர்கள் பேசுவதில்லை. விஜிதான் இந்தக்

காரியத்தை அடிக்கடி செய்வாள். மற்றவர்கள் கிளாஸ் நோட்டு முடிப்பதற்குள் முடித்து சப்மிட் செய்வாள். அன்று பூராவும் மற்ற நாலுபேரும் பேசமாட்டார்கள். எவ்வளவு கெஞ்சினாலும் இறங்குவதில்லை. விஜி படிப்பில் கெட்டிக்காரி. மற்றவர்கள் சுமார் ரகம். சங்கமி சுமாராகப் படித்தாலும் துறுதுறு வென்றிருப்பாள்.

தேர்வு வந்தால் ஐந்து பேரும் ஒன்று சேர்ந்து படிப்பர். பள்ளி இறுதிப் படிப்பு முடிந்து அனைவரும் பிரிந்து செல்கையில் ஐந்து பேரும் அழுத அழுகை இன்றைக்கும் நினைத்தால் சிரிப்பு வரும். என்றாவது ஒரு நாள் தோழிகளைச் சந்திக்கையில் எப்படி இருக்கிறார்கள் என விசாரிப்பதுண்டு. ஒரு சிலர் மேல்படிப்பு படித்தாலும் திருமணம் போன்ற காரணங்களால் வேலைக்குப் போகவில்லை. சங்கமி மட்டும் மேல்படிப்பு படித்து நல்ல வேலையில் இருக்கிறாள். இந்த குரூப்பில் நன்றாகப் படித்த விஜி கூட சரியான கணவர் அமையாத காரணத்தால் ரொம்ப கஷ்டப்படுகிறாள் எனக் கேட்டபோது சங்கமிக்கு வருத்தமாக இருந்தது. ஏன் பெண்கள் மட்டும் திருமணம் முடிந்தால் தங்களது தோழிகளோடு பழைய நட்பில் இருக்க முடிவதில்லை? ஆண்கள் மட்டும் திருமணம் ஆனாலும் அதே நட்போடும் மகிழ்வோடும் வாழமுடிகிறது? இந்தக் கேள்வி அவள் மனதைப் பல சமயங்களில் சிந்திக்க வைப்பதுண்டு. பெண்களுக்கு ஏற்படும் வேலைப்பளு, கணவனும் அவனது வீட்டினரும் அனுமதி மறுத்தல், இயலாமை எனப் பல காரணங்கள் அவளுக்குத் தோன்றுவதுண்டு.

வெவ்வேறு ஊர்களில் இருக்கும் தனது தோழிகளைத் தொடர்பு கொண்டு பேசவேண்டும் என நினைப்பாள். அவர்களது புதிய எண் அவளிடம் இல்லை. அவளுக்கு இருக்கும் வேலைப்பளுவில் இப்படிப்பட்ட தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு நேரம் ஒதுக்கும் அளவுக்கு நேரமும் இல்லை. அதைக் கூறினால் கண்டுகொள்வோரும் இல்லை. இப்படி தனது ஆசைகள் நிராசையானது போல் ஆண்களுக்கு நடந்தால் மட்டும் கொதித்துப் போவார்கள்.

"என்ன நெஞ்சழுத்தம் இருந்தா. என் பிரண்ட பார்க்கவிடாம பண்ணுவ" என்ற கணவனின் வார்த்தை சங்கமிக்கு அவள் மறுக்கையில் கூறியது நினைவிற்கு வந்தது. இதே வார்த்தையை அவள் அவனைப் பார்த்துக் கூறினால் வீடு அல்லோலப்படும். 'அளவுக்கு மீறிப் பேசுறா' என்ற புகார் அம்மா காதுவரை போய்விடும். இப்படித்தான் இவளது ஆசைகள் பலவற்றை அடக்கி அடக்கி ஒடுங்கிப் போனாள். ஒடுங்கிப் போனது அவளது ஆசைகள் மட்டுமல்ல, சிறகு முளைத்த கனவுகளும் தான்.


சங்கமிக்கு நிறைய எழுதவேண்டும் என்ற கனவு இருந்தது. பள்ளி முடிந்து கல்லூரி செல்லுகையில் கவிதைகள் எழுதுவாள். திருமணத்திற்குப் பின் அவள் எழுதிய கவிதையைப் படித்த அவளது கணவன் 'இனிமேல் எழுதாதே' என்று சொல்லிவிட்டான். ஏனென்று கேட்டால் அவள் எழுதிய காதல் கவிதைகளைப் படித்தால் மற்றவர்கள் தப்பாக நினைப்பார்கள் என்றான். இதெல்லாம் ஒரு காரணமா? மனைவிக்கு எழுதுகிற ஆற்றல் இருக்கிறதே என்று மகிழ்ந்து, அவளை ஊக்கப்படுத்தத் தெரியவில்லை. ஒரு வேளை தன்னளவு அவன் படிக்கவில்லை என்பதால்தான் இந்தப் புத்தியோ என்று அவள் நினைப்பதுண்டு. ஒரு வேளை அவள் எழுதிய கவிதைகள் மற்றவர்களிடம் பாராட்டுப் பெற்று அவள் பெரிய ஆளாவதை அவன் விரும்பில்லையா என்று கூட நினைக்கத்தோன்றும். ஆனாலும் கவிதை எழுதினால் மட்டும் பெரிய ஆளாகிவிட முடியாது? என்று எண்ணி அவனுக்காக அவள் எழுதுகின்ற ஆசையையும் அன்றோடு ஒதுக்கிவிட்டாள். ஆனாலும் அவ்வப்போது தோன்றுகின்ற நினைவுகளைக் கவிதைகளாக எழுதி அலுவலகத்தில் ஒரு டைரியில் வைத்திருந்தாள்.

ஆறு மாதங்கள் கடந்த நிலையில் சங்கமியோடு வேலை பார்க்கும் சங்கமித்ரா தனது கையில் வைத்திருந்த ஏதோ ஒன்றை சங்கமியின் டேபிளில் வைத்துப்போனாள். காலையில் வந்தவுடன் டேபிளில் இருந்த பரிசினைக் கையில் எடுத்துப் பார்த்த சங்கமி அதிர்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் வியந்துபோனாள். கண்ணிலிருந்து துளிர்த்த கண்ணீரை மறைக்கவே வெகு பிரயத்தனப்பட்டாள். அவளருகில் வந்த சங்கமித்ராவும் அலுவலக நண்பர்களும் இணைந்து 'ஹேப்பி பேர்த்டே டூ யூ' என கோரசாகப் பாட மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனாள் சங்கமி.

"யாரோட ஏற்பாடு இது" என மித்ராவைப் பார்த்துக் கேட்க,

"நான் தான். உனக்கு என்ன கிப்ட் வாங்கலாம்னு ஆலோசனை பண்ணும்போது உனக்குக் கவிதை எழுதுற பழக்கம் இருக்கறதால அதைத் தொகுத்து நூலாக்கி ப்ரசண்ட் பண்ணலாம்னு ஐடியா சொன்னேன். இது வித்தியாசமா இருக்கும்னு மத்தவங்களும் ஒத்துக்கிட்டாங்க. உனக்குப் பிடிச்சிருக்கா" என்ற மித்ராவைக் கண்ணீர் மல்க கட்டிக்கொண்டாள் சங்கமி.

"எனக்குக் கவிதை எழுதுறதுன்னா ரொம்பப் பிடிக்கும். நூலாக ஆக்கிப் பார்க்கனும்னு ஆசை. என் வீட்டுக்காரருக்கு நான் கவிதை எழுதுறது பிடிக்காததுனால விட்டுட்டேன். எல்லோருக்கும் ரொம்ப நன்றி" என்று சொல்லி கைகூப்பினாள். அவள் கொண்டு வந்த கேக்கை எல்லோரும் உண்டு மகிழ, கைகுலுக்கி அனைவரும் வாழ்த்து தெரிவிக்கத் தன்னை மறந்து நூலை கையில் எடுத்துப் பார்த்தாள் சங்கமி. 'பூ பூக்கும் தருணம்' என்ற தலைப்பிலான தனது கவிதைப் புத்தகத்தை ஏந்தியபோது தனது குழந்தையின் உடலை முதன் முதலாகத் தீண்டியது போல் குதூகலமானாள்.




# கவிதையும் கற்று மற
# கவிதை நூல்
# எனது வாசிப்பனுபவம்

**நௌஷாத் கான்.லி**

அனிதா பாபு என்கிற குடந்தை அனிதாவின் கவிதையும் கற்று மற கவிதை நூலில் கிராமத்து வீட்டை அவர்கள் வாழ்வியலை, நகரத்து மனிதர்களை அவர்களின் இயலாமையை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை இடம் சார்ந்த இயற்கையை படைப்பாளரின் அறிவுக்கு எட்டியவரை அவரின் மனக்குமுறல்களை எளிமையாய் எல்லோரும் புரிந்து கொள்ளும் படி யதார்த்தமாய் பல கவிதைகளை பதிவு செய்துள்ளார்.

வாய்மொழி பேசுவதை விட சொல்ல வந்த கருத்தை எழுத்தின் மூலம் பலரிடம் கொண்டு செல்வது தான் நிலையானது என்பதை படைப்பாளர் மனதார நம்புகிறார் அது நூறு சதவிகிதம் உண்மையும் கூட

ரோஜாவின் இதழில்
ஒரு பனித்துளி துயில்கின்ற
சில மணித்துளிகளேனும்
அதுவும் வாழட்டும்
இப்பிரபஞ்சத்தில்

என்னவொரு விசாலமான சிந்தனை, இப்பிரபஞ்சத்தில் வாழ்வு ஒரு நிமிடமாக இருந்தால் கூட எல்லோருக்கும் வாழ உரிமை உண்டு என்ற பெரிய விஷயத்தை சின்னச்சிறு வார்த்தைகளில் அவ்வளவு அழகாக சொல்லியிருந்தார்.

இதயத்தில் ஒரு காதல்
கருவில் கலைந்தாலும்
பிறந்து இறந்தாலும்
மறதி என்பதறியாது
மனதிலேயே புதைந்திருக்கும்

காதலுக்கு மறதியே கிடையாது என்பதை இதை விட வேறு எப்படி தான் சொல்லிட முடியும்.

துளி நேசத்தை
என் மனம் இப்படித்தான்
பறைசாற்றி கொள்கிறது
தாராள மனதென்று!

பேரன்புக்கு எல்லையேது என்பதை இப்படியும் சொல்லலாம் என்பதை சொல்லாமல் சொல்லிவிட்டார்

எல்லோரது முயற்சியும்
வெற்றியடைவதில்லை
சூரிய உதயம் போல

ஒவ்வொரு மனிதனின் ஆதங்கத்தையும் மூன்று வரிகளில் நறுக்கென்று முத்தாய்ப்பாய் சொல்லிவிட்டார்.

இந்நூலில் இவர் எழுதிய அக்கரை சீமை, சொந்த வீடு, ஓர் வழி தடம் போன்ற கவிதைகள் மனதிற்கு நெருக்கமான கவிதைகளாக திகழ்கின்றன.

முதல் கவிதை நூலிலேயே இவ்வளவு சிறப்பாக முத்தான கவிதைகளை எழுதி தொகுத்த எம்மண்ணின் எழுத்தாளர் சகோதரி குடந்தை அனிதாவுக்கு வாழ்த்துகள்.

ஓர் உயிர்
ஓர் எல்லை

தடங்கள் அவரவர் வழி போல இன்னும் பல அறிய படைப்புகளை அற்புதமாய் தருவார் என நம்புகிறேன்.

புத்தகம் வெளியீடு

*PUSTAKA DIGITAL MEDIA PVT LTD*
*#7-002-MANTRI RESIDENCY*
*BANNERGHATTA MAIN ROAD*
*BENGALURU -560 076*
*KARNATAKA,INDIA*

## கி.கவியரசன்

சொட்டு சொட்டாய் மௌனம்
மழை நின்ற பின்னும்
தள்ளாடிக் கொண்டிருக்கிறது
குளத்தில் ஒரு நிலவு...!!!

⊙

துயரமொன்று
நிலவாகிக் கொண்டிருந்தது
படபடப்புகள் நட்சத்திரங்களாக
மாறிக் கொண்டிருந்தன
காற்று களைத்து விட்டிருந்தது

⊙

எதையும் பேசாமல்
என்னவென்று கேட்காமல்
தலைசாய்த்து ஒரு பிடி
கூடுதல் அழுத்தத்தில் வருடுகிறாள்

⊙

கருமேகம் படர்கிறது
பலத்த இடி
கூடவே ஒரு பெருமழை
இறுதிச் சொட்டின் சத்தம் நின்றதும்

⊙

மலையொன்று
சமவெளியாக மாறியிருந்தது
தன் வருடல்களை முடித்துக் கொண்டு
நெற்றியில் முத்தமிடுகிறாள்
இந்த இரவு
பகலெனும் தன் முகமூடியை
முழுதாய் கழற்றி வைத்திருந்தது!

S.சுடர்நிலா

# வார்ட் நம்பர் பன்னிரண்டு

உயிரைப் பிழியும்
மருந்து வாடையைச்
சகித்துக் கொள்வதாய் எடுத்த உறுதிமொழிகள்
சிதைந்து போன இரவொன்றில்
என் சொற்கள் காலாவதியாகி குப்பைத்தொட்டிகளில்
போடப்பட்டிருந்தன
தேடிப்பார்க்கிறேன்
தனிமை எங்குமில்லை
அது எனக்குள் தான் எங்கோ ஒளிந்திருக்கிறது..


ஓயாமல் ஒலி எழுப்பும் கருவியைச் சினந்தபடி
நகர்கிறது
பக்கத்துக் கட்டில் பாட்டியின் வாழ்வு.
எலும்பைப் போர்த்தியிருந்த கசங்கிய தொலில்
திணித்திருக்கும் சேலேன் ஊசியை அடிக்கடி
சபிக்கின்றன அவள் கண்கள்..

முக்காடு அணிந்த முஸ்லீம் சகோதரிகளின் ஓசையற்ற
அழுகையைச் சுமக்கும்
மின்விசிறிக் காற்றில்
அக்கணமே மரணமொன்று நிச்சயமாகியிருந்தது

நள்ளிரவில்
சிறுநீர் கழிக்க சிரமப்படும் தாயோடு போராடும்
பராமரிப்புப் பெண்ணொருத்தியின் அந்நியச் சொற்கள்
போர்வையற்ற கடுங்குளிரிலும் நடுங்க மறுத்தன..

இருளைக் கூப்பி பகலுக்காய் பிரார்த்திக்கிறேன்..
கைகளை விரித்து வெளியேறும் வைத்தியர்களை
நோக்கி ஓலமிடும் தாயொருத்தியின் கண்ணீரில்
விடிந்தது காலை..






பிரபு கு, கனடா

# தேர்வு

தாங்கள் பிழைத்தவர்களையும்
பிறர் பிழைப்பைக் கெடுத்தவர்களையும்
அவர்கள் களையெடுத்து விட்டார்கள்
காலம் அவர்களுக்கு கடமையைச்
சொல்லிக்கொடுத்துள்ளது
கடந்து வந்த பாதை கல்லும் முள்ளும்தான்
கஞ்சிக்கும் கடன்பட்ட தேசமாய்
கருவில் குழந்தையும் கடன் சுமையோடு
மூழ்கி மூச்சடைத்துப் முழுதாய் முடியு முன்னே
கடலுக்குள் மூழ்கிக் களைத்து முத்தெடுத்து
கண்டுகொண்ட நிம்மதிப் பெருமூச்சு அவர்களுக்கு
பாதிக்கடல் தாண்டி கரை கண்ணில்
பட்டவர்கள் மூச்சிழுத்து உடல் வலித்து
பசுந்தரையில் களைப்பாறிக் கிடக்கின்றார்
பார்த்திருந்த கூட்டமெல்லாம்
சிகப்பு பாய்விருக்கும் காலடியில்
அனைத்துலகும் பூச்சொரியும்
இனமும் நாடும் வளம்பெற வர்க்க பேதம் மறந்து
வாழ்த்தி வழிவிட்டு விலக்கிடும் அவர்கள்
என்றும் இனமானம் உள்ளவர்கள்

பசியும் தீர்ந்தபின் பழைய பஞ்சாங்கம்
படுத்த பாயையும் மறப்பாரோ யாரறிவார்
பல்லாங் குழியாடி படுகுழியில்
தள்ளிவிட பார்த்திருக்கும் குள்ளநரிக்கூட்டம்
கூட்டு வைத்து கொள்ளையடிக்குமோ
அரிதார முகம் காட்டி அரியனை ஏறிடுமோ
அதற்கும் துணைபோக காத்துக்கிடக்கும்
எம்மவர் கூட்டம் துடித்துக் கிடக்கின்றது
இனியும் ஏமாற்றி ஏங்கும் தமினத்தின்
பெருமூச்சில் குளிர் காயும் வல்லூறுகள்
ஊஞ்சல் ஆட்டத்தில் எங்கள் வாழ்க்கை
இல்லாத தீர்வுக்காய் ஆடிக்கிடக்கின்றது
இணையத்தெரியாத கைகள்
தீர்க்கத்தெரியாத பிணக்குகள்
குண்டுச்சட்டிக்குள் போட்டு மூடி
அண்டாவுக்குள் அளாவும் அறிவாளிகள்
அடையும் வரை சுகம் சந்ததியின் நலம்
அரசியல் நாடகத்தில் அழுகையும் ஒப்பாரியும்
தலைக்கு மகுடமும் தங்க கதிரையும்
சொகுசான இருப்பிடம் சொந்த பிள்ளைக்கு
சொத்துடன் மாப்பிளை சம்பந்தம்
மதுபான ஆலைகள் மகிழ்வான வாகனம்
மாலையில் மாதுவும் மதுவும்
வீதியில் வந்தால் வீர வசனங்கள்
உரிமையை வென்றிட வேடங்கள் போடுவார்
மதிகெட்ட தமிழா எம்மவர் பிணங்களின்
மேடையில் அரசியல் நடத்தும் ஈனரை விரட்டிடு
இனியும் தமிழன் இருப்பான் மூ ட்டாளாய்
இருந்தால் அதுதான் அழிவின் உச்சம்
தமிழ் தேசியம் தவிடு பொடியானதே
தமிழன் ஒற்றுமை தரம் கேட்டுப் போனதே
தலைவன் இன்றியே தறிகெட்டு அலையுதே
தமிழா இனியும் விழியாதிருந்தால்
தகர்ந்திடும் தமிழினம்
தன்மானத்தோடு தனியொரு விரலெடு
தமிழனுக்காக தெரிந்திடு ஒருவனை



# உயிர்நாடி

ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்

பெரியசாமிக்கு இதுல உடன்பாடு இல்லனாலும் அவருக்கு வேற வழியில்ல மவனும் மருமவனும் ஒத்தக்காலுல நிக்கையில அவரால தனியாள என்ன பண்ண முடியும். அதான் மனுசன் மனசு கேக்காம போய் சேர்ந்துட்டாரு என கருப்பன் புலம்ப என்ன பண்ண நல்ல மனுசன் நிலத்த உசிரா பாத்த மனுசனாச்சே அதான் போய் சேந்துட்டாரு என்று கூறியபடியே எழுந்து சென்றார் மாடசாமி.

கனகு எதும் பேசாமல் தன் கணவனை முறைத்தபடி இருந்தாள்.

காசியப்பபுரம் ஊருக்குள்ள பெரியசாமினா தெரியாத ஆளுங்க கிடையாது. அங்க மட்டுமில்லை சுத்துபட்டு ஊருக்கும் அவர தெரியும் எப்ப எத விதைக்கனும், எப்படி உரம் போடனும்னு ஆரம்பிச்சு அவருக்கு விவசாயம் அத்துப்படி. இரசாயண மருந்தையோ, உயர்ரக விதைகளையோ ஒருநாளும் வாங்கமாட்டாரு மனுசன். மாட்டுசானம், பஞ்சகாவியம்னு நம்மாழ்வார் வழி வந்த இயற்கை விவசாயி.ஆணுஒன்னு பொண்ணு ஒன்னுனு ரெண்டு புள்ளைங்கள பெத்துபோட்டுட்டு பெரியசாமி பொஞ்சாதி போய் சேந்துட்டா. புள்ளங்களையும் வயக்காட்டையும் ரெண்டு கண்ணா பாத்த மனுசன்.

நல்லா படிக்க வச்சாரு ரெண்டு புள்ளைங்களயும். அம்மா இல்லாத புள்ளைங்கனு அதட்டக் கூட மாட்டாரு. மவள ஐடி கம்பெனியில வேல பாக்குற மாப்பிள்ளைக்கு சீரும்சிறப்புமா கட்டிக்குடுத்தாரு. கம்பியூட்டர் அடிக்கிற கை கலப்ப புடிக்க மாட்டேனு சொல்லவும் மவன அவன் போக்குல வேலைக்கு அனுப்பிட்டு தனியாள வயக்காட்ட பாத்துக்கிட்டாரு.

அண்ணே....,

வாப்பா முத்து என்ன இந்த பக்கம்.

இல்லண்ண நம்ம ஊருக்குள்ள ஏதோ பைபாஸ் ரோடு வரப்போவுதாம்ல அதுக்கு நம்ம நிலத்த குடுத்த காசு குடுக்காங்களாம் அதான் அண்ணுக்கு விவரம் தெரியுமோ என்னமோனு சொல்லவந்தேன்.

என்டா பேச்சு இது காசு தாராங்கங்குறதுக்காக சோறு போடுற நிலத்த குடுக்கிறதா. உங்களுக்கு கிறுக்குகிறுக்கு ஏதும் புடிச்சுபோச்சா மடப்பசங்களா. அவன் குடுக்குற காச வச்சு எம்புட்டு நாளூடா உக்காந்து திங்க முடியும்.

அண்ணே அதுக்காக மழதண்ணிய எதிர்பார்த்து எம்புட்டு நாளைக்கு ஓட்ட முடியும் சொல்லுங்க.ஒங்களுக்கு என்ன அண்ணே நீங்க புள்ளைய கட்டிகுடுத்துட்டிய, மவனையும் படிக்க வச்சு வெளிநாட்டு வேலைக்கு அனுப்பிட்டிய நாங்க அப்படியா எங்க புள்ள குட்டிய பாக்கவேண்டாமா.

அதெல்லாம் சரிப்பா அதுக்காக நிலத்த குடுத்தா மட்டும் எல்லாம் சரியாகிடுமா.

சரிணே நா வாரேன் எனக்கு சோலிகிடக்கு.

முத்து சொல்லிட்டு போனதுல இருந்து பெரியசாமிக்கு மனசு கிடந்து தவிக்க ஆரம்பிச்சிட்டு உழவுற நிலத்த இப்படி குடுக்கபோறேனு சொல்லுறானேனு வருத்தப்பட்டாரு. ஆனா அவருக்கு அப்ப தெரியல நமக்கும் இதுதான்கதினு.

அரசாங்கம் நிலத்த எடுத்துகிட்டு அதுக்கான காச குடுக்கபோகுதுங்குற செய்தி காட்டுத்தீயா ஊரு பூராம் பரவுச்சு. பாத வர்ர வழில இருக்கு நிலத்துக்காரருக்குலாம் சந்தோஷம். பாதையவுட்டு தள்ளி இருக்குற நிலத்துக்காரவுகளுக்கு கொஞ்சம் வருத்தம் அந்த ஆண்டவன் நமக்கு மழத்தண்ணிய தான் காட்டலனு பாத்த இப்படி அரசாங்கம் எடுத்துகிற வாய்ப்பையும் குடுக்கலயேனு வாய்விட்டு புலம்புனாக.

எல்லாரும் பணத்தபத்தி யோசிக்கைல பெரியசாமி நிலத்த பத்தி நினைச்சு வருத்தப்பட்டாரு.

இரவு சாப்பாட்ட முடிச்சுட்டு படுக்கபோற சமயம் பெரியசாமி போனு அடிச்சது.

ஹலோ யாரு...,

ஐயா நா சரவணன் பேசுறேன்.

ஆங் சொல்லு சாமி எப்படி இருக்கயா

நல்லாருக்கேன் ஐயா நீங்க எப்படி இருக்கிய

இருக்கேன்யா. அத உடு மருமவ பேரப்புள்ளைங்க எப்புடி இருக்காங்க

எல்லாம் நல்லாருக்காங்கயா. நாங்க அடுத்த வாரம் ஊருக்கு வாரேம்யா.

அப்படியாய்யா சந்தோஷம்.

சரிய்யா நீங்க தூங்குங்க நா போன வைக்கிறேன் என்று இணைப்பை துண்டித்தான் பெரியசாமியின் மகன்.

புள்ளைங்கள பாத்து வருஷக்கணக்காவுது இப்பவாது வரணும்னு தோனுச்சே அதுவே சந்தோஷம் என்று நினைத்தபடியே கயித்துக்கட்டிலில் கண் அயர்ந்தார்.

விடியற்காலை பரபரப்பாக கிளம்பி கொண்டிருந்தார் பெரியசாமி. என்ன எங்கயோ விரசா போறாப்புல இருக்கு. அது ஒன்னுமில்லடே மவன் ஊருல இருந்து அடுத்த வாரம் வரப்போறான் அதான் கொஞ்ச பேரப்புள்ளைங்களுக்கு திண்பண்டமும், விளையாட்டு சாமானும் வாங்கலாம்னு டவுணுக்கு போறேன்.

அதானா பாத்தேன் என்னடா நம்ம பெரியசாமியா இது இப்புடி வெள்ளையும் சொள்ளையுமா காலங்காத்தாலே போறானேனு.சங்கதி இதுதானக்கும்.

அட ஆமாப்பா நாலுவருஷத்துக்கு அப்பறம் அந்த பய குடும்பத்தோட வாரான் இல்லைன்ன தனியா வந்துட்டு தனியா போயிடுவான்.அதான் பாத்து பாத்து வாங்கனும்ல.

சரிசரி நீ பாத்து போயிட்டு வா நா போறேன்.

ம்ம்...

சீனிசேவு, காராச்சேவு,கருப்பட்டி மிட்டாய் என பேரப்புள்ளைங்களுக்கு திண்பண்டமும் பேரனுக்கு தள்ளுவண்டியும், பேத்திக்கு கண்ணாடிவளவியும், கலர் போட்டும் என பட்டியல் போட்டு அனைத்தையும் வாங்கிமுடித்து வீடு வந்து சேர்ந்தார் பெரியசாமி.

சொன்னது போல பெரியசாமியின் மகனும் குடும்பத்துடன் வந்துசேர்ந்தான். அவன் வந்த மறுநாளே அவனின் தங்கை கனகவல்லியும் தன் குடும்பம் சகிதமாக வந்து இறங்கினால்.

பெரியசாமியின் மகிழ்ச்சிக்கு அளவில்லை கோவில் திருவிழா, குலதெய்வ வழிபாடு, உடல் நலக்குறைபாடு என எத்தனையோ தடவை அழைத்தும் வாராத மகனும் மகளும் கூப்பிடாமலே வந்து சேர்ந்ததை எண்ணி மகிழ்ந்தார் பெரியசாமி.

ஆத்துல குளிக்கறது, தோட்டத்துல சுத்துறதுனு வந்து ரெண்டுநாள பொழுத போக்குன சரவணன் மெதுவா பேச்ச ஆரம்பிச்சான் ஒரு நாளு.

ஐயா நம்ம வயக்காட்டலாம் அரசாங்கம் வாங்க போகுதாம்ல

ஆமாப்ப நானே உங்கிட்ட சொல்லனும்னு இருந்தேன்.சரி இப்ப தான வந்துருக்கு ஒரு வாரம் போகட்டுமேனு பாத்தேன். அதுக்குள்ள உங்கிட்டயும் சொல்லி புட்டானுங்களாக்கும் இந்தப்பயலுங்க.

அது ஒன்னுமில்லப்பா ஏதோ நாலுவழிச்சாலைக்கு இடம் வேணுமாம் அதுக்காக வயக்காட்ட கேக்குறாங்க. நா முடியாதுன்னு சொல்லிப்புட்டேன். இந்த முத்து பய இருக்கானே மொத ஆளாப்போயி நிலத்த குடுத்துட்டு பணத்த வாங்கிட்டு வந்துட்டான். மடப்பய சொன்னாலும் கேக்கல.

ஐயா நம்மளும் குடுத்தா என்னய்யா. இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி கிடந்து கஷ்டப்பட போறீங்க.

ஏலேய் என்ன வார்த்தை பேசுற. வெளிநாட்டுக்கு போயி நாலு காசு பாத்ததும் நமக்கு சோறுபோட்ட நிலத்த கூறு போட பாக்கியளோ நடக்காதுடே பாத்துக்க. பெரியசாமி குரல் உயரவும் அவரின் பேரன் ஓடி வந்து பார்க்க சுதாரித்த பெரியசாமி போய் படு காலைல பேசிக்கலாம் என்ற படி தன் கயித்துகட்டிலில் சரிந்தார்.

உறக்கம்வராமல் புரண்டு புரண்டு படுத்த பெரியசாமிக்கு மகனிடம் குரலை உயர்த்தியது அரிச்சலாகவே இருந்தது. விடிந்ததும் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று எண்ணியபடியே கண் அயர்ந்தார்.

மேலத்தெரு மாரிமுத்துவும் ஒரு தடவ நிலத்த குடுக்கசொல்லி கேட்டுப்பாத்தான் ஆனா மனுசன் விடாப்பிடியா நின்னுட்டாரு முடியாதுனு. நிறைய ஆபிசருங்க கூட வந்து கேட்டுபாத்தாங்க. ஆனா முடியாதுனா முடியாதுனு மறுத்துட்டாரு. ஏனா அவருக்கு இந்த நிலம் சோறு போடுற நிலம் மட்டும் இல்ல அதுக்கும் மேல குடும்ப பெருமை இந்த காசியப்பபுரத்துலயே ஐம்பதுஏக்கர் நிலம் வச்சுருக்குறவுக இவரு மட்டும் தான். கடலை, பயிறு,நெல்லு,கம்பு,சோளம்னு எல்லாமும் விதைப்பாக. பரம்பர பரம்பரயா விவசாயம் பண்ணுறவுக யாரும் உதவினு கேட்டு வாசலுக்கு வந்த வெறும் கையோடு அனுப்ப மாட்டாங்க.

பெரியசாமிக்கு நினைவு தெரிஞ்சதுல இருந்து வீட்டுல இருந்த விட வயக்காட்டுல இருந்தது தான் அதிகம்.கடலை போடுற சமயம் கடல ஓடைக்குறவங்க கூட உக்காந்து கடலை திண்ணே வயித்த நெறப்பாரு. அறுவடை முடிஞ்சு நெல்ல கொண்டாந்து அதுக்குன்னே இருக்குற பெரிய டிரம்ல போட்டு அவிக்கும் போது வருமே ஒருவாசம் அந்த வாசத்துக்காகவே அவிக்கிற இடத்துலயே கிடப்பாரு.

அவிச்ச நெல்ல குத்தி அரிசியாக்கி, வீட்டுதேவைக்கு எடுத்தது போக மிச்ச எல்லாம் விக்க சந்தைக்கு அனுப்பிடுவாக

நெல்ல எடுத்ததுக்கு அப்பறம் இருக்குற வைக்கோலுல குதிச்சு சண்டைபோட்டு திறிஞ்சதுலாம் ஒருகாலம்.இப்படி வயக்காடும் அது சார்ந்த வேலையும் கெதினு கிடந்த மனுசன் கிட்ட வயக்காட்ட குடு பணம்தாறோம்னா சரினு சொல்லுவாறாக்கும்

பொழுது விடிஞ்சதும் பெரியசாமி மவன தேடி போனாரு ஆனா அவன் அந்த ரூம்ல இல்ல. சுத்திமுத்தி தேடிபாத்தாரு தோட்டத்துல யாரு கூடயோ நின்னு பேசுறமாதிரி தெரிஞ்சது.

யாருன்னு பாக்க பெரியசாமியும் கிட்டபோனாரு. அன்னைக்கு வீட்டுக்கு வந்து பணம் தாறேனு சொல்லி நிலத்த கேட்ட ஆபிஸர் மாதிரி இந்தது. கிட்ட நெருங்க நெருங்க அது ஊர்ஜிதம் ஆனது.பெரியசாமிக்கு கோவம் ஏன் யா ஆபிஸரு நான் தான் அன்னைக்கே தெளிவா சொன்னேன்ல இப்படி மறுபடி மறுபடியும் வந்து தொல்லப்பண்ணுனா எப்படி.

ஐயா, கொஞ்சம் பொருங்க. அதான் நா பேசிட்டு இருக்கேன்ல.

இதுல பேச என்ன இருக்கு. முடியாதுன்னு சொல்லி அனுப்பு யா.

சரிப்பா நீங்க போங்க...,

பெரியசாமி வீட்டுக்குள் சென்றதும் என்ன மிஸ்டர் நிலத்த தரேன்னு சொல்லி அட்வான்ஸ் வாங்கிட்டு இப்ப ஏமாத்தலாம்னு பாக்கிய தூக்கி உள்ள வச்சுடுவேன் பாத்துக்கோ.

அப்பபடிலாம் இல்ல சார் எனக்கு கொஞ்சம் டைம் குடுங்க நா எப்படியாவது பேசி எங்க ஐயாவ வழிக்கு கொண்டுவாரேன்.

உனக்கு ஒரு வாரம் தான் டைம் அதுக்குள்ள பத்திரம் பதியனும் இல்ல உன்மேல கேஸ்போடுவேன் ஜாக்கிரதை. என எச்சரித்து விட்டு சென்றார் அதிகாரி.

கனகவல்லிக்கோ தன் அண்ணன் மீது கோவம் வந்தது.

நா எத்தன தடவ சொன்னேன். ஐயா இதுக்குலாம் ஒத்துக்க மாட்டாருனு நீ எம் பேச்சக்கேட்டியா. எல்லாம் சமாளிச்சிடலாம்னு சொன்ன இப்ப பாரு நிலத்த பத்தி பேசுனாலே ஐயா கோவப்படுறாரு இதுல எப்படி அவர சம்மதிக்க வைக்க.

நா என்னமோ எனக்காக மட்டும் இந்த முடிவ எடுத்த மாதிரி நீ பேசுற. நீயும் தான அன்னைக்கு சொன்ன நல்ல விலைக்கு நிலத்த குடுத்துட்டு ஐயாவ நா எங்கூட கூட்டு போறேன் பணத்த நாம ரெண்டுபேரும் பிரிச்சுக்கலாம். ஐயா இருக்குற வரைக்கும் நானே பார்த்துக்கிறேன்னு நீயும் தான சொன்ன. இப்ப நா மட்டும் தனிய முடிவு எடுத்த மாதிரி மாத்தி பேசுற.

அப்ப ஒரு வேகத்துல சொல்லிட்டேன். ஆனா இப்ப நினைச்சா பயமா இருக்கு ணா.

சரி பயப்படாத பாப்பா இராத்திரி சாப்பாட்டுக்கு அப்பறம் ஐயாக்கிட்ட பேசலாம் சரியா..,

ம் ம்..

ஐயா உங்க கிட்ட கொஞ்சம் பேசனும் என்று ஆரம்பித்தான் பெரியசாமி மகன்

என்னய்யா சொல்லு. ஊருக்கு கிளம்ப போறீயளா..,

இல்லையா..,

அப்பறம்...,

அதுவந்து நம்ம நிலத்த குடுக்குறத பத்தி...,

மகன் சொல்லி முடிக்கும் முன்னமே ஆவேசமானார் பெரியசாமி.

காலைலயே உங்கிட்ட நா என்ன சொன்னேன் இந்த பேச்ச இத்தோட உட்டுட்டு வேற சோலி கிடந்த பாரு போ என்றார் காட்டமாக.

இல்லையா

அதான் நா சொல்லிட்டேன் ல அப்பறம் என்ன.

ஐயா அதான் அண்ண பேசணும்னு சொல்லுதுல அது என்ன தான் சொல்ல வருதுன்னு கேளுங்களேன்யா.

பெரியசாமி மகனையும் மகளையும் பார்த்தார். இருவரும் ஏற்கனவே பேசிவைத்து முடிவை தன்னிடம் சொல்ல வந்திருப்பது நன்றாக புரிந்தது.அமைதியானார் பெரியசாமி.

கனகு தான் ஆரம்பித்தால். ஐயா இன்னும் எத்தன நாளைக்கு இப்படி கஷ்டப்பட போறீக. எங்களாலயும் அடிக்கடி இங்க வந்து உங்கள பாக்க முடியல. உங்கள அங்க வாங்கன்னு சொன்ன வயக்காட்டு சோலிய போட்டுட்டு எப்படி வாறதுனு சொல்லுறீங்க.

பேசாம இது குடுத்துட்டு எங்களோட வந்துருங்கய்யா. கடைசி காலத்துல பேரப்புள்ளைங்கள கொஞ்சிக்கிட்டு அதுங்களோட இருங்கய்யா.இதுக்கு மே சம்பாதிச்சு யாருக்கு குடுக்கபோறீக.

நா என்ன செய்யனும் செய்யக்கூடாதுனு சொல்லுற அளவுக்கு வளந்துட்டிங்களோ ரெண்டுபேரும். நா பாடுபடுறது உங்களாட்டம் காசுக்காக கிடையாது அத தெரிஞ்சுக்குங்க. இது என் குலசாமி பரம்பரை பரம்பரையா நாங்க பாக்குற சோலிய பணத்துக்கு விக்க சொல்லுதியலோ.

ஐயா உங்க காலத்துக்கு அப்பறம் நாங்க இங்க வந்து விவசாயம் பண்ணப்போறதில்லை அப்பறம் எதுக்கு அத குடுக்க மாட்டேனு சொல்லுறீங்க. இது வரை பேசிய எல்லா வார்த்தையும் காற்றில் பறந்தது. நாங்க இங்க வந்து விவசாயம் பண்ணபோறதில்லை என்ற வார்த்தை மட்டும் திரும்ப திரும்ப ஒலித்தது பெரியசாமியின் காதில்.

எதுவும் பேசாமல் சிலையானார் பெரியசாமி.

பின்ன முடிவு எடுத்துவிட்டு தகவல் சொல்பவர்களிடத்தில் என்ன பேச முடியும்.

இவ்வளவு நாள் வா வானு கூப்பிட்டுப் வராத பிள்ளைங்க வந்ததன் காரணம் புரிந்தது பெரியசாமிக்கு.

வழக்கம் போல கயித்துக்கட்டில்ல வந்து படுத்தாரு.

காலைல பேசிக்கலாம் பாப்பா இப்போ போனு சொல்லிவிட்டு தன் அறைக்கு சென்றான்.

என்ன சொல்லுறாரு உங்க அப்பா விக்க சம்மதிப்பாரா இல்லையா. இத வித்து வர்ற காச நம்பிதான் நாம புது பிளாட்டுக்கு அட்வான்ஸ் குடுத்துருக்கோம். அதனால இது வித்தே ஆகனும் புரிஞ்சுதா.

சரி சரி எல்லாம் எனக்கு தெரியும் நீ போ போய் படு.

ஆமா என்வாய அடக்க மட்டும் தான் முடியும் உங்களால

கனகோ தன் கணவனை ஏகத்துக்கும் முறைத்தபடி இருந்தாள்.

என்னடி என ஏன் இப்படி முறைக்கிற.

முறைக்காம உங்கள கொஞ்சுவாங்களாக்கும். நா எவ்வளவு சொன்னேன். எங்க ஐயா நிலத்த விக்க சம்மதிக்க மாட்டாருனு. நீங்க நான் சொல்ல சொல்ல கேக்காம எங்கண்ணன வேற ஏத்தி விட்டிங்க இப்ப பாருங்க. அய்யா முடியாதுனு ஒத்தக்காலுல இருக்காரு.

அடியேய் நா என்ன வித்த காச எனக்கு மட்டுமா எடுத்துக்க போறேன். மச்சானுக்கும் சேத்து தானே யோசிச்சு சொன்னேன். அப்பம் சரி சரினு சொல்லிட்டு இப்ப வந்து பௌம்புறவ.

அப்ப எப்படியாவது சமாளிச்சுடலாம்னு தோனுச்சு ஆனா இப்ப முடியாது மாமா.

அடி போடி எல்லாம் முடியும்.உங்களுக்கு பேசி காரியம் சாதிக்கதெரிலனு சொல்லு.

தூக்கம் வராமல் தவித்த பெரியசாமி வீட்டுக்குள் வர இவர்கள் பேசுவது காதில் விலவும் மனமுடைந்தார்

தன்னை பார்க்க வந்திருப்பதாக எண்ணி மகிழ்ந்தவருக்கு இது பெரிய வருத்தமாக இருந்தது.

பொழுது விடிந்தது வழக்கம்போல எழுந்து கன்றுக்கு பாலை காட்டிவிட்டு தொழுவத்தை சுத்தம் செய்யும் பெரியசாமி இன்னும் எந்திரிக்கவில்லை.

பதட்டத்துடன் அருகில்வந்த கனகு தன் அண்ணனை அழைத்தாள்.உடம்பு முழுக்க குளிர் பரவி ஜில் என்று இருந்தது. நாடிபார்க்கும் கிழவன் ஒருவன் வந்து இறப்பை ஊர்ஜிதப்படுத்த. இருவரும் செய்வதறியாது நின்றனர்.

கோவில் போல இருந்த மனுசன் இப்படி சாஞ்சுபுட்டாரேனு ஊரே வருந்த. தன் தந்தை மரணத்திற்கு காரணம் தாங்கள் என்ற குற்ற உணர்ச்சியில் தவித்தனர் இருவரும்.

இன்றோடு பெரியசாமி மறைந்து ஏழு நாட்கள் கழிந்திருந்தது. அட்வான்ஸ் வாங்கிய படியால் ஒப்பந்தத்தை மீறாமல் நிலத்தை வித்துவிட்டு தங்கள் இடங்களுக்கு பயணப்பட்டனர்.

தங்களுக்கு என்று இருந்த ஒரு இடமும் இல்லாமல் போன சோகத்தோடு இறக்க முடியாத பாரத்தோடு பயணப்பட்டனர்.

**கா. ந. கல்யாணசுந்தரம்**

## ஊர்வலத்தில் நானிருக்க வேண்டும்!

புதிரான உலகமிது அறிவேன்
புதுமையின் ஒளியாக மாறவேண்டும்
உதிராத மலர்களோடு பூத்துக் குலுங்கி
மற்றவர்களை மகிழ்விக்க வேண்டும்

வடிவமற்ற மேகங்களாக
நான் மாற வேண்டும்
நாள்தோறும் மழை தந்து
நிலத்தைக் குளிர்விக்க வேண்டும்

பொருள் பொதிந்த கவிதைகளோடு
நான் வாழ வேண்டும்
சொற்களற்ற வாழ்வு என்றாலும்
செயல் புரிந்து நடமாட வேண்டும்

நெடிதுயர்ந்த மரமானாலும்
நான் கிளைகளாகித் தாங்க வேண்டும்
வேர்பிடித்த மண்ணுக்குள்
உரமாகி இரண்டறக் கலக்க வேண்டும்

ஆற்றின் வெள்ள நீர் கரைபுரள
நான் நாணலாகி முத்தமிட வேண்டும்
தென்றல் தீண்டும் போதெல்லாம்
நாணித் தலை குனிய வேண்டும்

கனவுகளற்ற நிலமதில் ஆசையின்றி
நான் முளைத்திருக்க வேண்டும்
வினாக்களில்லா வீதிகளில் விடைகளின்
ஊர்வலத்தில் நானிருக்க வேண்டும்.




# மகாராசனின் நிலத்தில் முளைத்த சொற்களும் மீள் உருவாக்கமும்

கவிஞர் ராணி கணேஷ்

நிலத்தில் முளைத்த சொற்கள். நிலத்தில் பயிர்கள் தானே முளைக்கும். ஆனால் நிலத்திற்கென்றே சில சொற்களும் இருக்கத்தானே செய்கின்றன. அவை நிலம் சார்ந்த - உழவு சார்ந்த - உயிர் சார்ந்த சொற்கள். அப்படியானால் நிலத்தில் முளைத்த சொற்கள் யாவுமே நிலத்தை மையப்படுத்திதானே இருக்கும். ஆம் நிலம் சார்ந்த, மண்மணம் கமழும் கவிதைகள் தாம் இந்த ஐம்பத்தி ஐந்து கவிதைகளும். நிலத்தை இப்படியெல்லாம் உருவகப்படுத்தி கவிதை எழுத முடியுமா என்று ஆச்சர்யமாய் இருக்கிறது. உயிரை உணரும் தருணத்தில் வரும் மறு உயிர்த்தலை, மரித்துக் கொண்டிருக்கையில் திடீரென மீட்கப்படுவதை உணர்ந்தால்தான் அறியமுடியும். அப்படித்தான் இவர்தம் கவிதைகளை வாசித்து உணரவேண்டும். ஒவ்வொரு கவிதையையும் மீண்டும் மீண்டும் வாசிக்கத்தூண்டும் சொற்றொடர் கொண்டு தேர்ந்த சிற்பியின் கைப்பக்குவத்தில் வடித்துள்ளார். கருப்பம் கொண்ட பிள்ளைத்தாச்சியாய் உயிர்த்தலைச் சுமக்கின்றன நிலம் கோதிய மகாராசன் அய்யாவின் கவிதைகள்.

எழுதப்படாமலே போனது எனதூர்த் தலபுராணம் என்னும் சொற்களின் வேதனை நம்மையும் அசைக்கிறது. இப்படித்தான் எத்தனையோ கோவில்களும் சாமிகளும் நம்மைச் சுற்றிக் கவனிக்கப்படாமலும், களவு போய்க்கொண்டுமிருக்கின்றன. சாமி சப்பரம் ஏறி சுற்றி வரும்பொழுதாவது பார்க்கட்டும் தரிசாய்ப் போன நிலங்களையும், கண்ணீர் வறண்ட விவசாயியின் கண்களையும். முகமற்ற குறிகள் புணர்ந்து கிடந்த கருவறை என்பதைச் சிவன் கோவில் என்றே புரிந்து கொள்கிறேன். வளர்பிறையும் தேய்பிறையும் காலத்தில் கடப்பதை கருநாகம் சட்டை உரிப்பதில் அறியத்தருவதாய்க் கூறிச்செல்கிறார். பாம்புகள் சட்டை உரிக்கக் காலமுண்டா எனத் தெரியவில்லை. நாகமாணிக்கம் குறித்த பல்வேறு கதைகளைப் போல, பாம்பு உரித்த சட்டையை கண்ணால் காணும் வரை அதுவும் பொய்யாய் இருக்குமென்றே நினைத்திருந்தேன். தட்டான், பாம்பு, கெண்டை, நத்தை, தவளை என சிற்றுயிர்களோடு சேர்ந்தது தானே நிலம் சார்ந்த கிராம வாழ்க்கை. கவிதையின் உயிர்கள் எல்லாமே எனது பால்யத்தை ஞாபகப்படுத்துவதாய் இருந்தது.

'மண்மீட்டிய வேர்களின் இசை...' என்ன அழகான கற்பனை. மண்ணை நிலப்பெண்ணின் விரல்களாய் உருவகித்து, வீணையின் நரம்புகளென நீண்டு கிடக்கும் வேர்களை மீட்டுவதான கற்பனை இசை நம் செவிகளுக்குள்ளும் கேட்கத் துவங்குகிறது. 'நனைந்து பசப்படித்த நிலம்' இப்படியான சொல்லாடல்கள் தலை சாய்ந்து கிடக்கும் கதிர்களைப் போல பக்கங்கள் எங்கிலும் காணக்கிடைக்கின்றன. ஒன்றை ஒன்றாய் உருவகிப்பதும், அது பொருந்திப் போவதும், அதனை வாசகன் ஒவ்வொரு அர்த்தம் செய்து உணர்வதும், புதிய கோணத்தை யாரேனும் கண்டு கூறுவதும் கவிஞனுக்கு மகிழ்ச்சியான விஷயம் தானே.

மதுவைப்பற்றிய கவிதை மதுவின் பாவப்பட்ட முகத்தையும் கலங்கமற்ற கண்களையும் மீள் உருவாக்கம் செய்கிறது. மது, பாலச்சந்திரன் என சமூகத்தில் நடந்த கொடுமைகளைக் கவிதைகளின் வாயிலாகத் தட்டிக்கேட்கிறார். நல்ல கவிஞர் தன் சுக துக்கங்களை, தன் மன உணர்வுகளைக் கவிதைகளில் தான் பெரும்பாலும் வடிப்பார். அப்படி எழுதப்படும் எல்லாக் கவிதைகளையும் நாம் வாசிப்புக்கு வைப்பதில்லை. சிலநேரம் மனம்முண்டி எழுதியவற்றை முகநூலில் பகிரவோ, நண்பர்களுக்கு அனுப்பவோ செய்வோம். கவிஞரானவர் உணர்ச்சிகள் நிறைந்தவர். உடனே எதிர்வினையாற்றக் கூடியவர். அப்படித்தான் கவிஞர்.மகாராசனும் சமூகத்தில் நடந்த அக்கிரமங்களைக் கேள்வியெழுப்பிச் செல்கிறார். எல்லாமும் நிலம் சார்ந்தே திடமாய்ப் பரந்து நிற்கிறது.

நேற்றுதான் "செவ்வாய்க்கிழமை மதியத் தூக்கம்" என்ற திரு.சுகுமாரனது மொழியாக்கக் கதையை, விமலாதித்த மாமல்லன் அய்யா எழுதிய புனைவு என்னும் புதிர்ப் புத்தகத்தில் வாசித்தேன். அதிலும் அப்படித்தான், திருடன் என நம்பி சுடப்பட்ட மகனின் கல்லறைக்கு வரும் தாய் தன் மகன் குற்றவாளி இல்லை எனத் தீர்க்கமாய்க் கூறுவாள். அப்படியான சூழ்நிலையில் யாரோ செய்கின்ற செயலுக்கான / தவறுக்கான குற்றவுணர்ச்சி நம்மையும் பற்றிக்கொள்கிறது. நாமும் அதே மனித இனம் தானே. சமூகப்பொறுப்பு கொண்ட யாருக்குமே இந்த எண்ணம் வரத்தான் செய்யும். செய்யாத தவறுக்கு, தவறான புரிதலில் தண்டிக்கப்படும் ஆத்மாக்களை கடவுள் வேற்றுலகத்தில் என்ன சொல்லி வரவேற்பார்? ஒருவேளை இத்தனை மோசமான மனிதருக்கிடையே நீ இருக்கவேண்டாம் என்று கூறுவாரோ என்னவோ.

ஐந்தாவது கவிதையை, சுய ஆற்றுப்படுத்துதலைக் கவிதையின் வாயிலாகக் கண்டுக்கொள்ளும் தனியனின் சொற்களாய்ப் பார்க்கிறேன். மனிதர்களும் சிலநேரங்களில் நிலத்தில் துள்ளி விழுந்த மீனைப்போல மாண்டு போகின்றனர். மீன் நினைத்திருக்கக் கூடும் மறுபக்கம் பெருங்குளமொன்று இருக்கிறதென்று அக்கரைப்பச்சையென நம்பும் மனிதனைப்போல.

மலைத்தாய்ச்சி, வனத்தாள், வனத்தாய்ச்சி, மரத்தாய்ச்சி, நீர்முலைத்தாய்ச்சி, நீர்ப்பால்தாய்ச்சி, கடல்தாய்ச்சி, மலையாள் இப்படியான வார்த்தைகளை இன்றுதான் வாசிக்கின்றேன். பிள்ளைத்தாய்ச்சி போல வனத்தாய்ச்சியும், மலைத்தாய்ச்சியும் மரங்களோடு, மிருகங்களோடும் மனிதர்களையும் வரித்துக் கொள்கிறார்கள். சமயத்தில் கொல்கிறார்கள். அதைத்தான் இயற்கை அளிக்கும் தண்டனையாகக் கூறுகிறார் கவிஞர். காலத்தில் கரைதலும் வாழ்வின் நிமித்தமானது. நல்லதொரு சொல்லாடல். அப்படித்தான் வாழ்க்கை தன் பயணத்தைத் தொடர்கிறது எல்லோருக்குமாய்.

விவசாயி நிலத்தில் இறங்க மறுத்தால் வெண்பாதங்களின் கைகள் தொழுதாலே பற்றும் என்று சாடுவதுடன், உழைப்பாளியின் வேதனையைக் கொப்பளங்களின் வழியே அறியத் தருகிறார். கவிதையின் மென்சோகத்தைத் தாண்டி, நினைவின் இடுக்கு, அடை காக்கும் மவுனம், நினைவுக் காலடி, முளைத்த கனவுகள் இப்படியான வார்த்தை அடுக்குகளில் லயிக்கின்றது மனம்.

பதினேழாவது கவிதை அத்தனை அழகு. கூடாக்காதலின் நினைவின் பெட்டகமென விரியும் ஒற்றையடிப்பாதையில் ஒட்டிக்கொள்ளும் நாயுருவி முள் குத்தி வலிப்பதில்லை. நெருஞ்சி முள்ளை மட்டுமே பார்த்துப் பழகிய கண்களுக்கு காதலின் நினைவுகள் நெருஞ்சிப் பூவைப் போல அழகாய் தெரிகிறது.

வாழ்விழந்த விவசாயிகளின் வலியையும், வேதனையையும், கண்ணீர்க்கதையையும் நிலத்தில் முளைத்த சொற்களைக்கொண்டு தூவிச்செல்கிறார் ஏர் மகாராசன் அய்யா. மகிழ்ச்சியும், செல்வமும், செழிப்புமாக அவை தளைக்கட்டும் அவர்தம் வாழ்வில் என்ற வேண்டுதலைத் தவிர வேறு என்ன செய்யமுடியும் என்ற சிந்தனையை விதைக்கிறது அவரது சொற்கள். நிலத்தாளின் தொப்புள் உறவை எப்படி முறிக்க முடியும்? உணவளிக்கும் நிலமுடையான் கையேந்தும் அவலம் இனியாவது நிகழாமல் இருக்க வேண்டும். மறைமுகமாய்ச் சொன்னாலும் மறைக்கமுடியாத சரித்திரத்தின் மிச்சமென எஞ்சி நிற்கிறது விதைப்பிற்குக் காத்திருக்கும் நிலம்.

புயலைக்குறித்த கவிதை வயநாடு நிலச்சரிவையும் அம்மக்களின் நிலையையும் ஒத்திருப்பது சோர்வை அளிக்கிறது. இயற்கை அன்னையின் கோபத்துக்கு இரையாகும் பிஞ்சுகளுக்கு என்ன சொல்லி வழியனுப்புவோம்? சிலநேரம் மற்றவர் துன்பத்தை உணர்த்த ஒரு துன்பத்தைத் தருகிறாளோ என்று கவிதையின் வாயிலாக எண்ண வைக்கிறார். மனிதனால் வீடும் கூடும் இழந்தவர்களின் வலியை இயற்கை நமக்கு எப்பொழுதாவது உணர்த்திச்செல்கிறது. உணர்தல் முக்கியம். நாடற்றவர்களின் வலியை வீடற்றவர்கள் உணரக்கூடும் தானே! அகதிகளாய் வாழும் மக்களின் அவலநிலையை அவர்தம் வாழ்க்கையை கவிதைகளின் வரிகளில் பதிந்திருக்கிறார். சொந்த நாட்டில் இருந்து விரட்டப்படுவதும், இனப்படுகொலையும் இன்றும் ஏதோ ஒரு இடத்தில் நடந்து கொண்டே தான் இருக்கிறது. அண்டைய நாடுகளில் நடப்பதை கண்பொத்தி கடந்து போய்விடலாம், வெகுநாள் வேண்டியிராது அப்படி ஒரு துன்பத்தை எதிர்கொள்ள.

இந்திரர் அமிழ்தமே தான் இந்த மழை... ஒவ்வொன்றுக்கும் ஒரு வாசம் இருக்கிறது இல்லையா? நெற்பயிரோ, காய்ந்த ஓலையோ, தான்தோன்றிப் புற்களோ அவற்றிக்கான மணம், நெடுநாள் ஊடல் என்று குறிப்பிட்டு கார்காலமழையை, மழைதரும் மண்வாசனையை எல்லா வரிகளிலும் புகுத்தியிருக்கிறார். குளுமையை சொற்களில் பரப்பி ஜில்லிட வைக்க நிலத்தில் முளைத்திருந்தால் தானே முடியும்.

இருபத்தி ஏழாவது கவிதை கிராமங்களில் இன்றும் எங்காவது நடமாடிக்கொண்டிருக்கும் குடுகுடுப்பைக்காரனையும், கிராமத்தில் வாழும் குடும்பச்சியையும் குறித்தது, பின் நிலத்தையும். எல்லாக் கவிதைகளிலும் நிலத்தின் தொடுகை இல்லாமல் இல்லை. நிலம் சார்ந்தே எல்லாமிருக்கிறது. தரிசாய்ப் போன நிலத்தினை எண்ணி மாண்டு மண்ணுக்குள் போனவளும் கண்ணீர் வடிப்பாள் என்கிறார். விதைத்த நிலத்தை வெற்றிடமாய்ப் பார்க்கும் கொடுமை யாருக்கும் வரவேண்டாம். மறந்துபோன குடுகுடுப்பைக்காரனை நினைவுபடுத்துகிறது இந்தக்கவிதை. பெரிய மீசையுடன் முண்டாசு கட்டிக்கொண்டு வீட்டுவாசலுக்கு வந்து குறி சொல்வான். நல்லகாலம் பொறக்குது என்று சக்கம்மா வாக்கு சொல்பவனின் சொற்களை உள்ளிருந்தே கேட்டுக்கொண்டிருப்பார்கள். யாரும் அவன் முன்னர் வருவதில்லை. பெரும்பாலும் என்ன சொல்வானோ என்ற பயத்தோடே தான் கேட்பார்கள். மனோரீதியாக அவன் சொல்வது மனதைப் பாதிக்கும் என்றே நினைக்கின்றேன். ஒருமுறை பக்கத்து வீட்டில் முன் நின்று அங்கு ஒரு உயிர் பிரியப்போவதாகக் குறி சொல்லிச் சென்றான் ராப்பாடி. எதிர்வீட்டுப்பெண்ணும் அதைக் கேட்டு என்ன நடக்குமோ என்று தன் கவலையைப் பகிர்ந்தாள். மூன்றாம் நாளில் அந்த வீட்டில் முடியாமல் கிடந்த பாட்டி மரித்துப் போயிருந்தாள். இப்படியான சம்பவங்கள் போதுமாயிருந்தது அவன் மீதான பயத்தை நீட்டிக்க. ராப்பாடியும் குடுகுடுப்பைக்காரனும் ஒன்றில்லை என்றே நினைக்கின்றேன். ராப்பாடி சுடுகாட்டில் உருண்டு சாம்பலைப் பூசிக்கொண்டு அலைபவன். நடுராத்திரியில் தெருக்களில் அலைந்து பாடிவிட்டு, வாக்கு சொல்பவன். மண்டையோடுகளை மாலையாக்கி அணிபவன். காலையில் அரிசி வாங்க வருவான். மேலும் மாட்டோடு வருபவனையும் குடுகுடுப்பைக்காரன் என்றே சொல்வோம். பூம்பூம் மாட்டுக்காரன் குறி சொல்வதில்லை. நல்ல வார்த்தைகள் கூறி பாடல்கள் பாடி நேர்மறை எண்ணங்களை விதைக்கின்றான். மாடும் அவன் சொல்லும் நல்வாக்குக்குத் தலையை ஆட்டி ஆமோதிக்கும். இந்தக் கவிதை மறந்து போன ராப்பாடியை ஞாபகப்படுத்துவதாய் இருக்கிறது.

இருபத்தி எட்டாவது கவிதையில், வேனிற்காலமும் அம்மை நோயுமென நிலத்தின் வெம்மை சார்ந்த நோயினை வேம்பு மரத்தாய்ச்சி எப்படித் தீர்க்கிறாள் என்று சொல்லும் போதே பயந்து முடங்கிக் கிடந்த மனித இனமென நவீன வியாதியான ஒட்டுவாரொட்டி கொரோனாவை ஞாபகப்படுத்தி முடிக்கிறார்.

காதல் காமம் கொண்டும் கவிதை எழுதத் தவறவில்லை மகாராசன் அய்யா. காமமெனும் பெருந்தீயை அடக்கிக் காத்திருக்கும் பெண்ணைப் போல நிலமகள் ஏர் பதியக் காத்திருக்கிறாள் என்று சித்தரிக்கிறார். பசி, தாகம் போன்ற உணர்வு தானே காமமும். அதனை நிலத்திற்குக் கடத்தி, உழப்படாத நிலத்தின் தாகத்தை இறுதி வரிகளில் புரியத் தருகிறார். கைசேராமல் போகும் பொருந்தாக்காதலின் நினைவுகளைப் பெருந்திணைச் சொற்கள் மழையில் கரைவதாய் உருவகித்துக் கூறுகிறார்.

"நீ உதிர்த்துவிட்டுப் போன
மென்னகைப் பூக்களை
காயம்படாமல் கூட்டியள்ளி
மனச்சுருக்குப் பையில்
முடிந்து வைத்திருப்பதை
தெரிந்தும் வைத்திருந்தாய் "

மறைகாலத்தின் களவுப்பூ இந்த கவிதையில் வரும் இந்த வரிகள் தான் எத்தனை அழகு. இருவர் மட்டுமே அறிந்த உணர்ச்சி. அது ஈர்ப்பாகவும் இருக்கலாம், காதலாகவும் இருக்கலாம், ஆசையாகவும் இருக்கலாம். கூடாக்காதலின் வலியைக் கூட இதமான உணர்வாக வெளிப்படுத்தியிருக்கிறார். எத்தனையோ முறைப்பெண்கள் ஆசைப்பட்ட கல்யாணம் கைசேராமல் காணும் இடத்தில் கிண்டல் பேசியும், கண்களால் நலம் விசாரித்தும் மனதை ஆற்றிக் கொள்கிறார்கள். தனக்கு பேசிய மாப்பிள்ளை என்ற பெருமூச்சில் ஒளிந்திருக்கும், கொட்டிவிடமுடியாத மீள்காதல். இந்தக் களவுப் பூ வாடுவதுமில்லை, கசங்குவதுமில்லை. அப்படியே பூத்த தினத்தின் மணத்தோடும், குணத்தோடும் பூஞ்சிரிப்போடு வளைய வருகிறது.

கால்த்தடம் மறைந்த ஒற்றையடிப்பாதையின் வழி மறைந்தாலும் பாதை அங்கேயே தான் இருக்கும் நம் மூதாதையர்களின் கால் படிந்த மண்ணோடு. நாம் செய்யவேண்டியதெல்லாம் அடர்ந்த செடிகளை அகற்றிப் பாதையை கண்டுகொள்வது மட்டுமே... மனப்பறவை உதிர்க்கும் இறகுகளென நினைவுகள் உதிரத்துவங்கும் காலத்திலும் வாழ்தலின் நிமித்தமானது வேடிக்கை மட்டுமே பார்க்க வைக்கிறது. விளைநிலங்களைச் கொல்லும் அரசியல்வாதிகளையும் அவர்தம் உறவுகளையும் சாடுகிறார் கவிஞர்.

மலையாளின் குருதி கலந்த ஆற்றின் ஈரத்தில் கருவுரும் வயல் என்ற ஒப்பீடு எத்தனை அர்த்தகரமானது. தேன்சிட்டின் வாயிலாக வாழ்தலின் பக்குவத்தைச் சொல்லும் கவிஞர், வேர்களுக்கும் இலைகளுக்குமான காதலின் அத்தாட்சியாய் மலர்களை வர்ணிக்கிறார். இறகின் கனமும் பூவின் மணமும் அரும்பிடும் வாழ்க்கை இனிதுதான். கனமற்ற இறகுகள் பறப்பதற்கு ஏதுவானது. தன் வாழ்நாள் எல்லாம் வாசம் மட்டுமே பரப்பி, தேன் பகிர்ந்து, அழகாய் அரும்பிச் சிரிக்கும் வாழ்க்கை யாருக்குத்தான் பிடிக்காது?!

கவிஞர் ஏர் மகாராசனின் நிலத்தில் முளைத்த சொற்கள் களவு போன காணியை, இழவு காணும் குடும்பனை, வற்றிப் போன நதியினை, தரிசாய்க் கிடக்கும் பூமியினை, வறுமை, பசி, துக்கம், கண்ணீர் அத்தனையும் சட்டம் போட்டுக் காண்பித்தாலும் பூமியின் காதலை, காமத்தை, பேறுகாலத்தை, செழிப்பை, அழகை, அத்தியாவசத்தையும் சொல்லிடத் தவறவில்லை. சொந்தமண்ணைத் துறக்கும் அவலம் இனி யாருக்கும் வராது இருக்கட்டும்.

துரோகத்தின் நிழல் எந்த பொழுதிலும் படியாது இருக்கட்டும்.

ஒரு கவிதையில் வரும் வரிகளான, நினைக்க நீயில்லை; தலைதட்டவும் ஆத்தாளுமில்லை. இதில் தலைதட்ட ஆத்தாளுமில்லை என்றிருந்தால் இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும் என்று எண்ணினேன். மொழிப்பெயர்ப்பு செய்ய வேண்டிய முக்கிய கவிதைகள்தாம் இந்நூல். கொஞ்சம் கடினமான பணியாக இருக்கலாம். கவிஞர் கண்டுபிடித்த புதிய அம்மைகளை எந்தப் பெயர் கொண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பார்கள் என்று அறிய ஆவலாய் இருக்கிறேன். கட்டுரை, ஆய்வு என்று களமாடிக்கொண்டிருக்கும் ஏர் மகாராசன் அய்யா கவிஞராகவும் மிளிர்கிறார். இன்னும் இன்னும் கவிதைகள் இயற்றுங்கள். மறைந்து போன சொற்களை மீள் உருவாக்கம் செய்யுங்கள். புதிய சொற்களை உங்கள் அறிவு நிலத்தில் இருந்து அறுவடை செய்யவும், அந்நெல்மணிகளை எல்லோரும் உண்டு களிக்கவும் புதிதாய் எழுதிக்கொண்டே இருங்கள். கவிதைநிலம் மிகச்செழிப்பாக இருக்கிறது. வார்த்தைத் தேர்வுகள் அழகு.

வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். நன்றி!

நிலத்தில் முளைத்த சொற்கள், மகாராசன், முதல் பதிப்பு,மே2024, யாப்பு வெளியீடு, சென்னை, பக்கங்கள் - 112, விலை: ரூ100/- புத்தகம் தேவைக்குப் பேச : 9080514506

❍

**கவிஞர் ராணி கணேஷ்**


கட்டுரையாளர் : கவிஞர் ராணி கணேஷ், துணை ஆசிரியர், தமிழ்வெளி இதழ். பப்புவா நியு கினியா.

பப்புவா நியு கினி இந்திய சங்கத்தின் துணைத்தலைவர். பப்புவா நியு கினி தமிழ்ச்சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவர். கதை, கவிதை, புத்தக மற்றும் திரைப்பட விமர்சனங்களை எழுதி வருபவர்.


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாதி - 2022


ஆவணி
2024
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி - 2023


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2023

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2024


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023


காற்றுவெளி
ஆனி - 2024
கலை இலக்கிய இதழ்
அகஸ்தியர்
சிறப்பிதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதை சிறப்பிதழ்
ஆனி - 2022